31

# புகழ்பெற்ற பத்திரிகையாளர்கள் கருத்துக்கு: மறுப்புக் கட்டுரைகள் எழுதுவது எப்படி?



புலவர் என்.வி.கலைமணி, எம்.ஏ.

வள்ளலார் நூலகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

புகழ்பெற்ற பத்திரிக்கையாளர்கள் கருத்துக்கு :

# மறுப்புக் கட்டுரைகள் எழுதுவது எப்படி?

(இதழ் இயல் துறைப் பயிற்சி பெறுவோருக்குச்
சில எடுத்துக் காட்டுகள்)

**புலவர். என்.வி. கலைமணி, எம்.ஏ.,**

**வள்ளலார் நூலகம்**
34, பார்த்தசாரதி நகர், 2வது தெரு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

# நூல் விளக்கம்


| | |
|---|---|
| நூலின் பெயர் | : மறுப்புக் கட்டுரைகள் எழுதுவது எப்படி? |
| ஆசிரியர் | : புலவர் என்.வி. கலைமணி, எம்.ஏ., |
| மொழி | : தமிழ் |
| பதிப்பாளர் | : புலவர் என்.வி. கலைமணி |
| பொருள் | : கட்டுரையியல் |
| உரிமை | : ஆசிரியருக்கே |
| முதற்பதிப்பு | : டிசம்பர், 2002 |
| நூலின் அளவு | : 1/8 கிரவுன் |
| நூல் வெளியீடு | : வள்ளலார் நூலகம்,<br>சென்னை-600 088.<br>பேசி : 22554084 |
| எழுத்து | : 11 புள்ளி |
| பக்கங்கள் | : 96 |
| பைண்டிங் | : கார்டு போர்டு |
| விலை | : ரூ. 20.00 |
| ஒளி அச்சு மற்றும் அச்சிட்டோர் | : லேசர் இம்ப்ரெஷன்<br>செனாய் நகர்,<br>சென்னை-600 030.<br>தொலைபேசி : 2646 0021 |

# பதிப்புரை

1935-ஆம் ஆண்டு! கரந்தை தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழா மாநாடு! மூன்று நாட்கள் நடந்தது. அந்த மாநாட்டின் தலைவர் மறைமலையடிகளார். மாநாட்டில், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், நாவலர் வேங்கடசாமி நாட்டார், சோழவந்தான் அரசன் சண்முகனார், ஞானியாரடிகள் போன்ற மேதைகள் எல்லாம் பங்கேற்று ஞானவுரை ஆற்றினார்கள்.

மாநாட்டின், இறுதி நாளன்று மறைமலையடிகளார், ''தனித் தமிழ் வளர புலவர்கள் வழிகாட்ட வேண்டும்'' என்று, தனது முடி வுரையை ஆற்றிக் கொண்டிருந்தார், பண்டிதமணி குறுக்கிட்டு மறுப்புக் குரலை எழுப்பும்போது, 'ஜலம்' என்ற சொல்லில் 'ஜ' எழுத்தை அகற்றிவிட்டு 'சலம்' என்று எழுதினால் தனித் தமிழ் வளர்ந்து விடுமா! 'பூஜை' என்ற சொல்லில் 'ஜ'வை நீக்கி பூசை என்று கூறுவதுதான் தனித் தமிழ் இயக்கமா?'' என்றார்.

அருணகிரி நாதர் 'ஜலமொடு பூவும் சேர்ந்து பூஜை செய்தறியேன் என்றார்? அவர் தனித் தமிழ் இயக்க விரோதியா? குமரகுருபரர் 'சலாம்' என்ற சொல்லை ஆட்சி செய்துள்ளார். அவர் தனித் தமிழ் பகைவரா? என்று ஆவேசத்தோடு மறைமலையடிகளார் பேச்சை மறுத்தார்.

உடனே மறைமலையடிகளார், ''யானை வழுக்கி விழுந்தால் கூட; அதற்குத் தான் பெருமை! அதற்காக, நாமும் தெரிந்தே விழலாமா? எதிர்கால மக்களால் எழ முடியுமா?'' என்று பண்டிதமணி கருத்தை மறுத்து, தனது கருத்தை அடிகளார் வெளியிட்டார்.

எனவே, ஒரு செயலில் விருப்பு, வெறுப்பு, விரோத குரோதம், கோப-தாபங்கள் என்ற கருத்து வேற்றுமை எழுவது இயல்புதான். ஆனால், எதிர்ப்பை எழுப்புவோரை மறுத்து எழுதும் ஆற்றலை வளர்த்துக் கொள்வது தனி மனித அறிவும், பத்திரிகையாளர் திறமையுமாகும்.

மறுப்புக் கட்டுரை எழுதும் இன்றைய பத்திரிகையாளர் களுக்கு இந்த நூல் பலனுள்ளதாக இருக்கும்; பல சம்பவங்களை நினைவில் பதிக்கும் என்று எண்ணியே இந்த நூலை வெளியிட்டுள்ளோம். பத்திரிகையாளர்கள் மட்டுமல்லர், தனி மனிதர்களுக்கும் இந்த நூல் பயன்படும். எனவே, படித்து பயன்பெற்று, ஆதரவு வழங்க வேண்டுகிறோம்.

அன்புடன்
**வா. அறிஞர் அண்ணா**

## எழுதியவன் எண்ணம்

மறுப்புக் கட்டுரைகள் எழுதுவது என்பது, பத்திரிகைத் துறையிலே ஒரு வகை. இதற்கு அரசியல், ஆன்மிகம், இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம் மற்றும் பொது அறிவு உணர்வுகள் தேவை.

இந்த வகைக் கட்டுரைகள் எழுதுவதற்கு புகழ் பெற்ற எழுத்தாளர்களே நமக்கு வழிகாட்டிகளாக அமைந் துள்ளார்கள்.

வட நாட்டிலே பன்மொழி மேதையாக வாழ்ந்த இராஜா ராம் மோகன்ராய், தனது பத்திரிகைகளான "தி பிராமணிக்கல் மேகசின்", "சம்வாத கௌமதி" என்ற வங்க மொழி ஏடு களாலும், 'மிராத் - உல் அக்பார்' என்ற பார்சி மொழி இதழாலும்; "இந்து மதத்திலுள்ள உருவ வணக்க வழிபாடு" முறைகளை எதிர்த்தும், "இயேசு நாதர் தீர்க்கதரிசியே தவிர, கடவுளல்ல" என்ற கொள்கைக்காக கிறித்துவர்களைக் கண்டித்தும் எதிர்த்தும் 1815-ஆம் ஆண்டு முதல் 1825-ஆம் ஆண்டுகள் வரை போராடி அவற்றின், உண்மைகளை உலகுக்கு உணர்த்தியுள்ளார்.

அதற்குப் பிறகு, வள்ளல் பெருமான் வாழ்ந்த காலத்தில், 1867-ஆம் ஆண்டு முதல் 1874-ஆம் ஆண்டு வரை, யாழ்ப் பாணம் ஆறுமுக நாவலர் பெருமான், வள்ளலார் பாடல்கள் அருளால் பாடப்பட்ட 'அருட்பா" பாடல்களல்ல. மருளால் பாடப்பட்ட மருட்பாக்கள் என்று ஆன்மிகத் துறையில் தனது எதிர்ப்பை எழுப்பி, கடலூர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, மேடை தோறும் வாதப் போர் செய்தும், தமிழ்நாட்டில் மருட்பா அணி என்ற ஓர் அணியை உருவாக்கி, மறுப்புக் கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் அணியின் சார்பாக, மாமண்டூர் தியாகேச முதலியார், ''போலி அருட்பா மறுப்பு'' என்ற மறுப்புக் கட்டுரையை நூலாக வெளியிட்டார்..

அதை எதிர்த்து, ''போலி அருட்பா மறுப்புக்கு, மறுப்பாக வள்ளலாரின் தலைமை மாணவரான தொழுவூர் வேலாயுத முதலியார் ''போலி அருட்பா மறுப்பின் கண்டனம் அல்லது குதர்க் காரண்ய நாச மகா பரசு''என்ற கட்டுரையை மறுப்புக் கட்டுரை நூலாக வெளியிட்டார்.

இந்த மறுப்புகளும், வாதப் போர்களும், நீதிமன்ற விசாரணைகளும், இரண்டு அணிகள் சார்பாக, வள்ளல் பெருமான் மறைவு வரை நடந்த முதல் கட்ட ''அருட்பா - மருட்பா'' போராகும்.

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் சார்பானவரான பண்டித ந. கதிரை வேற்பிள்ளை, இரண்டாம் கட்ட 'மருட்பா' போரைத் துவக்கினார். அவர் அணி சார்பாக, ''இராமலிங்கம் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம்'' என்ற மறுப்புக் கட்டுரை நூலாக வெளிவந்தது.

இந்த 'மருட்பா' கட்டுரையை எதிர்த்து, ம.தி. பானுகவி என்கின்ற அருட்பா அணியினர், ''இராமலிங்கம் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் கண்டன நியாய வஜ்ஜிர குடாரம்'' என்ற மறுப்பை நூலாக வெளியிட்டார்.

இதை எதிர்த்து, ''கேள்விகளுக்கு மறுப்பு'', ''குற்சிதம் கண்டனம்'', தீய நாவுக்கு ஆப்பு'' என்ற நூலை மருட்பா அணியினர் மறுப்புக் கட்டுரை நூற்களாக வெளியிட்டார்கள்.

மருட்பா அணியினர் கருத்துக்களை அருட்பா அணியினர், மறுத்து, ''குற்சிதம்'', குற்சித கண்டன திக்காரம், வஜ்ஜிரடாங்கம்'' என்ற மறுப்புக் கட்டுரைகளைப் புத்தக வடிவுகளிலே அறிக்கைகளாக வெளியிட்டனர்.

வள்ளல் பெருமானுடைய, 'அருட்பா' அணிக்கு தளபதிகளாக நின்று சொற்போர் களம் கண்டவர்கள், மறைமலையடிகளாரும், சதாவதானி செய்குத் தம்பிப் பாவலரும் ஆவர்.

இவ்வாறு, 19-ஆம் நூற்றாண்டில் வெளிவந்த மறுப்புக் கட்டுரைகளுக்குப் பிறகு, 20-ஆம் நூற்றாண்டில், அதாவது 1935-ஆம் ஆண்டுக்குப் பிறகு, தந்தை பெரியார் தேசிய முகாமை விட்டு வெளியேறி, இந்திய தேசிய அணியினர் தன்னைப் பற்றிக் கூறி வந்த கருத்துக்களை மறுப்பதற்காக, ''குடியரசு'', என்ற வாரப் பத்திரிகையைத் துவக்கி, அதில் தனது மறுப்பு, மறுப்புக்கு எதிர்ப்பு, எதிர்ப்புக்கு மறுப்பு என்ற கட்டுரைகளைத் தீட்டினார்.

தேசிய அணியின் எழுத்துச் சிற்பியாக அப்போது விளங்கிய திரு.வி.க. அவர்கள், தந்தை பெரியாருக்குரிய மறுப்புக் கட்டுரைகளை '' நவசக்தி, தேச பக்தன்'' என்ற ஏடுகள் மூலமாக வெளியிட்டு தேசியக் கருத்துக்களுக்கு அரணாக அமைந்தார். தந்தை பெரியார் எண்ணங்களைத் தீவிரமாக மறுத்து அவர் எழுதி வந்தார்.

அதற்குப் பின்பு, திராவிடரியக்கம் கண்ட பெரியார், 'விடுதலை' என்ற நாளேட்டைத் துவக்கினார். தினந்தோறும் 'குத்தூசி' என்ற கட்டுரைகளை அந்த ஏட்டிலே குத்தூசி குருசாமி மூலமாக எழுதி சனாதனிகளையும், தேசிய அணிகளையும் மறுத்துச் சாடினார்.

தந்தை பெரியாருக்கு ஆதரவாக, அறிஞர் அண்ணா 'திராவிட நாடு' என்ற வார இதழைத் துவங்கி மறுப்புக் கருத்துக்களைக் கட்டுரை வடிவிலே வடித்தார். அவரைத் தொடர்ந்து ''முரசொலி'' நாளேடு முழுக்க முழுக்க தேசிய அணியினரை மறுத்துக் கட்டுரைகளை எழுதி, ஒரு விழிப்புணர்வு அரசியலை நடத்தி வந்தது - இந்தி எதிர்ப்புப் போர் நடந்தபோது, தமிழ் எல்லையில் 'அது கடுமையான

மறுப்புக் கட்டுரைகளை வெளியிட்டு மக்கள் உணர்ச்சியை எடுத்துக் காட்டிற்று.

'மாலை மணி' என்ற நாளேட்டில் தொடர்ந்து வெளிவந்த 'எரியீட்டி' கட்டுரைகள், அரசியல், ஆன்மீகம், இலக்கியம், வரலாற்றுத் துறைகளிலே எதிர்ப்புக் குரல்களை எழுப்பி வந்த கடிதம், நவசக்தி, ஜெயபேரிகை, தமிழ்ச் செய்தி, நாத்திகம், போன்ற தேசிய ஏடுகளுக்குக் கடுமையான மறுப்புக் கட்டுரைகளை எழுதி, தமிழ்நாட்டு அரசியலில் ஓர் அதிரடி அதிர்ச்சிக் கொந்தளிப்பை உருவாக்கியது.

1967-ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் ஆட்சியைப் பறிகொடுத்தோரும்; ஆட்சியைப் பறித்தோரும் பத்திரிகைப் போர்களில் களம் கண்டு எதிர்ப்புக் கட்டுரைகளை எழுதும் நிலை வந்தது. இந்த உணர்ச்சிகள் அன்றைய தமிழ்நாட்டின் அரசியலை எதிரொலித்தன எனலாம்.

மீண்டும் "நவசக்தி" ஏடு தொடர்ந்து தனது எதிர்ப்புக்களை நாள்தோறும் எழுப்பி நர்த்தனமாடியது. "கடிதம்" என்ற ஏட்டில் கவிஞர் கண்ணதாசன் தனது முழு எழுத்துக் கனற்சக்தியை எதிரொலித்தார். 'ஜெயபேரிகை'யில் ஜெயகாந்தன் பேரிகை ஒலிகளை எழுப்பினார்.

இவ்வாறு, இருபதாம் நூற்றாண்டு பத்திரிகை உலகத்தின் ஓர் அணி, எதிர்ப்புகளை எழுப்பி இலக்கிய அறிஞர்களை, அரசியல்வாதிகளை, பேராசிரியர் பெருமக்களை, இலக்கிய படைப்பாளிகளை விமர்சிப்பதும், அவற்றை மற்றோர் அணி மறுப்புக் கட்டுரைகளை எழுதி பதிலளிப்பதுமான ஒரு கொந்தளிப்பு, 1967 முதல் 1969 வரை, கடுமையாகக் காணப்பட்டது. அந்த மூன்றாண்டு கால மறுப்புகளில் சில மட்டுமே இந்த நூலில் விளக்கப்பட்டுள்ளன.

தற்போது, அரசு நிர்வாகத்தையும், அதன் அலங்கோலங் களையும், எதிர்த்தும், மறுத்தும் 'துக்ளக், ஆனந்தவிகடன்,

குமுதம், கல்கி, ரிப்போர்ட்டர், ஜூனியர் விகடன் போன்ற பத்திரிகைகள், அதனதன் கருத்துக்களை எழுதி வருகின்றன. ஆனால், அரசியல்வாதிகள் ஒரு சிலரின் தன்னாதிக்கக் கோட்பாடுகளை, ஊழல் விவரங்களை சில ஏடுகள் எதிர்த்தும், மறுத்தும் கட்டுரைகள் வெளியிட்டு வருகின்றன. அவற்றுள் 'நக்கீரன்' வார ஏடும் ஒன்று.

பத்திரிகைகளில் மறுப்புக் கட்டுரைகள் எழுதப் பயிற்சி பெறுவோர்க்கு, அரசியல் அனுபவங்கள், இலக்கியம், வரலாறு, ஆன்மிக நுண்ணறிவுகள், செஞ்சொற்கள் செறிந்த இலக்கியத் தமிழ்நடை ஆராய்ச்சி உணர்வுகள் ஆகிய திறமைகள் தேவை.

அத்தகைய அறிவாளர்களது, மறுப்புக் கட்டுரைகளை மக்கள் விரும்பிப் படிப்பார்கள். அதனால், அந்த மறுப்புப் பத்திரிகைகளுக்கு மரியாதையும், எழுதுவோருக்குச் சிறந்த புகழும் தோள் தட்டித் தேடி வந்து நிலைபெறும்.

இந்த நூல், இதழியல் துறையின் இளைய தலைமுறை யினர்களுக்கு, மேற்கண்ட பயன்களை வழங்கும் என்று நம்புகிறோம். பத்திரிகைத் துறையில் பணியாற்றுவோருக்கு ஓரளவு உறுதுணையாக விளங்கும் என்பது நமது எண்ணம். படித்துப் பாருங்கள்! பயனுடையாதாக இருந்தால் பலன் பெறுங்கள்.

அன்பன்

**என்.வி. கலைமணி**

# உள்ளே உள்ளவை

பக்கம்

"Imitation' காந்திக்கு சிலையாம்
ஜெயகாந்தன் - ''ஜெய பேரிகை''யில்
வெளியிட்ட கட்டுரைக்கு மறுப்புக் கட்டுரை .................... 11

"Madras Mail" ஆசிரியர் கடிதம் பகுதியில்
வெளியிட்ட ஒரு வாசகர் கடிதத்திற்குப்
பதில் கட்டுரை ........................................................ 26

'உலகத் தமிழ் மாநாட்டில்' கவிஞர் அப்துர் ரகுமான்
பாடிய கவியரங்கம் கருத்தை எதிர்த்து எழுதிய
பத்திரிகைகளுக்கு மறுப்புக் கட்டுரை ............................ 45

'கவிஞர் அப்துர் ரகுமான்' பாராட்டு ............................. 57

''கலைஞர் கருணாநிதி'' சிலப்பதிகாரக் காப்பியம்
''தமிழுக்கு நேர்ந்த அவமானம் ''என்ற
எதிர்ப்புக்கு மறுப்புக் கட்டுரை ........................................ 59

''கடிதம்'' நாளேட்டில் டாக்டர் மு.வரதராசனார்
கருத்தை எதிர்த்து 'கவிஞர் கண்ணதாசன்'
எழுதிய கட்டுரைக்கு மறுப்புக் கட்டுரை ......................... 72

## ஜெயகாந்தன் - ‘‘ஜெயபேரிகை’’

# "Imitation" காந்திக்கு சிலையாம்!

அறிவுலக மேதை அறிஞர் அண்ணா அவர்களுக்கு சென்னை மவுண்ட் ரோடில், அதாவது அண்ணா சாலையில், திருஉருவச் சிலை ஒன்று திறக்கப்பட்டது.

அந்த சிலை, புரட்சி நடிகர் திரு. எம்.ஜி.இராமச்சந்திரன், எம்.எல்.ஏ., அவர்களது சொந்த செலவிலே அமைக்கப்பட்டது.

நிறுவப்பட்ட சிலையைக் கேலி செய்யும் நிலையில், ‘ஜெய பேரிகை’ என்ற நாளேட்டின் ஆசிரியரான திரு.ஜெயகாந்தன் அவர்கள், 10.12.1967ஆம் நாளன்று தனது நாளேட்டில், அறிஞர் அண்ணா அவர்களை விமரிசனம் செய்துள்ள கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

‘‘அறிஞர் அண்ணா அவர்களுக்கு சிலை ஏன்?’’ என்ற நோக்கில் எழுதப்பட்ட கட்டுரை அது!

சிலை வைக்கின்ற அளவிற்கு அவர் தகுதியற்றவர் என்ற மன அரிப்பு - அக்கட்டுரை எழுத்துக்களிலே ஊறல் எடுத்துக் கொண்டிருந்தது!

கட்டுரையிலுள்ள மனப்புண் மணக்கும் துர்மன வினாக்களில் சில இவை!

''இந்த அண்ணாதுரை, தமிழில் எதைச் சாதிக்க முடியாதவற்றைச் சாதித்தார்?''

''அப்படியென்ன தமிழில் இலக்கியங்களை எழுதிவிட்டார்?''

''பெரிய பேச்சு பேசி விட்டார்?''

''தமிழுக்கு சேவை செய்தவர்கள், வேறு பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் இல்லையா?''

- 'ஜெயபேரிகை' 10.12.1967

என்று எழுதியவர், எழுத்தாளர் திரு. ஜெயகாந்தன் அவர்கள் ஏட்டில், தூத்துக்குடி தங்கப்பழம் என்பவர் ஆவார்.

ஓர் ஆசிரியர், பொறுப்புடைய எழுத்தாளர் திரு. ஜெயகாந்தனைப் போன்றவர்கள், இந்த மக்கட் துரோகிகளுக்கு உடந்தையாக இருக்கலாமா?

அல்லது இரண்டு கூட்டுறவு அரிப்புகளுமே இணைந்து சொரிந்து கொண்ட கட்டுரையா அது?

மனித சமுதாயத்தில், பல ஜென்மங்களைப் படைத்துவிட்ட இயற்கையை, இந்த நேரத்தில் கோபப்பட்டு, சில கேள்விகளை என்னால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

எல்லாம் வல்ல சக்தி, இதுபோன்ற புத்தியற்றதுகளைப் படைப்பதற்குத் தனது வல்லமையைக் காட்டுமானால், ''அந்த சக்தி அறிவானந்தத்தில் இருப்பதாக, அறிவாளர், விவேகானந்தரே'' கூறினாலும், அதை எதிர்த்தாக வேண்டியவனாக இருக்கிறேன்!

''அண்ணாதுரை அப்படியென்ன இலக்கியம் செய்துவிட்டார்? என்று கேட்கிற அஞ்ஞானப் பிழம்பே...!''

அவர் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் இலக்கியச் சுவை சுரக்கும் கனிகள் என்பதை, நீ எப்படி அறிவாய்?

ஞானத் திரட்சி இருந்தால் அல்லவா - அவற்றின் மோனச் சுவை உணர்ச்சிகள், உம் அறிவில் எதிரொலிக்கும்?

"அண்ணாதுரை எழுதிய கம்பரசம், குமரிக்கோட்டம், ஆரிய மாயை, வேலைக்காரி, ஓரிரவுகளா இலக்கியங்கள்?" என்று கேட்கும் எழுத்தர்களே!

இந்த இலக்கியங்களைப் படித்துப் படித்து இரவென்றும் - பகலென்றும் கூட நீங்கள் பாராமல், அறிஞரேறு அண்ணாவின் பாத கமலங்களுக்கு ஒரு கால கட்டத்தில் பூவாபிஷேகம் செய்தீர்களே! அதை இன்று மறந்து விட்டீர்களா?

அவ்வாறு செய்த ஒன்று கடலூரில்! மற்றொன்று தூத்துக்குடியில்! இது பழைய பல்லவியல்லவோ?

அந்த இலக்கியங்களையெல்லாம் ஒரு காலத்தில் உமது சிந்தனைக் கூடங்களிலே, விக்கிரகங்களாக வைத்து, இலக்கிய ஞானம் பெற்றதைச் சற்றே நினைத்துப் பாரும் - பிள்ளைகாள்!

ஏ - தங்கப் பழமே! நீர், தமிழ்நாட்டில் தங்கப்பழம் என்று காலடி எடுத்து வைத்திடக் காரணமாக இருந்தவையே - அந்த இலக்கியங்கள்தாம் என்பதைக் காலம் அறியும்! நீர் இருந்த கட்சி புரியும்!

ஏன், கட்சி மாறா நாணயவாதிகள் அதை நன்குணர்வார்கள்! - ஊரறியும்! நாடறியும்! உமது உற்றமும் - சுற்றமும் உணருமே!

"கம்பரசம்", - கம்பராமாயணத்திற்கு எழுதப்பட்ட ஒரு விமரிசன நூல்!

"குமரிக்கோட்டம்" ஒரு சிறு நாவல்! சமுதாயத்தைச் சீர்திருத்தும் ஒரு குறுங்கதை!

"ஆரிய மாயை" - வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் கருத்துத் தொகுப்பு!

அறிஞர் அண்ணாவினுடைய தமிழ் நடையால் - அது ஒரு தாழ்ந்த சமுதாயத்தையே படம் பிடித்துக் காட்டுகின்றது!

"வேலைக்காரி, ஓரிரவு" - நாடக உலகத்தின் திருப்பங்கள்!

"கல்கி, எஸ்.டி.சுந்தரம்" போன்ற அறிவாளர்களால் வலிந்து பாராட்டப்பட்ட சமுதாய மறுமலர்ச்சி நாடகங்கள் அவை! மறந்து விட்டீரா அதை?

இவை அனைத்தையும் சங்க இலக்கியங்கள் என்று கூற நான் முன்வரவில்லையே!

இலக்கியம் படைக்கும் ஆற்றல் - கவிஞனுக்கு மட்டுமே கை வந்த கலை!

அறிஞர் அண்ணா அவர்கள், சிரம் பழுத்த ஓர் அரசியல்வாதி!

அவரிடத்தில் சங்க இலக்கியத்தை மட்டும் எதிர்பார்ப்பவன் - ஒரு மறுமலர்ச்சி சமுதாயத்தை உருவாக்க நினைப்பவனின் கடமை அல்ல!

அவர், தமிழகத்திலே இருக்கின்ற சாகா இலக்கியங்களைக் காப்பாற்றுபவர்! அவற்றிற்குப் புதுக் குருதி பாய்ச்சுபவர்!

தமிழ்நாடு என்ற பெயர், இலக்கியத்தில் இல்லையே என்று பேசுகின்ற கல்லாக் களி மக்களின் கவனத்தைத் தவிடு பொடியாக்கி, தமிழ்நாடு என்று தன் தாயகத்துக்குப் பெயர் சூட்டியவர் அண்ணா!

"அண்ணாதுரை அப்படியென்ன பெரிய பேச்சு பேசி விட்டார்?" என்று கேட்கும் திரு. ஜெயகாந்தன் ஏடே!

அறிஞர் அண்ணாவின் பேச்சுதான், அகில இந்தியக் காங்கிரசின் தமிழ்நாட்டுக் கிளையை முறித்தெறிந்த ஆற்றல்மிக்கக் கோடாரியாக அமைந்தது! மறுக்க முடியுமா உம்மால்?

அந்த மேதையின் "நா" வன்மைப் பேச்சுக்களை, மெய் மறந்து கேட்ட அறிவாளிகள்!; ஆளும் கட்சியைத் தோற்கடித்தார்களே, அதுதான் நீர் குறிப்பிட்ட அண்ணாவின் பெரிய் பேச்சு! என்ன புரிந்ததா பேரிகையே!

நாவாட வரம்பு கட்டப்பட்ட நேரத்தையும் உடைத்தெறிந்துத் தள்ளி, "பேசட்டும் அண்ணாதுரை,

தடுக்காதீர்கள்'' என்று டில்லி நாடாளுமன்றமே குரல் கொடுத்துக் கேட்டதே, அதுதான் பெரிய பேச்சு! என்பதை நிரூபித்த - நாவுக்கரசர் அண்ணா!

அண்ணா அவர்கள், நாடாளுமன்றத்தில் மூன்று முறை ஆற்றிய சொல்லேருழவம், சொல்லாடல் என்ற ஒன்று இருப்போருக்கு இலக்கணங்கள்! - ''நா'' அதிகாரங்கள்!

மூளை என்ற ஒன்றுள்ளோருக்கு - அவை முத்தமிழ் இலக்கியங்கள்!

ஐக்கிய நாடுகள் அவை பற்றி, அண்மையில் அண்ணா ஆற்றிய உரையை, நீ கேட்டிருக்க மாட்டாய் என்று கருதுகிறேன்!

காரணம், உனக்குப் போதிய ஆங்கில அறிவு இல்லை! அதுபோன்ற ஒரு பேச்சைப் பேசக் கூடியவன், தற்காலக் கருவிலே இல்லை என்று பாராட்டி - அறிஞர்கள் ஒப்புக் கொண்டார்கள்!

அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிற்காக, அந்த அறிஞர் எழுதிய உரை, அறிவாளர் அணிகட்கு வேதம்!

''இவர் என்ன ஜீவானந்தத்தைப் போல, அடி வயிற்றிலே இருந்து பேசுபவரா? - மூக்கால் பேசுபவர்'' என்று எழுதும் முகாரியே!

தோழர் ஜீவா அன்று பேசியதை, இன்று சாட்சியமாகக் கூறும் அரசியல் பாவங்களே!

அந்த நாட்களில் - காங்கிரஸ் ஆட்சியில், ஜீவாவின் அடி வயிற்றிலே இருந்து வெளிவந்த கனல் பழுத்த வார்த்தைகளால், சேலம் சிறையிலே நீங்கள் சுட்டுத் தள்ளிய இருபத்தொரு கம்யூனிஸ்டுப் பிணங்களைப் பற்றி எரிமலையென ஜீவா முழக்கமிட்டார் அல்லவா?

அப்போது எந்த மனித நேயங்கள் அவருடைய அரசியல் பேச்சை ரசித்துப் பாராட்டின! பஹுத் அச்சா ஹை! போட்டன?

அன்று அவர் அப்படிப் பேசியபோது, அவதூறாக அன்று பதில் சொல்லிவிட்டு, இன்று அவர் இறந்துவிட்டார் என்பதற்காக - அனுபல்லவி பாடுகின்றீர்களா?

எப்போது ஏற்பட்டது உங்களுக்கு ஜீவா பக்தி? அறிஞர் அண்ணா சிலை அமைப்பின் போதா?

அண்ணா அவர்கள் மூக்கால பேசினால் என்ன? நாவால் சொற்களை அச்சடித்தால் - உமக்கென்ன?

மூக்கு மட்டும் இல்லையென்றால், காங்கிரஸ் என்ற உமது சொல்லுக்குள் இருக்கின்ற 'ங்''கன்னா என்ற ஒலியே வராதே!

''வாங்கறன்னே, போங்கறன்னே'' என்று பேசும் உமது தலைவரின் பேச்சே - மூக்கால் வரும் ஒலியல்லவா?

அண்ணா அவர்கள், மூக்கால் பேசினாலும், நாவால் பேசினாலும், அவை நயத்தகு மிகு நாகரிக, முழு அறிவு வாக்குகளாக முகிழ்க்குமே! மேட புத்தி அறியுமா இந்த மேதைமையை!

சிலர் நாக்கு நரகல் நாக்கு! அவை மலர்த் தமிழில் இருக்கின்ற தேனைச் சுவைக்காது! அதற்கு அவர் என்ன செய்வார்?

''கல்கி'' எழுதிய கதைகளைப் பெரிதுபடுத்திப் பாராட்டும் சிறுமையே!

அதே எழுத்துலக மேதை திரு.கல்கி அவர்கள்தான்; வரலாற்று நாவலுலக்கு முடிசூடா மன்னரான அவர்தான், அண்ணா அவர்களை அறிஞர் என்று பாராட்டினார்! அறிவாயே இதை!

உன்னால் பாராட்டப்படும் ''கல்கி''யால் போற்றிப் புகழப்பட்ட அண்ணாவுக்கு அமைக்கக் கூடாதா அறிவின் சின்னம்? - சிலை!

''ஓர்-இரவு'' நாடகத்தைப் பார்த்த அந்தப் பேரறிவரளர்ப் பெருமகன் ''கல்கி'', அண்ணா அவர்களைத் தமிழ்நாட்டுப் பெர்னாட்ஷா என்றார்! இப்சன் என்றார்! கான்பூர்த்தி என்று நெஞ்சாரப் பாராட்டினார்!

''மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்'' என்ற அண்ணாவின் இலக்கிய மேதைமைக்கு இலக்கணமாக அன்று இயங்கியது ''கல்கி''யின் எழுதுகோல் மாண்பு!

திரு. ''கல்கி'' பெயரைக் கழறி, ''அவரைவிட அண்ணாதுரை பெரிய எழுத்தாளரா?'' என்று கேட்கும் அவசரமே!

திரு. ''கல்கி'' அவர்கள், தன்னைவிடப் பெரும் எழுத்தாளர் களை அண்ணா அவர்களோடு ஒப்பிட்டு எழுதியதை, அன்று பாராட்டிக் கைதட்டி மகிழ்ந்தவர்களன்றோ நீவிர்!

தங்கப்பழமே...! உனது கயமை மன அரிப்புக்கு எதையும் எழுத - திரு.ஜெயகாந்தன் நாளேடா கிடைத்தது? அட அரிப்புப் பங்காளியே!

அந்த ஏட்டின் ஆசிரியர் பொறுப்பிலிருக்கும் அந்த - கம்யூனிஸக் காங்கிரஸ் அர்த்தநாரிக் கபாலம்தான், ஆய்ந்து அனுமதி அளித்ததோ - உனது கருத்தை அந்த ஏட்டிலே - உமிழ!

காலம் சென்ற மேதை காமராசருக்குச் சிலை வைத்ததே - அறிஞர் அண்ணா அவர்களின் அனுமதியால்தான்!

ஏன், இந்த வினாக்களை அப்போதே தொடுக்கவில்லை நீங்கள்?

''தமிழுக்கு காமராசர் என்ன செய்தார்? பெரிய பேச்சாளரா அவர் - ஜீவாவைப் போல?''

- என்று, எதிர்க் கட்சியினர் எவராவது அன்று ஏகடியம் பேசினார்களா?

''கல்கி''யைப் போல, என்ன வரலாற்று நாவல் ஓவியங்களைத் தீட்டியவரா காமராசர்?

சிறுகதைச் சிந்தனைச் சிற்பியா? சினிமா - நாடக விமரிசனங்களின் வித்தகரா அவர்?

- என்று எந்தத் தமிழ் மகனும் உங்களைப் போல இழி புத்தியோடு அவரைச் சுட்டிக் கேட்கவில்லையே அன்று!

காமராசர் என்ன தமிழ் இலக்கியங்களில் கலம்பகம் கண்டவரா? அந்தாதி பாடியவரா? 'கோவை' எழுதி ''உலா'' வந்தவரா?

காமராசர் என்ன அட்டாவதானியா, இல்லை சட்டாவதானியா?

காமராசர் என்ன தசாவதானியா? இல்லை சதாவதானியா?

காமராசர் என்ன கமலபந்தம் பாடியவரா? இல்லை, லிங்கபந்தம் கண்டவரா?

காமராசர் என்ன காவியக் கர்த்தரா? இல்லை, காப்பிய மன்னர் மன்னரா?

என்ன தெரியும் காமராசருக்கு? என்று, எந்தத் தமிழ்க் கடை மகனாவது உங்களைப்போல் எடுத்தேன் - கவிழ்த்தேன் என்று கேள்விகளை ஏவிக் கேட்டானா?

அறிவு என்று ஒன்று அப்போதைய எதிர்க்கட்சியிடம் இருந்ததால், காமராசர் ஒரு தமிழன்! தமிழனுக்குச் சிலையா? என்று எவரும் எதிர் கேள்வி கேட்டாரில்லை!

''படித்தவனை வாருங்கள் என்பார்கள் - படியாதவனை வா என்பார்கள்'' என்ற பாவேந்தர் பாரதிதாசனார் சொல்லை மீறியல்லவா - காமராசருக்குச் சிலை கண்டார்கள் - தமிழர்கள்.

எந்தக் கட்சியிலே இருந்தாலும் - அவர் ஒரு தேச பக்தர்! பொது வாழ்க்கையின் தொண்டர் என்பதற்காக ஜிம்கானா திடலிலே அவர் சிலையாக நின்றார்!

இந்த நாட்டின் விடுதலைக்காக - திருமணமே வேண்டாம் என்று, அவர் பல முறை சிறை சென்ற தியாகத் திலகம் என்பதால், இன்றும் சிலையாகக் காட்சி அளிக்கிறார் - மக்களின் மனக் காட்சியின் முன்பு!

சிலை ஒருவருக்கு உருவாக - சில தகுதிகள் இருந்தால் கூடப் போதும், என்ற குறைந்த அளவு மன சாட்சியால் - அவர் தியாகத்தின் சின்னமாகச் சிலையாக நின்றார்!

உன்னைப் போல உன்மத்தமான வினாக்களை வினவ, எந்த ஒரு மனசாட்சிக்கும் - வராது மனம்! ஆனால், கேட்டு விட்டாய் கேள்விகளை! - போ! - போ!! போ!!! ''மன்னிப்போம் - மறப்போம்'' என்றார் அண்ணா!

''ஆரிய மாயை'' என்ற அண்ணாவின் புத்தகத்தைக் காங்கிரஸ் ஆட்சி அன்று தடை செய்ததே - ஏன்?

அந்தப் புத்தகத்துக்குள்ளே என்ன சயனைடு குப்பியா பொட்டலமாக மடித்து வைக்கப்பட்டு இருந்தது?

அறிஞர் அண்ணா பேசிய பேச்சுக்களுக்கு - 144 தடைச் சட்டம் போட்டதே அன்றைய அரசு - ஏன்? அந்தக் கூட்டத்திலே என்ன வெடிகுண்டா இருந்தது?

காந்தியடிகள் கோட்சே என்ற கொடூரனால் கொலை செய்யப்பட்டபோது, அவசரம், அவசரமாக அறிஞர் அண்ணாவை அன்று அழைத்து - வானொலியிலே பேச வைத்ததே காங்கிரஸ் ஆட்சி - ஏன்?

அப்போது மட்டும் அவரைப் பெரிய பேச்சாளர் என்று உங்களால் நினைக்க முடிந்ததா? ஒப்ப முடிந்ததா?

ஆமாம் - ஆமாம்! கட்டுரையாளரும் ஏடாளரும் அன்று காங்கிரசார் அல்லவே! அட! எடுப்பார் கை பிள்ளைகளே!

''அண்ணாத்துரை சிலையை, உலகத் தமிழ் மாநாடு நடை பெறும் இந்த நேரத்தில் வைக்க வேண்டிய அவசியம் என்ன? என்று கேட்கிறோம்'' என்று கடாவும் ''ஜெயபேரிகை'' நாளேடே!

அறிஞர் அண்ணாவுக்குக் கொடுக்கப்படாத முக்கியத்துவம் - தமிழ்நாட்டில் வேறு எவருக்கும் இல்லை!

தரித்திரம் பிடித்தவருக்கு எல்லாம் தமிழ்ப் பற்று வந்துவிட்டதே என்றால் - எவன் நம்புவான்.

''பேச்சுத் துறையிலே என்ன சாதித்தார் அண்ணாதுரை'' என்று கேட்பவர்களுக்கு, இதோ சில சான்றுகள்!

தமிழிலே சொல்லடுக்குகள்!
தமிழ்ப் பேச்சிலே கற்பனை நயம்!
தமிழ் ஓட்டத்திலே தத்துவம்!
ஓர் உரை பொழிவிலே பத்துப் பதினைந்து உவமைகள்!
சொல்லேருழவத்திலே சிறுகதை உருவகங்கள்!
அடுக்குத் தொடர்கள்! அலங்கார வருணனைகள்!
ஆற்றொழுக்கான அருவி நடைப் பேச்சுக்கள்!

ஒரு சொல்லை எடுத்துக்கொண்டால் அதைக் கொண்டே முடிக்கும் வித்தைகள்!

தமிழால் ஒரு அரசியலையே மாற்றி அமைக்க முடியும் என்ற அற்புதங்கள்!

ஆங்கிலத்தைப் போலவே ஈற்று மோனை கட்டிப் பேசும் தமிழ்ப் பாங்குகள்!

சில இடங்களில் முழு மோனைகள், முற்று மோனைகள் போட்டுச் சொல்லரங்கமாடும் உரைஆடல் கலைகள்!

இலக்கியப் பண்பை விட்டு - இம்மியளவும் நகராமல் இயங்கி உரையாடிடும் இயல்பு!

அறிஞர் அண்ணாவின் சொல்லாடலுக்குரிய சாதனைகள் இவை! போதாவா! இன்னும் வேண்டுமா?

இத்தகையவோர் ஆற்றல் மிக்கோரை, ''இமிடேஷன் காந்தி'' என இயம்பியவருக்கு - காலம்தான் பதில் கூற வேண்டும்!

காங்கிரஸ் பெருந்தலைவர்கள், மத்திய - மாநில அமைச்சர்கள் எல்லாம் அவரை ஒரு காந்தியவாதி என்று கழறிய பிறகு, கயமைகள் குரைப்பதால் நடுங்கியா ஓடிவிடும் நல்ல நிலா?

"Imitation" இமிடேஷன் என்று கூறிய கட்டுரையாளரே, ஆங்கிலம் தெரியுமா உமக்கு?

அந்த ஆங்கில பதத்தின் அற்புத மாயாஜால ஆட்சியை நீர் அறிவீரா? அந்த அறிவு உமக்கேது?

நீரென்ன ஆங்கில அகராதியின் வித்தகர் ஜான்சனின் பேரனா என்ன?

அண்ணாவை "Imitation" இமிடேஷன் என்றால் - ரிஃப்ளக்ஷன், ரீ புரொடக்ஷன், ரெப்பர்செண்டேஷன், இமிடேட்டர், எக்கோ, கக்கூ, பேரட் என்ற - ஒரு சொல் : பல பொருட்கள் உடைய சொல்!

"Imitation" இமிடேஷன், வினைச் சொல்லாக வருமானால் - மிரர், ரிஃப்ளக்டர், ரிப்பீட், சிமுலேட், பேரலல், மேட்ச் என்று பல பொருள் தரும் வார்த்தை!

"Imitation" இமிடேஷன், அட்ஜெக்டிவ்வாக எடுத்துக் கொண்டால் - லிட்டரல் என்று பொருள்!

ஒன்றை அப்படியே பிரதிபலிக்கும் ஒன்றை இமிடேட் என்று கூறலாம். அதாவது 'பார்த்துப் பின்பற்று', 'பார்த்துப் பழகு', 'ஏறக்குறைய ஏற்புடையதாகச் செய்ய முயலு' என்ற பொருள் தரும்.

தாமஸ் ஜீ கெம்பீஸ் என்பவர், ''தி இமிடேஷன் ஆஃப் தி கிரைஸ்ட்'' என்ற புத்தகத்தை எழுதியிருப்பது கட்டுரையாளருக்குத் தெரியுமா?

அந்த புத்தகம் அமெரிக்காவிலே உள்ள சிகாகோ நகரிலே அச்சானது!

''தி இமிடேஷன் ஆஃப் தி கிரைஸ்ட்'' என்ற அந்த வாக்கியத்தின் உட்பொருள் - 'ட்டு ஃபாலோ தி கிரைஸ்ட்'' அதாவது, ''கிருஸ்துவைப் பின்பற்று'' என்பதாகும்.

கட்டுரையாளரே! நீர் எழுதிய கட்டுரைக்குக் கொடுத்த ''இமிடேஷன் காந்திக்கு சிலையாம்'' என்ற பெயர் மூலமாகப் புரிவது என்ன தெரியுமா?

காந்தியடிகளுக்குப் பிறகு - அந்த மகாத்மாவைப் பின்பற்றக் கூடிய, ஒப்பற்ற ஒரு தலைவர் அறிஞர் அண்ணாதான் என்பதை - அழுத்தத் திருத்தமாக நீரே கூறி விட்டீரே!

இதுதான் ஆங்கிலம் புரியாதவன் எழுதும் புத்தியின் இலட்சணமே!

அந்த ஆங்கில வார்த்தையின் அற்புத மாயா ஜாலங்களைப் புரிந்து கொள்ளும் அறிவு உமக்கு இருக்கிறதா?

ஒருவரைக் கண்டவாறு ஏசி எழுத வந்த நீர்; கொடுத்த தலைப்பே, உமது அறிவீனத்தைக் காட்டிக் கொடுத்து விட்டதே, என்பதைப் புரிந்து கொண்டீரா - இல்லையா?

"ரிஃப்ளக்ஷன்" - என்றால் எதிரொலித்தல்! காந்தியார் கொள்கைகளை அறிஞர் அண்ணா எதிரொலிப்பவர் என்பதல்லவா பொருள்?

"ரீ புரொடக்ஷன்" - என்றால், முன்பிருந்த ஒன்றைத் தயாரித்துத் தொடர்வது என்று பொருள்!

காந்தியடிகளுடைய அகிம்சைக் கொள்கைகளை - நாட்டு மக்களுக்கு - தனக்கேற்ற பக்குவத்தோடு அண்ணா வழங்குகிறார். அதனால், அவர் அரசியலில் வன்முறைகளை வெறுப்பவர் - புரிகிறதா?

"ரெப்ரசெண்டேஷன்" - காந்தியார் கொள்கைக்காகவே அண்ணா பிரதிநிதியாக நிலை பெற்று நிற்கிறார் என்று பொருள். "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பவர் அண்ணா!

"எக்கோ" - சொன்னதைத் திருப்பிச் சொல்லல்! அதாவது எதிரொலித்தல் ஆகும்!

காந்தியடிகளுடைய இலட்சியங்களை அப்படியே மக்களிடையே எதிரொலிப்பதாகும்! அவரது மதுவிலக்குக் கொள்கைக்கு அண்ணா என்றும் சான்றாக நிற்கின்றாரா - இல்லையா?

கக்கூ - அது ஓர் இசைப் பறவை! சொன்ன சொற்களை இசை பட இயக்கும் பண்புள்ளது. தமிழ்ச் சான்றோர் பண்பு களை தனது மென்மையான நாத குரலோசையால் நயம்பட இசைப்பவர் - இந்திய மக்களிடையே விளக்குபவர் அண்ணா!

பேரட் - கிளி! எதைக் கூறுகிறோமோ அதைத் தவறின்றி அப்படியே திருப்பிக் கூறும் - அஞ்சுகம்! அக்கூற்றில் இன்பம் தவழும்! அறிஞர் அண்ணா ஒரு தமிழ்ப் பண்பாட்டுப் பாசக் கிளி!

அதனால்தான், இதுவரை யாருமே செய்யாத ஓர் அற்புதமான 'தம்பி' என்ற குடும்பப் பாச உணர்வை ஓர் அரசியல் இயக்கத்தில் புகுத்தி, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உலக உணர்வுகளை இனிமையோடு திருப்பித் திருப்பிக் கூறினார்.

மிரர் - கண்ணாடி! பார்த்த உருவத்தை அது எப்படி கண் முன் ஆடிக் காட்டுகிறதோ - அப்படியே, அண்ணாவும் ஏழை எளிய மக்களின் பிரச்னைகளை, அரசியலில் - மேடையில் - எழுத்தில் எடுத்துக் காட்டிடும் பளிங்காக நின்று பளபளக்கிறார்!

ரிஃப்ளக்ட் - மீண்டும் மீண்டும் அதையே எதிரொலித்தல்.

ரிப்பீட் - சொன்னதையே திருப்பிக் கூறல்! மக்கள் மனதில் அதைப் பதியுமாறு விளக்குதல்!

சிமுலேட் - அதனைப் போன்ற ஒன்று.

பேரலல் - வெட்டாத இரு கோடுகள்! அதாவது ஜனநாயகம் - சோசலிசம் இரண்டினையும் அதனதன் பாதைகளின் படியே சென்று, மக்களை ஏற்கச் செய்ய உழைப்பவர் அறிஞர் அண்ணா!

மேட்ச் - ஈடு இணையற்ற இரண்டு! அதாவது அறிஞர் அண்ணாவின் அரிய கொள்கைகளும் - காந்தி பெருமான் இலட்சியங்களும் ஒன்றுக்கொன்று ஈடு இணையற்றவை என்று பொருள்!

லிட்டரல் - அப்படியே என்று பொருள்! அதாவது காந்தியடிகளின் அரசியல் கொள்கையை அப்படியே அப்பழுக்கு ஏதுமின்றி செயல்படுத்திப் பின்பற்றுவது!

ஞானத்தின் மேற்கே! இமிடேஷன் என்ற வார்த்தைக்கு எத்தனைப் பொருட்கள் பார்த்தாயா?

இவை போன்ற பற்பல பொருட்களை இயக்குகின்ற ஓர் "இமிடேஷன் காந்திக்குத்தான் சிலை" வைக்கின்றார்கள் - தமிழர்களுக்குக் கருவாகி உருவானவர்கள் - இல்லையா?

''அண்ணாத்துரைக்கு ஏன் சிலை?'' என்று கேட்ட ''ஜெயபேரிகை'' ஏடே, அவருக்கு சிலை வைத்திடக் காரணங்கள் பற்பல உண்டு!

காங்கிரஸ் ஆட்சி மரத்தை வேரோடு தூக்கி எறிந்தவர் அண்ணா.

இந்தியாவிலே உள்ள எல்லா மாநிலங்களையும் விட சிறப்பாக ஆட்சி நடத்தியவர்.

கற்கால மக்களைப் பொற்காலத்திலே உலா வரச் செய்தவர்!

வானத்தின் கீழே ஒளிர்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பண்பு களை - எழு ஞாயிறாகத் திகழ்ந்து, அறிவொளி பரப்பி வருபவர்!

தத்துவத்திலும் - அறிவியலிலும் ஒரு கருத்து உண்டு. அதாவது, ''எந்தச் செய்கைக்கும் ஓர் எதிர் கொள்கை அல்லது செய்கை உண்டு'' என்பதே!

அதனைப்போல, எந்தச் சிலை பக்கத்திலும் இன்னொரு சிலை இருக்க வேண்டும்! ஏன்?

அறிவிற்கே அண்ணாவின் சிலை என்றால், அடுத்த சிலை எதற்கு? யூகம் தேவை! எனவே, மன இருளை ஓட்டும் சிலை - அண்ணா சிலை!

இத்தகைய சிலை விழாவை நீங்கள் தடுப்பது ஏன்? அறிஞர் அண்ணாவின் அறிவு ஒளி, அன்பொளி, பண்பொளி, உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகை புரியும் அறிஞர்களிடையே வான் முட்டப் பரவி விடுமே என்ற பயத்தாலா?

''இமிடேஷன் காந்திக்கு'' ஏன் சிலை அமைக்கின்றோம் என்பதைக் கேள் - ''பேரிகையே''!

அறிஞர் அண்ணா சிலையை ஒரு நாள், காலத்தால் அறிவு வணங்கி - வாயார வாழ்த்தும் நேரம் வரத்தான் போகிறது என்பதற்காக - இப்போதே சிலை அமைக்கின்றோம்!

தமிழ் என்றால் அண்ணா - அண்ணா என்றால் தமிழ் - என்ற தத்துவம் தமிழர்களிடையே நீக்கமறக் கலந்துவிட்டக் காலம் இக் காலம்.

தமிழர்களின் பொற்காலம்! அறிவுக்காலம்! அந்த நற் காலத்தை உருவாக்கிய நயத்தகு தனி நாகரிக நாயகன் அறிஞர் அண்ணா!

அந்த சாகா அறிவுத் தினவை, தமிழர்களின் மனதிலே உருவாக்கி விட்டவருக்குச் சிலை வைப்பது - காலத்தின் கட்டாயக் கட்டளை!

அந்தக் காலக் கட்டளையின் விளைவுதான் "இமிடேஷன் காந்திக்கு சிலை" இப்போதாவது புரிந்ததா?

"மாலை மணி" 13.12.1967

✤ ✤ ✤

# 2. "Madras Mail"

''கம்பரசம் போன்ற ஆபாசத்தில் எழுதிய அண்ணா துரையைக் கம்பனுக்கு இணையாகக் கருதுவதா?''

''ஆரிய மாயை, ரோமாபுரி ராணிகள், போன்ற ஆபாச இலக்கியங்களை எழுதிய கர்த்தாவை, திருவள்ளுவர் - இளங்கோவடிகளுக்கு இணையாகத் தரம் பார்க்கலாமா?''

Madras Mail என்ற ஆங்கில நாளேட்டில் மேற்கண்ட கண்டனக் குரலை எழுப்பியவர் - 'ஜெயபேரிகை' நாளேட்டைப் போல கட்டுரை வடிவிலே அல்ல!

''ஆசிரியருக்குக் கடிதம் என்ற பகுதியிலே - அந்த 'மெயில்' ஏடு ரசிகர், தனது கருத்தைத் தீட்டியிருக்கிறார். அதுவும் ஒரே ஒரு பத்திச் செய்தி அது!

இந்த ஒரு கலம் செய்தியை, திரு.ஜெயகாந்தன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'ஜெயபேரிகை' நாளேடு - ஐந்து கலம் செய்தியாக - பெரிய பெரிய எழுத்துக்களைக் கொண்ட கட்டுரை வடிவத் தோற்றத் தலைப்பில், அப்படியே அதைத் திருப்பிப் பிரசுரித்து ''மெயில் ஏடு கண்டனம்'' என்று வெளியிட்டுள்ளது.

எதைக் காட்டுகின்றது இந்தக் கட்டுரையின் தோற்றமும், வெளியீடும்?

'மெயில்' ஏட்டில் எழுதிய தோழரைவிட, ''ஜெயபேரிகை'' ஏட்டின் மன அரிப்பு, அறிஞர் அண்ணா அவர்கள் மீது

அதிகமாக அரித்திருக்கின்றது என்பதை அல்லவா? காட்டுகின்றது!

'மெயில்' ஏடு முரசமும், "பேரிகை" எழுப்பிய தப்பட்டையும் இணையாகச் சேர்ந்து, அண்ணாதுரைக்கு சிலையா? என்ற சொற்போரைத் தொடுத்துள்ளன.

'மெயில்' ஏடு தரம் வாய்ந்தது. தகுதி வாய்ந்த ஒரு ஆங்கிலச் செய்திப் பத்திரிகை!

உயர் தனிச் செம்மொழியாம் ஆங்கிலத்திலே எழுதியிருக்கின்றார் 'மெயில்' ஏடு எழுத்தாளர்.

ஆங்கிலத்தை யார் படித்தாலும், அவர் உலகத்தையே அலசுகின்றார் என்று பொருள்! மொழி அப்படி!

கோள்களின் அறிவியல்!
புவியீர்ப்பு அறிவியல்!
எலக்ட்ரானிக் விந்தைகள்!
இலக்கியம் - கவிதைகள்!
அரசியல்! ஆய்வியல்!
தத்துவ விளக்கங்கள்!
தர்க்கவாத நுணுக்கங்கள்!
கனவியல்! உளவியல்!
பித்தர்கள் உள்ளம்!
ஞானத்திரட்சி!
ஆன்மிகம்! தெய்வீகம்!

இவற்றை எல்லாம் ஆங்கில மொழியாலே - நாம் அறிவு பெறலாம்! அவ்வளவு ஞான நூற்களையும் ஆங்கிலம் பெற்றுள்ளது!

அத்தகைய ஆங்கில அறிவை வளர்க்கும் தகுதியும் தரமுமுள்ள 'மெயில்' ஏடு, அழுக்காற்று அரசியலின் கால வசத்தால், அறிவு சூன்யமாகி விட்டதே! பாவம்!

ஆனாலும், நம்மால் எப்படி ஆங்கிலத்தை வாழ்த்தாமல் இருக்க முடியும்?

அறிஞர் அண்ணா எழுதிய "ஆரியமாயை - ரோமாபுரி ராணிகள்" என்ற நூற்களை, ஆபாச இலக்கியமென்று 'மெயில்', "ஜெயபேரிகை" ஏடுகள் போராடுகின்றன!

தமிழ் இலக்கியத்தினுடைய - இலக்கணங்கள் அனைத்தும் - செய்யுட்களால் அமைந்தவை!

கட்டுரை வடிவில், எந்த பழைய இலக்கியமும் தமிழகத்தில் இல்லை!

ஆங்கிலத்தின் இலக்கியங்கள்கூட - செய்யுள் வடிவிலும் - கவிதை நடையமைந்த கட்டுரை வடிவிலும்தான் அமைந்திருக்கின்றன.

"ஆரிய மாயை!", வரலாற்று ஆய்வாளர்களின் தொகுப்புக் கருத்துகள்!

"ரோமாபுரி ராணிகள்", அழகிகளால் ரோம் நாடு வீழ்ச்சி பெற்றதன் வரலாறு!

இவை இரண்டும் - வரலாற்றுக் கட்டுரைகளின் விமரிசனத் தொகுப்பேயன்றி - இலக்கியங்கள் அல்ல!

இவற்றைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய பருவம் எப்போது?

எந்தப் பெரியாரை காங்கிரஸ்காரர்கள் தலைமேலே தூக்கி வைத்துக் கொண்டு கரகம் ஆடினார்களோ, அந்தப் பெரியாரின் தளபதியாக அண்ணா இருந்தபோது எழுதியவை!

ஓர் இன வளர்ச்சியை, மற்றோர் இனம் தாக்குமானால், தடுக்கின்ற அதனுடைய பலத்தை - சமுதாய சீர்திருத்த எழுத்தாளன் ஒருவன் எடை போட்டுப் பார்ப்பது அவனுடைய உரிமையாகும்! - கடமையுமாகும்!

அதற்கேற்ப, உலக வரலாறு - பல உண்மைகளை அந்த எழுச்சிமிக்க எழுத்தாளனுக்கு அளிக்கின்றது!

அத்தகைய உண்மையின், அழகிய உருவக் காட்சிகள்தான் - "ஆரியமாயை"

''ஆரிய மாயை''யை, ஆபாசம் என்று கூறுகின்றவர்கள், அதனை அறிவிக்கின்ற வரலாற்றினையே ஆபாசம் என்று செப்புகின்றார்கள் என்று பொருள்!

ஒரு வரலாறு, சிலருக்கு ஆபாசமாகத் தெரிந்தால், அதற்கு யார் பொறுப்பு?

அறிஞர் அண்ணாவா? இல்லை! அந்த வரலாற்றை மூல நூலாகத் துருவித் துருவி எழுதி அவனிக்கு அளித்தார்களே - அந்த மேதைகளைத்தான் ஆபாசகர்கள் எனக் கூறுகிறார்கள்!

''ரோமாபுரி ராணி'' என்பது - ரோம் நாட்டின் வரலாற்று வீழ்ச்சியில் - அழகே உருவான அப்சரசிகளின் அரசியல் திரு விளையாடல்கள் என்னென்ன என்பதை - அறிவிக்கும் நூல்!

அண்ணா அவர்களின் அழகு தமிழால், அற்புத வருணனை நடையால் - இந்நூல் அருமை பெற்று தமிழ் அவனியிலே உலா வந்தது. படிக்கப் படிக்க அறிவுக்கு இன்பம் அளித்த நூல்!

வஞ்சியர்களாலும் வஞ்சகர்களாலும் இந்திய வரலாற்றில், பல ஆட்சிகள் எப்படி வீழ்ச்சியுற்றன என்பதை இன்றும் நாம் படிக்கின்றோம்!

சிவாஜியின் மராட்டிய செங்கோல், திப்புவின் மறவாண்மை ஆட்சி, தகப்பனையும் கொன்ற ஔரங்க சீப் ஆட்சி, உடன் பிறந்தாரைப் பலி வாங்கி அரியணை அமர்ந்த அசோகன் வரலாறுகள் போன்று பல உண்டு!

அதனைப்போல, ஒவ்வொரு நாட்டு அரசும் - சாம் ராஜ்ஜியமும் - பல காரணங்களால் வீழ்ந்ததையும் நாம் வரலாற்றில் பார்க்கின்றோம்!

இட்லருடைய ஆட்சி வீழ்ச்சியடைந்தது - எதேச்சாதி காரத்தால் என்றால், ரோம் நாடு வீழ்ச்சி அடைந்தது - அப்ரசிகளால்! - அவர்தம் ஆபாச நடத்தைகளால்! உலகமே இதை உணரும்!

இந்த வரலாற்று ஓவியம் - கம்பன் மூளையிலே இருந்து தெறிந்து ஓடி வந்த கற்பனையல்ல!

சூரியன் மறையாத பிரிட்டானிய சாம்ராஜ்ஜியம் - இராஜ தந்திரத்தின் தொட்டில்!

அந்த தொட்டில்கூட, தனது கயிறுகளில் ஒன்றைப் பயங்கரப் பிடியோடு தளர்த்திக் கொண்டது.

ஆனால், இன்று வல்லரசு என்ற இடத்தை விட்டு அது விலகி நிற்கின்றது!

இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என்ன என்பதை, ''மெயில்'' ஏட்டில் எழுதிய எழுத்தருக்குத் தெரிந்திருக்க வேண்டும்!

அரசு நிர்வாகம் சரியாகச் செயல்பட முடியவில்லை என்பதற்காகவே - அருணன் அஸ்தமிக்காத பிரிட்டானிய சாம்ராஜ்ஜியம் மறைய ஆரம்பித்தது.

இந்த சரித்திர ஆதாரத்தைக் கூறுவதற்குக் காரணமே, வெறும் அரைகுறை ஆங்கிலத்தால் சரடு விடுகின்றவர்களுக்குக் கொஞ்சமாவது புத்தி தெளிய வேண்டுமே என்பதற்காகத்தான்!

''ரோமாபுரி ராணிகள்'', ரோம் நாட்டில் நடந்த வெறும் சரித்திரச் சம்பவங்களைக் கொண்ட கட்டுரைகளே தவிர, அண்ணா உருவாக்கிய இலக்கியமும் அல்ல! மூல நூலும் அல்ல! வழி வரலாறும் அல்ல!

இலக்கியத்திற்கும் - வரலாற்றுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள்தான், ரோம் நாட்டு சரசிகளின் வரலாறுகளின் பெரும் பகுதிகள் ஆபாசமாகத்தான் இருக்கும் என்பார்கள்!

ரோம் நாட்டு வரலாற்றை எழுத்தெண்ணி திரு. ஜெய காந்தனின் ''ஜெயபேரிகை'' ஏடு படித்திருக்குமானால், அல்லது இலக்கிய விமரிசன நிபுணத்துவம் சிறிதாவது அதற்கு இருக்குமானால், அண்ணா அவர்களைக் குறை கூறாது!

ரோம் நாட்டு வரலாற்றை - வருணனை அழகோடு, அற்புத மான அலங்காரத் தமிழ் நடையில் - அப்படியே வடித் தளித்தவர் அண்ணா என்பதற்காக, அவரைக் குறைகூறுவது தெளிந்த வித்தகமாகாது!

ஏன்! இந்தியாவினுடைய காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சிகளை விளக்க வேண்டுமா? மர்மக் கதைகளைப் போல அதன் அரசியல் அந்தரங்கங்களை அலசலாமே!

கெய்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட வரலாறும் - காந்தியடிகள், பண்டித நேரு உட்பட பலரின் உட்கட்சிப் போராட்ட மர்ம உணர்வுக் கொலைகளையும் - வீழ்ச்சிகளையும் எழுத வேண்டுமா?

இத்தகைய சம்பவங்களும் நாளை தொகுக்கப்படுமானால், அவைகூட ஆபாசமாகத்தான் இருக்குமோ!

“ஆரிய மாயை”, “ரோமாபுரி ராணிகள்” என்ற நூற்களை எழுதியதற்காக அண்ணாதுரையை, இளங்கோவடிகளுக்கு ஈடாக, திருவள்ளுவருக்கு இணையாகத் தரம் பார்ப்பதா?” என்று விளித்திருக்கின்ற ஜெயபேரிகை ஏடே!

அறிஞர் அண்ணா இளங்கோவடிகளுக்கு ஈடு என்று, இயம்பியது எவர்?

திருவள்ளுவர்க்கு ஈடாகும் உரு, எந்த நூற்றாண்டிலும் இதற்கு முன்பு கருவாக அமையவில்லை - இன்றுவரை! நாளை மீதும் நமக்கு நம்பிக்கை இல்லை!

உலகமே உவந்தளித்த ஒரே ஒரு கரு, அந்த உரு திருவள்ளுவர்தான்!

அத்தகைய மறு கரு உருவை, இனி அவனி பெறல் அரிது!

இன்னொரு இளங்கோவடிகள் எந்த நூற்றாண்டிலாவது தோன்றலாம்.

ஆனால், திருவள்ளுவரைப் போன்றதொரு கரு, இனி உருவாகும் என்று எதிர்பார்ப்பதற்கே, உரிய - சமுதாய சூழ்நிலைகள் இல்லையே!

பொய்யில் புலவரின் ஞானச் சுடரிலே வழிந்தோடும் சிறு ‘கோண்’, அறிஞர் அண்ணா அவர்கள்!

கோண் என்றால் பொருள் புரிகிறதா ''பேரிகையே''? அணுவை நூறு பாகங்களாக்கினால், அந்த ஒரு பாகத்திற்குக் கோண் என்று பெயர்!

இந்த சொல்லையே உருவாக்கியவர்கள் கபிலரும் - கம்பர் பெருமானும்தான் என்பதை, ''மெயில்'' ஏடு எப்படி அறியும்?

எனவே, அறிஞர் அண்ணா அவர்களை, நாம் திருவள்ளுவர் என்றோ, - கம்பர் என்றோ சொல்லாத போது, ''மெயில் ஏடே'' நீயே அவலை நினைத்துக் கொண்டு உரலை ஏன் இடிக்கின்றாய்? நியாயமா இது?

கம்பரசம்! கம்பன் காவியத்திற்கு ஒரு கோணத்திலே எழுதப்பட்ட விமரிசன நூல்!

கம்பரசத்தைப் படித்திருந்தால், குறைகூறும் மூளைகள் சற்றே சிந்தனை செய்யும்!

கம்பனுக்கு விமரிசனமா? என்று கேட்டால், கம்பன் என்ன? அவன் அப்பனுக்கும்கூட விமரிசனம் எழுத, ஓர் இலக்கியத் தும்பிக்கு உரிமை உண்டு.

இலக்கியத்தில் எப்படிப்பட்ட வம்பனுக்கும் - கொம்பனுக்கும் விமரிசனம் எழுதுபவன்தான், உண்மையான - உயிரோட்ட மான எழுத்தாளனாவான்!

கம்பன் எழுதிய காவியமென்ன மறைமொழியா? வேதம் என்ற நினைப்பா?

திருவள்ளுவர் முன்னால், கம்பனின் எடை எத்தனையோ மடங்கு மிக மிகக் குறைவு!

அண்டாண்டம் வாழ வழி காட்டிய மனித குல மேதை - திருவள்ளுவர் பெருமான்!

பிண்டாண்டத்தை எப்படி பிதற்றல் வாழ்வற்று வாழ வைப்பது என்று சிந்தித்து - மூல நூல் தந்த மூதறிஞர் அவர்!

கம்பர் அப்படியா? வால்மீகியின் மூலத்தைத் தழுவி, பாத்திரங்களைப் புனிதங்களாக்கி வழி நூலொன்றை எழுதி, வைணவத்திற்கு வழங்கிச் சென்றவர்.

வேண்டுமானால், வால்மீகி இராமாயணத்தைப் படித்துப் பார்! மேற்கூறிய ஒழுக்கக் கேடர்களாக அவர் பாடியிருக்கிறாரா இல்லையா என்று உணர்!

செந்நாப் போதார், தனது நூலின் மூலக் கரு உருவைத் தன்னுடைய அறிவிலிருந்தே சிந்தித்துப் பெற்றவர்! அநுபவ ஊற்று!

அதன் வழியாக மனிதத்திற்கு நீதி நூலைத் தயாரித்து - அவனி வாழ் இனங்களும் - மக்களும் - நாடுகளும் நன்கு வாழ்ந்திட, அவ்வவ்வ மொழியின் கரங்களிலே தவழவிட்டத் தன்னிகரற்ற மேதை!

ஆனால், கம்பன் ஓர் காவியக் கர்த்தா. அவன் எழுதியது இராமாயணப் பாத்திரப் படைப்புகளைக் கொண்ட இராம காதை!

கம்ப இராமாயணம் வேதமல்ல! அது ஓர் இதிகாச இலக்கியம்! தமிழர்கள் கண்டிராத கற்பனை கலந்த தேவ வரலாறு கூறும் ஒரு காவியம்!

வேத நூல்களையே விமரிசிக்கின்ற காலம் அல்லவா இது? இதற்கிடையே கம்பனானால் என்ன? வேறு எந்த கொம்பனானால் என்ன?

கிறித்துவ மக்களின் பைபிள் வேதத்தையே மிகக் கடுமையான விமரிசனத்திற்கு ஆளாக்கியவர் - இராபர்ட் கிரீன் இங்கர்சால்!

இயேசு நாதரையே A Good Man என்று அவர் பாராட்டினார். ஆனால், அவரைக் கடவுள் என்பதை ஏற்க மறுத்தார். இந்தியாவில் இராஜாராம் மோகன்ராயும் போராடி மறுத்தார்.

கிரேக்க நாட்டுக் கடவுள் தத்துவங்களையே அக்கு வேறு ஆணி வேறாக விமரிசனம் செய்தவர் - சாக்ரடீஸ்!

இங்கிலாந்து நாட்டிலே ஷேக்ஸ்பியரை விமர்சிப்பதைப் போல, கம்பனைத் தமிழ் நாட்டிலே விமர்சிக்கின்ற நேரத்தில், கறிவேப்பிலையாக மிதந்ததே கம்பரசம்! அவ்வளவுதான்!

"கம்பரசம்" என்ற விமர்சன நூல் வெளிவந்ததன் நோக்கம், கம்பர் பெருமானுடைய சொற்சுவைகளை- பொருட் சுவைகளை - அணியழகுகளை - கற்பனை நயங்களை நாம் குறைத்து மதிப்பிடுவதற்காக அல்ல.

கம்பர் வாழ்ந்த காலம் - தமிழைக் காட்டிக் கொடுக்கும் பிறமொழி அடிமைகள் காலமல்ல!

தமிழ், தனது அமுதத் திருமுகத்தைத் தரணிக்குக் காட்டிக் காட்சியளித்துக் கொண்டிருந்த நேரம்!

நாடாளும் நாயகர்களே, புரவலர்களாகவும் - புலவர் களாகவும் இருந்து - தமிழுக்குப் பல்லக்குத் தூக்கிய புகழ் பூத்தக் காலம்!

அந்த நேரத்தில், தமிழை, அதன் தனித் தன்மையை இலக்கியத் தேனை - உண்டு உயிர்த்தவர் - கம்பர் பெருமான்!

தான் யாத்த காவிய விருந்திலே, - இறவா இன்பம் தரும் தமிழ்ப் பண்பாடுகளுக்கு ஏற்ப - இலக்கிய அமுதைப் பெய்தவர்! - அதுகூட ஆச்சரியம் அன்று!

அத்தகைய கம்பர் பிரானை, அறிஞர் அண்ணா ஏன் விமரிசனம் செய்தார்? இதுதான் வியப்பு! சிந்திக்க வேண்டிய ஒன்று!

கம்பரசம் எழுதப்பட்டக் காலத்தில், தமிழ் மறையாம் திருக் குறளை அறியாதவர்கள் - மதியாதவர்கள் - தெரியாதவர்கள் ஏராளம்! ஏராளம் பேர்!

முப்பாலுக்குரிய மரியாதையைத் தருவது ஒரு பங்கு என்றால், கம்பருக்கு ஆன்மிகம் என்ற பெயரால் கொடுத்த மரியாதை பன்மடங்குகளாக இருந்தன.

திருவள்ளுவ பெம்மானைவிடக் கம்பர் உயர்ந்தவர் - சிறந்தவர் - என்ற வாதமே, எங்கும் தலை தூக்கி இருந்தது - வைணவத்தின் பெயரால்!

இதனாலே, சைவ - வைணவப் போராட்டங்கள் மூண்டிட்ட காரணங்களுள் ஒன்றாகவும் அது அமைந்தது! ஏன் தெரியுமா?

தேவ காவியம் இயற்றியவர் கம்பர்! அதனால், அவர் பின்னாலே பெரும் பக்தர்கள் கூட்டமே திரண்டு நின்று வாதாடியது.

அதே நேரத்தில், இராம காதையில் - இராமபிரான் உட்பட்ட அவரது குடும்பமும் - இறையருள் வழங்கும் ஒரு சக்தியாக எண்ணப்பட்டது - அது விளம்பரமுமானது!

பிறந்த மனிதன் - மறையும் வரையிலமையும் வாழகசை வழி நெறிமுறைகளை வகுத்தவர் திருவள்ளுவர்!

அதனால், வாழ வகையறியாக் கூட்டத்தினர், ஆன்மிகப் பேரின்பப் போதையால் - அப்போது தமிழ் மறையை அலட்சியப்படுத்தினார்கள்!

அதை நினைவுபடுத்திட யாருமில்லை, அவர்களுக்கு! அதனால் மறதி என்ற ஆன்மிக மர்மக் குகையிலே அவர்கள், மூடி மறைக்கப்பட்டு விட்டார்கள்!

திருக்குறள் மாநாட்டை இந்த இருபதாம் நூற்றாண்டில் நடத்தியவர்களைக்கூட கேலி பேசினர் பலர்! அவர்கள் அனைவருமே கம்பரது பக்தர்கள் அன்று!

அவ்வாறு, கேலி செய்தவர்கள், கம்பர் காவியத்தை ஐயந்திரிபற அறிந்தவர்கள்தானா என்ற வினாவை, அண்ணா அவர்கள் தனது ஆய்வுச் சாட்டையால் சுண்டி எழுப்பிச் சோதனை செய்தார்!

"அறிவோம் - அறிவோம்" என்று - அவசர கோலமாய், அகம்பாவ ஞானமாய் - ஆணவக் கோளமாய் புறப்பட்டனர் - சிலர்!

செஞ்சொற் செல்வர் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களும் - தமிழ் பலமும் 'நா' வளமும், ஒன்று சேர்ந்த வாத வன்மை நயத்தோடு நாவாடும் நாவலர் சோம சுந்தர பாரதியாரும் சேர்ந்து அறிஞர் அண்ணா அவர்களிடம் வாதாட வந்தனர் - கம்பர் காவியத்திற்காகக் கச்சை கட்டிக் கொண்டு!

சேலம் நகரும் - சென்னை மாநகரும், சொற்போர் களங்களாக மாறின. அந்தக் காவிய வில்லேருழவர்களது வாதங்கள் - தீப்பொறி அம்புகள் போலப் பறந்தன - போரிட்டன! - முடிவு?

செந்தமிழ்ச் சொல்லின் செல்வர்களான அவ்விருவரையும் அறிவுப் போரில் அறிஞர் அண்ணா சொல்லேருழவராக நின்று 'செயங்கொண்டார்!'.

அதனால் பரணி பாடியது பகுத்தறிவுப் பாசறை! அறிஞர் அண்ணாவின் 'நா' வாகைக் கொடி நாட்டியது!

தமிழ்த் தரணி தடந்தோள் தட்டித் தாண்டவமாடிற்று - துள்ளித் துள்ளி!

இந்தச் சம்பவங்கள் எல்லாம் 'மெயில்' ஏடுக்கும், 'ஜெய பேரிகைக்கும் புரிய நியாயமில்லை!

அவர்கள், அப்போது பூகோளப் பந்தில் மனிதப் புழுக்களாக ஜென்மம் எடுத்தார்களோ, இல்லையோ - என்னவோ! எவரறிவார் பராபரமே!

அலிகள் இருவரை ஆலிங்கனமாட விட்டு - சிறுகதை இருளிலே அதி வீரராம பாண்டியனின் கலையை முக்கலும் - முணகலுமோடு விளையாட விட்டு - இளைஞர்களுக்கு அலிகள் போதையைக் கற்பித்தவர் அல்லவா - ''படு குழி'' என்ற சிறுகதையை வரைந்த திரு.ஜெயகாந்தன்?

ஏதோ ஒரு கூட்டம் சிறுகதைப் பஞ்சத்திற்காகத் தோள் கொடுத்து அவரைத் தூக்கி ஆடிய பாவம் - எங்குமுள அறிவை வணங்கி வரவேற்கும் சீரிய பண்பாடில்லாமல், தான்தோன்றி யாகத் தனது நாளேட்டிலே அண்ணாவின் கட்சி விரோதியை நுழைய விட்டு எழுத வைத்துள்ளார் திரு.ஜெயகாந்தன்!

அறிஞர் அண்ணா நாட்டிய இராம காவிய வாத வெற்றிக் கொடியைக் கண்டு, அளவிலா அக மகிழ்வு கொண்டவர் சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள். அவர் சுதந்திர இந்தியாவிற்கு முதல் நிதியமைச்சராக இருந்தவர்!

அவர், ''இராமாயணத்தைக் கொளுத்த வேண்டாம், நாளடைவில் - அது மக்கள் மன்றத்தினிடையே உண்மையை உணர்த்தும்'' என்று அறிக்கை விடுத்தார்!

''என்ன இருந்தாலும், 'இராவணன் இரக்கம் என்ற பொருளிலா ஓர் அரக்கன்தான்' என்று அவரும், அப்போது தெய்வ பாசத்தோடு முழக்கமிட்டார்.

அந்த வாத வரிகளின் விலா எலும்புகள் ஒவ்வொன்றையும் ஒடித்து முறித்தவர் அறிஞர் அண்ணா! சர் ஆர்.கே.எஸ்.சின்., புராண அறிவுக்காகப் போராடும் முதல் பலமாக அன்று அண்ணா திகழ்ந்தார்.

இரக்கம் என்ற பொருள், யாருக்கு? எப்போது? ஏன்? எங்கே? எப்படியெப்படி? இருக்க வேண்டும் என்பதை, 'நீதி தேவன் மயக்கம்' என்ற நாடகம் மூலம் நாட்டிற்கு இரண்டு மணி நேரம் விளக்கினார் - அண்ணா!

அறிஞர் அண்ணா அவர்களே, அதில் இராவணனாக நடித்ததைக் கண்ட கலைஞர் ஔவை டி.கே.சண்முகம் மெய்சிலிர்த்துப் போனார்!

''நடிகர்களாகிய எங்களையும் மிஞ்சிவிட்டார் அண்ணா'' என்று அவர் பலப்படப் பாராட்டி மகிழ்ந்தார்!

கம்பர் எழுதிய பன்னீராயிரம் கவிதைகளையும் சுருக்கி, ஒரே ஒரு சொல்லில் கம்ப இராமாயணத்தை அடக்கியவர் அண்ணா!

ஆம்! ''இரக்கம்'' என்ற வார்த்தையிலே, இராம காதை நுழைந்தது - நாடகமானது! நாட்டிலே பவனி வந்தது!

கம்பரே கூட கனவு கண்டிருக்க மாட்டார் - நாம் பன்னீரா யிரம் பாடல்கள் வாயிலாக எழுதிய இராம காதைக் கருவை, ஓர் உருவாக்கி, அதை ''நீதி தேவன் மயக்கம்'' என்ற நாடகமாக எழுதும் அறிஞன் ஒருவன் எதிர் காலத்திலே பிறப்பான் என்று!

இராம காவியம் தீட்டிடக் கம்பர் என்ன பாடுபட்டிருப்பாரோ...? அதுவும் நமக்குத் தெரியும்!

ஆனால், அந்த பன்னீராயிரம் பாடல்களைக் கொண்ட கவிதைப் பூக்களை, இரக்கம் என்ற ஒரு பொருளிலா அரக்கன் என்ற கம்பரது நாராலேயே தொடுத்து, நீதி தேவன் கழுத்திலே

மாலையாகச் சூட்டி, மக்கள் மன்றத்திடம் நீதி கேட்டவர் அண்ணா!

சிரம் பழுத்த அறிஞர்கள் எல்லாம், அந்த மாலையைத் தங்களது சென்னிகளைத் தாழ்த்திக் காட்டிச் சூட்டிக் கொண்டு மகிழ்ந்தார்கள்.

''மெயில்'' ஏடே! மெயிலுக்குப் பாரம் தாங்கும் 'ஜெயபேரிகை' தோள்களே!

கம்பரையும் மிஞ்சும் ஓர் அறிஞனின் கம்பரசம் ஏடு, உங்களை ஓடஓட இப்போது விரட்டி வாதமிடுவதைப் புரிந்து கொண்டீர்களா - இல்லையா?

அறிவு, கவிதையிலேதான் அரும்ப வேண்டுமா? ஏன், உரை நடையிலே உலா வந்தால் - உங்களுடைய உந்திகள் ததிங்கணத்தோம் போட்டு ஊஞ்சலாடுமோ!

இதுதான் ஓர் இலக்கிய விமரிசன எழுத்தாளனின் தனித் தன்மை மிக்க ஆற்றல்! சக்தி! வல்லமை! அறிவு தீட்சண்யம்! மனசாட்சிக் கோல்!

சமத்துவ சமன் தூக்கும் தங்க எடை போடும் தராசுக் கோலிலே - விறகுக் குச்சிகளை எடை போட முன்வரலாமா ''மெயில்'' ஏடே?

''கம்பரசம்'' பற்றிக் கேள்வி கேட்பவர்களுக்கு அதன் முழுக் கதையை ஓரளவு சுருக்கி உரைத்தேன். விரித்தால் பெருகும்! விலா எலும்புகளை நொறுக்கும்.

ஓர் இலக்கியமோ, வரலாறோ, வேறு அறிவு எதுவோ, ஆதரவும் - எதிர்ப்பும், அவைகட்கு எப்போதும் எங்கும் எழுவதென்பது இயற்கையே!

அந்த இரு நோக்கு விமரிசனங்கள், பிற்காலத்தில் வரும் ஆராய்ச்சியாளர்களுக்குரிய அறிவுத் தாயின் தாய்மைச் சின்னப் பாலாகவும் அமையலாம் - இல்லையா பேரிகைக் காந்தரே?

தமிழ் இலக்கியத்தையும் - வரலாற்றையும் ஆய்வு செய்த அறிஞர் பெருந்தகை டி.எஸ்.வையாபுரி பிள்ளை அவர்கள்,

தமிழறிஞர்களின் ஆய்வுக்கு முரண்பாடாகவே ஆராய்ச்சிகள் புரிந்து பல நூற்களைத் தீட்டவில்லையா?

அதனால், அறிஞர் வையாபுரி அவர்களை தமிழ்த் துரோகி என்று எழுதி, பேசி - தமிழ்க் குறும்பர்கள் சிலர் குசும்புகளை எழுப்பவில்லையா?

தமிழை, ஆராயத் தகுதி படைத்தவர்கள் எல்லாம், பிள்ளையினுடைய நூற்களை ஒதுக்கித் தள்ளிவிட முடியுமா? தள்ளி விட்டார்களா?

எந்த நூலகச் சாலைகள், இந்த மேதையினுடைய நூற்களை எல்லாம் - "ஏலேன் ஏலேன்" என்று, எகிறி எட்டி உதைத்து விட்டன?

ஓர் இலக்கியத்தை அல்லது வரலாற்றை, ஆதரித்தே விமரிசனம் செய்ய வேண்டும் என்பதுதான் விமரிசனமா? அதுதான் - அதன் இலக்கணமா?

உலகத்தில் எவ்வித செயலுக்குமே எதிர்ப்பும் உண்டு - ஆதரிப்பும் உண்டு!

அண்ணா அவர்கள்கூட - எங்கும் கம்பரை எதிர்த்து விமரிசனம் செய்யவில்லையே! எண்ணற்ற இடங்களில் கம்பர் திறமையைப் புகழ்ந்து பெருமைப்படுகிறார் - போற்றுகின்றார் - வியந்து பாராட்டுகின்றார்!

கம்பர், தான் எடுத்துக் கொண்ட காவியப் பாத்திரங்கட்கு, எப்படியெல்லாம் காமச் சுவையால் மெருகேற்றியுள்ளார் என்பதைத்தான், அவர் கம்பரசம் நூலில் சுட்டியுள்ளாரே - தவிர, கம்பரது தமிழ் மாண்புக்கு அணுவென்ன, 'கோண்' அளவு, 'துமி' கனம் கூட மாசு கற்பித்து அவமதித்தவர் அல்லர் அண்ணா!

தேவ மாக் கதையில் இத்தகைய சிற்றின்பக் குறைகள் இருப்பது நியாயமா? தேவையா? என்பதே கம்பரசம்! அண்ணாவின் எண்ணம்!

இதுவா ஆபாசம்? இதுவா கேடு? விமரிசனம் புரியும் அறிவுடையார் எவரும் இதனை ஏற்பரோ - இகழாரோ -

இம்மியளவு நூற்புலமை இருந்தால், என்னய்யா கூறுகிறீர் மெயிலாரே!

அந்த சமயத்தில், அதாவது 1944-ஆம் ஆண்டில், காந்தி பெருமான் சென்னை மா நகர் வந்தார். இந்தி பிரச்சார சபை ஆண்டு விழாவிலே பேசினார்!

அப்போது அவரிடம், நிருபர்கள், "தமிழ்நாட்டில் சிலர் இராமாயணத்தை எரிக்க வேண்டும் என்கிறார்களே" - என்று கேள்வி கேட்டார்கள்!

அதற்கு மகாத்மா காந்தியடிகள் என்ன கூறினார் தெரியுமா? "நான் வணங்குவது இராமாயணத்திலே வரும் தசரதன் மகனை அல்ல - சீதையின் புருஷனை அல்ல" என்றார்!

உடனே அண்ணா அவர்கள், தனது "திராவிட நாடு" வார ஏட்டில், ஒரு தலையங்கம் எழுதினார்!

"எரியிட்டார் - என் செய்தீர்?" என்று, கம்ப இராமாயணம் தாங்கிகளைக் குடைந்துக், குடைந்துக் கேட்டார்!

அப்போது ஆமையானவர்கள், இப்போது - அண்ணா சிலை அமையும் நேரத்தில் - விசை வேக முயலாகி விட்டார்கள் - பாவம்!

"மவுண்ட் ரோட்டில், குமரிக்கோட்டம் கண்ட - "கம்பரசக் கர்த்தாவுக்கு சிலையா?" என்று, அழுக்காற்றால் கதைக்கிறார்கள்! புழுதியை வாரித் தூற்றுகிறார்கள்!

ஆங்கில ஏடான ""Madras Mail"" இதற்கு ஆலவட்டம் வீசுவதைக் கண்டுதான் நாம் ஆராத் துயருருகின்றோம்! என் செய்வது அது பத்திரிகைச் சாதி அல்லவா?

இந்தப் புழுதி, அண்ணாவின் காலிலே ஒட்டி உதிரும் தூசியைக்கூட அசைக்காது! இவர்கள், கம்பூன்றும் இலக்கியக் குத்துக் கோலர்களே தவிர, வேறு யார்?

"கம்பரசம்", "ரோமாபுரி ராணிகள்", "குமரிக்கோட்டம்", "ஆரிய மாயை" போன்ற புத்தகங்கள் பெயர்களைக் கூறியே அண்ணா சிலையமைப்பு விழாவைத் தடுத்திட நினைக்கிறார்கள் இவர்கள்!

நம்முடைய முகத்தின் அசிங்கத்தைக் கண்ணாடி காட்டுமானால், - அது கண்ணாடியின் குற்றமல்ல!

முகத்தின் குற்றமாகும்! மனிதத்தின் மீது படிந்துவிட்ட சில மாசுகள் அந்த எதிர்ப்புப் பண்புகள்!

கம்பராமாயணம் என்ற முகத்திற்குக் கம்பரசம் ஒரு கண்ணாடி! - அவ்வளவுதான்! அதைப் பார்க்கும் நோக்குக் கேற்ப அது பளபளக்கும் - ஆடிக் காட்டிடும் - எதிரொலிக்கும்!

கம்பரது காமச் சுவையை எடுத்துக் கூறும் கம்பரசக் கர்த்தா அண்ணாவுக்கா சிலை என்றால், அந்தச் சுவைகளைத் தனது காவியத்திலே செருகி நடமாடவிட்ட சுவிச் சக்கரவர்த்தி கம்பருக்கேன் சிலை? கேட்பது தவறா?

அவ்வாறு விளித்து, தமிழோடு அற்புதமாக விளையாடிய கம்பருக்குச் சிலை வைப்பதைத் தமிழறிந்த எவனும் வழுக்கி விழுந்தும் கூடத் தடுக்கமாட்டார்கள் - அப்படித் தடுப்பவன் தமிழனும் ஆகான்!

கம்பரசம் எழுதிய கண்ணியவான்தான் - அறிஞர் அண்ணா அவர்கள்தான் - கம்பர் பெருமானுக்கும் சிலை வைத்தார்! காரணம் - தமிழறிந்த - தமிழாய்ந்த தலைவர் அவர் என்பதால்!

இலக்கிய நோக்கோடு அண்ணாவை நோக்குவோர், அவரை இலக்கிய எதிரியாகக் கருதுகிறார்கள்! இலக்கிய விமரிசனக் கர்த்தாவாகவும் அவரை நினைப்பதில்லை! எழுதுகின்ற இலக்கியனை விட - விமர்ச்சிப்பவன் வித்தகனாக விளங்கும் தகுதி வேண்டுமே!

காரணம், விமர்சன இலக்கணமே புரியாதவர்கள்! அதன் அருமை பெருமை தெரியாதவர்கள் அவர்கள்! அதனால், அண்ணாவை அரை வேக்காட்டுச் சிந்தனையால் தாக்குகின்றார்கள்!

அறிஞர் அண்ணாவுக்கு சிலை அமைக்கின்ற நோக்கமே, அவர் ஓர் இலக்கியக் கர்த்தா என்ற நினைப்பிலே அல்ல!

எண்ணற்ற நூற்களை - எல்லாத் துறைகளிலும் எழுதிய ஓர் எழுத்துலகச் சிந்தனையாளரை - இலக்கிய மறுமலர்ச்சியாளர் என்று ஏற்காதவர் எப்படிப்பட்டவராக இருப்பர்?

அவ்வாறு ஏலாதவர்களை தாயுமான சுவாமிகள் பாடியபடி, ''கல்லாத பேர்களே நல்லவர்கள் - நல்லவர்கள் - கற்றும் அறிவில்லாதபோது'' என்ற அந்த பட்டியலிலே சேர்ப்போம்! அது போகட்டும்...!

அப்படிப் பார்த்தால், மவுண்ட் ரோட்டிலே உள்ள சிலைகள் எல்லாம், என்னென்ன - இலக்கியங்களை எழுதிக் கிழித்து விட்டன? பிறகு, ஏன் சிலை?

அரசியல் வித்தகர் திரு. சத்திய மூர்த்தி அவர்கள் ஒரு கலை ரசிகரே தவிர - நாவலரே தவிர - வேறு என்ன இலக்கியங்களை எழுதித் தள்ளிவிட்டார்! பிறகு அவருக்கு ஏன் சிலை?

''கம்பருக்கு ஈடாக அண்ணாதுரையைத் தரம் பார்ப்பதா?'' என்று கேட்கும் ''மெயில்'' பத்திரிக்கையே!

கதைக் கர்த்தா கம்பருக்கு வசன நாடகம் எழுதத் தெரியாது - எழுதியதில்லை! அண்ணா, நாடக உலகிலே பெர்னாட்ஷா - அதற்காக சிலை!

காவிய மேதை கம்பர் நடித்து எவன் பார்த்தான்? வேண்டுமானால், கவிதையிலே நடிக்கலாம் அவர்! அதற்கா சிலை? என்று கேட்காதீர்!

அறிஞர் அண்ணாவுக்கு சிலை நிறுவுவதைத் தடுக்கும் நீங்கள் கழுத்தறுப்பான் சுற்றமானால், நாளை சோற்றுக்கும் - துணிக்கும்கூட அலைவீர்! நீங்கள் மட்டுமல்ல - உமது சுற்றமும் - பிள்ளைக் குட்டிகளும் - ஜாக்கிரதை!

கம்பர் பெருமான் நாவலர் அல்லர் - அவருக்குப் பேசத் தெரியும் என்பதற்கு! கம்பனார் எழுதுகோல், 'நா'வாக மாறி அவர் எழுதிய கம்பராமாயண அகலிகைப் படலத்தில் 'அலர்' எழுப்புவதை - நாம் காண்கிறோமா! - இல்லையா?

அறிஞர் அண்ணா நாவுக்கரசர்! அவனியைத் தனது காலடியிலே மயங்க வைக்கும் அப்பர் பெருமான்!

இங்கே மட்டுமல்ல, கற்றார் அவையிலே, 'நா' நயத்தோடு நடமிட்டவர் - அமெரிக்க மண்ணிலே!

கம்பர்பிரான் ஒரு ஜனநாயகவாதி அல்லர்! ஆனால், அறிஞர் அண்ணா ஏழாம் நூற்றாண்டின் ஜனநாயகவாதியான திருநாவுக்கரசர்!

"நாமார்க்கும் குடியல்லோம் - நமனை அஞ்சோம்" என்று பல்லவ மா மன்னனை; மகேந்திரனை எதிர்த்துக் குரல் கொடுத்த பல்லவ மண்ணிலே பிறந்த அறிவரசர் அண்ணா.

கம்பருக்கு ஓர் அரசியலை எப்படி ஒற்றுமைப்படுத்தலாம் என்று தெரியாது! அதற்கு இராமாயணமே சான்று!

அதுமட்டுமல்ல, அவருக்குக் கொடுத்த பொன்னுக்காக, "கூலி வாங்குமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே!" என்று, பூதச் சுவரைக் 'காக்கா' பிடிக்க வெண்பா பாடியவர்.

அவர் கவிதைக்கு உயிர்ப்புச் சக்தி உண்டென்றால், மீண்டும் அவர் எழுப்பிய சுவர் சரிந்து விழுந்திருக்குமா?

அறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்ச் சமுதாயத்தை - அரசியலில் ஒற்றுமைப்படுத்தும் சக்தி பெற்றவர்! அதனால், தமிழ் மக்கள் அவருக்குச் சிலை எடுத்தார்கள்!

போதுமா மெயில் நாளேடே! அறிஞர் அண்ணாவுக்கும் - கம்பருக்கும் உள்ள தரா தரங்கள் - ஏற்றத் தாழ்வுகள்! காலத்திற்கு ஏற்ற கோல - சீலங்கள்!

கம்பர் பெருமான் காவியத்தை நான் மதிக்கிறேன்! காரணம், அவர் தமிழுக்குப் பெருமை சேர்ந்த வித்தகர்களுள் ஓர் விந்தையாளர் என்பதால்!

எங்கள் உடலிலே ஓடுவது தமிழ் ரத்தம்! தமிழ்ச் சொரணை - தமிழ் உணர்வு! தமிழ்ப் பண்புகள் குடி கொண்டிருக்கின்றன.

அதனால், கம்பருக்கு சிலை எடுத்ததை வரவேற்கின்றோம்! வணங்குகின்றோம் - சிலை அமைத்த அரசியல் இலக்கியச் சிற்பியைப!

இந்த இருபதாம் நூற்றாண்டின் அரசியல் நெரிசலிலே, கம்பனைவிட, அறிஞர் அண்ணா அவர்கள் - எல்லாத்

துறைகளிலும் ஞான ஞாயிறானவர்! அதனாலே, சிலை - அவருக்கு!

காரணம்! கவிச் சக்கரவர்த்தி கம்பரும் தமிழன்! அறிஞர் அண்ணாவும் தமிழன்! நாங்களும் தமிழர்கள்! நடப்பதும் தமிழறிஞரின் ஆட்சி! எனவே, சிலை அண்ணாவுக்கு! என்ன மெயிலாரே - சரிதானா நான் சொல்வது?

விடுத்த வினாக்களுக்குரிய விடை கிடைத்திருக்குமே - விளக்கமாக! வியக்கின்றீரா அல்லது வியர்க்கின்றீரா மெயிலாரே?

✤ ✤ ✤

# 3. உலகத் தமிழ் மாநாட்டில் கவிஞர் அப்துர் ரகுமான்!

முனையொடிந்த அறிவு, சில நேரங்களில் கணை தொடுக்கும் போது, கடுமையான விமரிசனத்திற்கு அந்த மூளையின் சொந்தக்காரரை ஆளாக்காமல் விட்டு விடுவதே - பஞ்சமா பாதகத்தில் ஒன்றாகிவிடும்!

சென்னை மாநகரில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு - வானை நோக்கி வட்டமிடும் புகழாகிவிட்டது.

உலகத் தமிழ் மாநாடு, ஓர் ஆராய்ச்சிப் பேழையாகிவிட்டது.

உலகத் தமிழ் மாநாடு, அறிவாளிகள் நடமாடும் அரங்கமாகக் காட்சி தந்தது!.

அத்தகைய மாநாட்டில், இழிவான ஒரு நிலைமை ஏற்படு மானால், அது அந்த மாநாட்டின் தரத்தை மட்டும் குறைப்பதாகாது!

தமிழ் மொழியின் தரத்தையும் - திறத்தையும் குறைத்துவிடும் ஊனமான ஈனச் செயலாகிவிடும்!

உலகத் தமிழ் மாநாடு நிலை இவ்வாறிருக்க, உண்மைக்கு நேர் விரோதியாக நடமாடிடும் தற்காலிக அரசியல் எழுத்தாளர் திரு. ஜெயகாந்தன் அவர்களின் ''ஜெயபேரிகை'' என்ற நாளோடு, அந்த மாநாட்டைக் காளங்கப்படுத்திடக் கத்தியைத் தீட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டது.

16.1.68 அன்று "ஜெயபேரிகை" நாளோடு, "உலகத் தமிழ் மாநாட்டில் இழிதகை" என்ற தலைப்பிட்டு ஒரு கட்டம் கட்டிய பெட்டிச் செய்தியை வெளியிட்டது.

*"இந்திரா நீ விலை மாது!"*

என்ற பொருள்பட, உலகத் தமிழ் மாநாட்டுக் கவியரங்கத்தில் கலந்து கொண்ட கவிஞர் திரு. அப்துர் ரகுமான் பாடினாராம்!.

அவ்வாறு பாடிய கவிஞருக்கு, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களால் முதல் பரிசாகத் தங்கம் ஒன்றும் அளிக்கப்பட்டதாம்!

கவிதை ஆராய்ச்சியில் இறங்கி, தனது நொந்து போன மூளையை "ஜெயபேரிகை" நாளேடு, இந்தப் பாக்ஸ் செய்தியில் காட்டியிருக்கிறது!

'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்' என்பார்களே - அதுபோல, அரசியல் கவிதா உணர்வு பொங்கி வந்துவிட்டது; 'ஜெயபேரிகை" ஏட்டிற்கு!

கவிதை என்றால் என்ன என்றாவது தெரியுமா அந்த பத்திரிக்கைக்கு? அதன் எழுத்தர்களுக்கு!

கவிஞன் உள்ளத்தில் ஊறுகின்ற உணர்ச்சிகள், யாப்பு இலக்கணம் என்ற அரங்கத்தில் ஆடும்போது, அவை கவிதைக் கலை வடிவம் பெறுகின்றது!

கவிதையில் நேரடியான பொருட்களைப் பார்ப்பதும் அவற்றைக் கொண்டு கூட்டி பொருள்களைக் கூறுவதும் - மடக்குக் கவிதைகளிலிருந்து அதன் உரைகளை உரித்துப் பார்ப்பதும் - சிலேடைத் திரையிலே இருந்து அதன் அர்த்தங்களை நீக்கிப் பார்ப்பதும் - தேர்ந்த கவிஞர்களுக்கு மட்டுமே உண்டு!

ஒரு கவிஞர், தனது கருத்தை எடுத்துச் சொல்லும் போது அவர் கூறுகின்ற பொருளை ஆழ்ந்து - அகழ்ந்து நோக்க வேண்டும்!

அதை விட்டுவிட்டு - வேறு கோணத்திலே அக் கவிஞர் கூறும் பொருளை ஆய்வு செய்தால், அது ஆராய்ச்சி புரிபவரின் போக்கே தவிர, கவிஞருடைய நோக்காகாது!

''மாடு இழந்தேன்'' என்று ஒரு தொடர் வருவதாக வைத்துக் கொள்வோம்!

''ஜெயபேரிகை'' ஏடு, இதற்கு என்ன பொருள் கொள்ளும்?

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் சின்னமான காளை மாட்டை இழந்தேன் என்று கூறும்! இல்லையா? காரணம் 1967 - தேர்தலில், 'பேரிகை' சுமந்த மாடுகளை மக்கள் விரட்டியடித்து விட்டார்களே என்ற கோபமும் வரும் இல்லையா?

அதுவல்ல அதற்கு அர்த்தம்! மாடு என்றால் செல்வம் என்ற ஒரு பொருளும் உண்டு!

'மாடு இழந்தேன்' என்கின்ற போது, அதிலே இரண்டாம் வேற்றுமை உருபு மயங்கிக் கிடக்கின்றதே, புரியுமா 'பேரிகைக்கு?

'காடு சென்றேன்' என்ற மற்றொரு தொடரும் வருவதாகக் கொள்வோம்!

இதற்கு என்ன, 'பேரிகையே' உரை காண்பாய்?

'காடு சென்றேன்' என்று அறைகின்றபோது, காட்டிற்குச் செல்கிறேன் என்ற நான்காம் வேற்றுமை உருபு எப்படித் தொடர்ந்து வருகின்றதோ - அதனைப் போல!

மாடு இழந்தேன் என்று கூறினால், செல்வம் இழந்தேன் என்று பொருளாகும்! இது இலக்கண மாயாஜாலம்! இதைப் படித்ததோ - இல்லையோ 'பேரிகை!

ஆனால், 'ஜெயபேரிகை' அழுக்காற்று மூளை, காளை மாட்டை இழந்தேன் என்ற பொருளையே திடுதிப்பென்று கூறி, எதிரியை மடக்கும்! இல்லையா?

திருப்பி, என்னய்யா இது என்று கேட்டால், வெகு ஜன யதார்த்தம் - பதார்த்தம் என்றெல்லாம் கூறி பாமர மக்களைக் குழப்பும்!

அந்த பகையைத் திருப்பி, அதே பொறாமையின் முதுகுத் தோலை உரிக்கும் போது, தமது துணியைக் காணோம் - துண்டைக் காணோம் என்று அலறித் திணறி ஓடும் போதுதான் - உண்மை உணர்வே அதுகளுக்கு உந்தியெழும்!

மாடு என்பதற்கு, 'பேரிகை' கொள்கின்ற அறிவீனமான பொருள்படி பார்த்தால், செல்வம் என்பது மிருகமாக மாறிவிடதா?

அட பிரம்மஹூர்த்தி ஏடே! அது பொருள் கொள்பவனின் சிந்தனைக் குற்றமே தவிர, மாடு என்ற சொல் மீதா குற்றம் சுமத்துவான் அறிவுடையவன்?

எழுதுகோல் ஒன்று, சிந்தனைச் சிக்கல்களிடையே எல்லாம் சிக்கிவிட்டால், அது எப்படி கூவம் சேற்றைக் கூவிக் கூவிச் சந்தனமாக்கிக் கொள்ளும் என்பதற்கு, 'பேரிகை' பேனா ஓர் எடுத்துக்காட்டு! என்ன நான் அறைவது?

இந்த உதாரணம் உரைக்கவில்லை என்றால், இதோ மற்றோர் உதாரணம் - பார் ஏடே!

"தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை!"

அறிவு அவசரத்தில் தோன்றிய சிந்தனைக் கரு, இந்த வாக்கியத்தை நோக்குமானால்,. 'பொன்னி என்ற விலைமாதுக்குக் கம்பன் அடிமை' என்று அரற்றும்! அல்ல அதற்குப் பொருள்!

தா - என்றால் தாமரை என்று உரை!

சி - என்றால், தாமரையிலை மேல் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீதேவியாகிய பொன்னி என்பது விரிவுரை!

அதாவது,. திருமகள் என்று அர்த்தமாகும்! கம்பன், இலட்சுமி தெய்வத்திற்கு அடிமை என்பதுதான் உட்பொருள்!

சிலேடைச் சொற்களை அறிவு இருப்பவன் பிரித்துப் பார்க்கின்ற நேரத்தில், அதில் கிடைக்கப் பெறுகின்ற சில அரிய கருத்துக்கள் இவை!

சிலேடைச் செய்யுட்களுக்குள் புகுந்தால், இதுபோன்ற எண்ணற்றப் புதிய கருத்துக்களைப் புகுத்தியிருப்பவனால் மட்டுமே பெற முடியும்!

ஏ, பேரிகையே ! இதோ பார் குறும்பும் - குத்தலுமாக நகைச்சுவையோடு பாடும் ஆசு கவிஞன் காள மேகத்தின் ஒரு வெண்பா பாடலை!

சிலேடைச் சொற்களின் அற்புதங்கள் - அப்பாடலில் எப்படி ஆட்டம் போடுகின்றன என்பதைக் கவனி

"... கெட்டேழும் குலைந்து நடுநடுங்கிப்

பூதி கொப் பாகவேன்றே போய்விடுமே - ஆதி

நரகாட் டகவரியை நற்சரப மாகிச்

சுருக்கா விடினஞ் சுணி!"

இந்த பாடலிலே வரும் முதல் சீர், எப்படிப்பட்ட ஆபாசச் சொல்லைத் தாங்கி வந்திருக்கிறது - பார்த்தாயா?

ஈற்றடியின் கடைச்சொல், என்ன சொல்லை ஏற்று வந்துள்ளது கண்டாயா?

படிப்பதற்கே விரசம் தட்டுகின்ற அந்த இரு ஓரெழுத்து ஒரு மொழி வார்த்தைகள் ஆபாசமாக இருந்தால்கூட, பதம் பிரித்துப் பார்த்தால் அவை உயர்வான பொருளையே நமக்குப் பகுத்து நாட்டுகின்றது!

இந்தப் பாடல் சிலேடையான ஒரு பாடல்! இதன் உட்பொருளை நோக்குக 'பேரிகையே'

முதல் சீரிலே வருகின்ற 'கூ' என்றால், உலகம் என்று பொருள்!

தி, என்றால் - திக்குகள் எட்டும் என்பது உரை !

ஏழும் என்றால், ஏழு கடலும் என்பது விரிவுரை !

குலைந்து, நடுநடுங்கி - இதற்குக் கூடவா பொருள் புரியாமல் பத்திரிகை நடத்துவீர்?

பூதி என்றால் - விபூதி, அதாவது திருநீறு என்று அர்த்தம்!

திடீரென்று விபூதி மிஸ்ரா என்ற காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரை நினைத்து விடாதே ! அது தானே உனது பத்திரிக்கைப் புத்தி!

ஏனென்றால், அவர் உன் போன் ற தமிழர்க்கெல்லாம் கேவலம் "-இருபத்தைந்து ரூபாய் கொடுத்தால், இந்தியைக் கற்பார்கள்" என்று நாடாளுமன்றத்தில் நம்மைப் "பளார் பளார்" என்று நமது சுயமரியாதைக் கன்னத்திலே அறைந்தவர் அல்லவா? அதனாலே அவரை நினைவூட்டினேன் - வருந்தற்க!

பூதிக் கொப்பாக வன்றே போய்விடுமே -

என்றால், அவை விபூதியாகப் போய்விடுமே!

அதாவது சாம்பலாகப் போய்விடுமே

- என்று பொருள்! எப்போது அது சாம்பலாகப் போய்விடும் தெரியுமா ?

ஆதி நரகாட் டவரியை நற்சரபமாக்கி என்றால் - "அதாவது, ஆதி சேஷன் என்ற அரவம் கக்கிய நஞ்சை எடுத்து உண்ணும்போது, அந்த பாற்கடல் அமுதத்தைக் கடைகின்ற நேரத்தில்" என்று உட்பொருள்!

அதனைச் சுருக்காவிடில் - அதனைத் தடுத்து நிறுத்தா விட்டால்,, உலகமும் - எட்டுத் திக்குகளும், ஏழு கடல்களும் சாம்பலாகப் போய்விடுமாம்!

யார் சுருக்காவிடில் அவ்வாறு சாம்பலாகப் போகும்? இதன் உட்பொருள் புரிகின்றதா உமக்கு? தெரியவில்லையென்றால், புத்தி என்ற மத்தால் கடை கடையென்று கடை - உனது கபாலத்தை!

நஞ்சுணி - அதாவது நஞ்சை உண்ணுகின்ற நீலகண்டன் சுருக்காவிட்டால், உலகம் அப்படிப்பட்ட அதோ கதிக்கு ஆளாகி விடுமாமம்!

அப்பாடா ! இத்தகையப் பாடலைப் பாடியவர்தான் கவி காளமேகம்! அதுவும் சாதரண கவியல்ல அவர்; ஆசுகவி!

போதுமா சிலேடைப் பாடல்! வேறொன்றும் வேண்டுமா! இதோ பார்!

"கண்டீரோ பெண்காள் கடம்பவனத் தீசனார்

பெண்டீர் தமைச்சுமந்த பித்தனார் - எண்டிசைக்கும்

மிக்கான தங்கைக்கும் மேலே நெருப்பை யிட்டார்!

அக்காளை ஏறி னாராம்!"

'அக் காளை ஏறினாராம்! என்றவுடனே,. உனது 'பேரிகை' புத்தி, ஈனப் பொருளைத்தானே ஈட்டும்?

ஐயகோ அறிவீனமே! கேள் உட்பொருளின் மாண்பை !

கடம்பவனத்து ஈசனார், பெண்டீரைச் சுமந்த பித்தனாராம்! எந்த பெண்டீரை?

சிவபெருமான் சிரத்திலே உள்ள கங்கையையும் - பக்கத்திலே நிற்கும் பார்வதியையும் ஈசனார் சுமந்தவராம்! அர்த்த நாரீஸ்வரர் அல்லவா அவர்?

எண்டிசைக்கு மிக்கான தங்கைக்கு மேலே - அதாவது தன் கைக்கு மேலே நெருப்பை இட்டாராம்! இது கபால மூர்த்தி யினுடையத் திருக்கோலம் - பேரிகையே !

அக் காளை ஏறி னாராம் என்றால், அது சுட்டுப் பெயரா - இல்லையா?

அதாவது, அந்த காளை மாட்டின் மீது பெருமான் ஏறினாராம் -சவாரி செய்ய! வாகனமாகப் பயன்படுத்திட. சிவபெருமானார் வாகனம் காளையாயிற்றே! அதுதான் புரியுமே உமக்கு!

இவ்வுளவுதான் இந்தப் பாடலுக்குப் பொருள்!

இவ்வாறு சிலேடைத் திரைக்குள் மறைவான உட்பொருட்கள் - விழுமியக் கருத்துக்கள் இலங்குவது இலக்கிய வாடிக்கை மட்டுமல்ல - வேடிக்கையுங் கூட!

இத்தகைய நுண்மாண் நுழைபுலம் இல்லாத நாளேட்டின் எழுத்தாளர்கள் சிலர், சில ஏடுகளில் கூட்டுறவாக கவிஞர் அப்துர் ரகுமான் எழுதுகோலைக் கண்டு கூப்பாடு போட்டிருக்கிறார்கள்!

கவிஞர் அப்துர் ரகுமான், கவிஞர் திலகம்! இலக்கிய வித்தகர்! புலமை பூத்த புதுமைக் கவிஞர்! ஒரு பேராசிரியரும் கூட!

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் நடைபெற்றக் கவியரங்கத்தில், அப்துர் ரகுமான் 'பா' பாடிடும்போது இந்தி மொழியைக் கடுமையாகக் கண்டனம் செய்தார்!

கண்டனம் என்பதை விட, அதன் திணிப்பு இலட்சணங்களை விமரிசனம் புரிந்தார்!

விமரிசனம் என்றால், ஒரு பொருளை நிறைவுபடுத்தியோ, ஆதரித்தோ, புகழ்ந்தோ பேசவேண்டும் என்பது மட்டும் விதி அல்ல !

நிறைவுகள் என்ற பூக்களை மாலையாகத் தொடுக்கும் போது; அந்த மாலையிலே ஆடா தோடா இலைகளைக் கூட பசுமையாகவே நிரவித் தொடுப்பார்கள்!

கவிஞர் அப்துர் ரகுமானது தமிழார்வம், இந்தி மொழியை ஒரு விலைமாதுக்கு ஈடாக ஒப்பிட்டது!

அவர் எழுதிய உலகத் தமிழ் மாநாட்டு கவியரங்கப் பாடலின் வரிகளை - சற்று ஆழ்ந்து படியுங்கள்!

"இந்திரர்கள் எத்தினைபேர் வந்திடினும் கணக்கிலையாம்

இந்திராணி மட்டும் எல்லோருக்கும் பொதுமகளாம்"!

பிரதமர் இந்திரா காந்தியை "இந்திரா நீ விலைமாது" - என்று, அப்துர் ரகுமான் கவிதை பாடியதாகத் தப்பட்டை அடித்து எழுதிய பேரிகையே!! காங்கிரஸ்ஏடுகளே!

எங்கே நீ கூறியவாறு அவர் கவிதை பாடியுள்ளார்? உமது பொருள் தரும் கருத்துடை அந்த வரி எங்கே? சொற்றொடர்கள் எங்கே - அவர் பாடிய கவிதையில்?

உனக்குத் திருக்குறளின் 97-வது அதிகாரம் எள்ளளவாவது இருந்தால், ரகுமான் எழுதியதாக நீர் கூறும் கவிதை வரிகளைக் காட்டு பார்ப்போம் !

திடீரெனப் பெரும் பயணஓசை எழுப்பும் பேரிகையே! கோயபல்ஸ் பிரச்சாரம் செய்து உனது கோணிப் புளுகுகளைக் கொட்டி அளக்காதே!

அட...! 97-வது அதிகாரத்தை உதறித் தள்ளிவிட்டு 24-வது அதிகாரத்தைத் தேடி, இப்படியா கடை கடையாக தெருத் தெருவாக ஓடுவது?

சோறு அற்றவனானாலும் அவனிடம் நூறு மட்டும் இருந்தால், 99 - ஆகவே அவன் என்றும் உயர்ந்து நிற்பான்! ஆனால், நீ தான் நூற்றெட்டாளன் ஆயிற்றே!

திரு. அப்துர் ரகுமான் உலகத் தமிழ் மாநாட்டில் தான் பாடிய அக் கவிதை வரிகளை, அவர் தனது புலமை, இலக்கண இலக்கிய, அரசியல் நடைமுறை மாயா ஜாலங்களால், சில வியப்புமிழும் பொருட்களோடு பதம் குலைத்தார்!

மாநாட்டுப் பெருமக்களும், பார்வையாளர்களும் அறிவாளர் களும், தங்கள் அலையலையான கையொலிகளால் வங்கக் கடலலையினையே புறம் கண்டார்கள்!

இந்தி, இரா, இனி - விளையுமா அது? தமிழ் மண்ணில் மீண்டும்! என்று, ஒரு முறை பாடி அற்புதம் செய்தார்!

அதாவது, இந்தி மொழி இந்த மாநாட்டின் முடிவிற்குப் பிறகு, இருக்காது என்றார்! என்னவாயிற்று? கவிஞன் வாக்கு, கடவுள் வாக்காமே! பார்ப்போம் - அதன் போக்கைப் பொறுத்திருந்து!

இந்தி மொழி இனிமேல் விளங்காது - 'தமிழ் மண்ணில் விளையாது என்று சொல்லாடினார்' - அக் கவி அரங்கத்தில்!

செஞ்சொற் ரசிகர்கள் - அனைவரும் செம்மாந்து ஆரவாரமிட்டார்கள்.

கேளாக் காதர்களும் - அதை, ஏலா இதயங்களும் - ஓலமிடும் ஓநாய்களைப் போல, 'கோல்'களைத் தூக்கிக் கொண்டார்கள் - பேரிகை கொட்டிட !

கோள் கூறும் புத்தி நீண்டால், பிறகு, 'எழுதுகோல்' ஆடாதா என்ன? எதிர்வாதம் எழாதா என்ன?

"அடி இந்தி மூதேவி, நீ மத்திய ஆட்சி - அதிகாரங்களோடு ராணியைப் போல வேடமணிந்து தமிழகம் வருகிறாயே! நீ பொது மகளடி! விலை மாதடி என்ற பொருள் பட, விளக்க விந்தைகளை விளைவித்தார் - அப்துர் ரகுமான்!

"இந்திராணி மட்டும் எல்லோர்க்கும் பொது மகளாம்!" என்ற வரியை, ஒரு முறைக்குப் பன்முறை, நிறமாலைக் கண்ணாடி கொண்டு காண்பதைப் போல, இந்தியின் இலக்கிய வெறி மேனியை அக்கக்காக அங்கப் பிரதட்சணம் செய்தார்!

மாநாட்டுக் கவியரங்கிலே பாடிய ஒரு கவிஞர், இப்படியெல்லாம் பாடலாமா என்று தோள் தட்டிட எவனுக்கும் உரிமை இல்லை!

ஏனென்றால், கடவுளையே சாபம் கொடுப்பவன் கவிஞன்! அவரையே அடா புடா என்று அலங்கார உயர்வு நவிற்சி அணிகளிலே ஏசுவான்!

கவிஞன் என்பவனுக்கு அத்தகைய ஒரு சிறப்பான பொயட்டிக்கல் லைசென்ஸ் உண்டு! புலமை ஞானம் அவனுக்கு வழங்கும் உரிமைப் பரிசு அது!

அத்தகைய ஒரு கவிஞனுக்கு - இந்த இந்திப் பெண் மட்டும் என்ன தாடகையா? இல்லை பூதகியா?

"இருபத்தைந்து ரூபாய் கொடுத்தால், இந்தி ராணியை தமிழர்கள் அரவணைப்பார்கள்" என்று, இந்தி ராணி பெற்ற விபூதி மிஸ்ரா நாடாளுமன்றத்தில் 'நா' தட்டிப் பேசினாரே - ஏன், தெரியாதா உமக்கு?

அதனால்தான் அப்துர் ரகுமான், இந்தி ராணி நீ விலைமாது - பொது மகள் என்று அடித்தடித்து ஒரு முறைக்கு மும்முறை அறைகூவலிட்டுப் பாடினார் கவியரங்கில் - என்ன தப்பு அது?

ஆனால், 'ஜெயபேரிகை' என்ற காந்தத்திற்கு இந்த இரும்பு பலமிக்க கவிதை வரி மீது மட்டும் காமம் வருவானேன்?

பொதுத் தேர்தலில் காலிடறிய - விபத்துக்காளான திரு. காமராசர் கொள்கைக்கு, பிரதமர் இந்திரா காந்தி முரண்பட்டவர் - சிம்ம சொப்பனமானவர்!

திரு. காமராசரின் கால்களிலே ஒட்டி உதறியும், உதிராத தூசுகள் இந்த 'பேரிகை' சீட கோடிகள்!

பிரதமர் இந்திரா அம்மையார், திரு. காமராசரை எந்தெந்த இடத்திலே அவமானப்படுத்த முடியுமோ - அலட்சியப்படுத்த இயலுமோ, அவற்றை அடுத்தடுத்து ஆற்றினார்!

அந்த வஞ்சம்! அரசியல் வஞ்சகம்! கூனிசம் - சகுனியம், திரு. காமராஜர் அணி ஏடுகளுக்குக் குத்தி குடைவதால், இந்திராவை எந்த கோணத்திலாவது ஏசி, சாடி, பழி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அரசியல் வெறியாக இவ்வாறு ஊசலாடுகிறதோ!

அதனால், இந்திரா காந்திக்கு இவர்கள் ஏதோ இரத்தம் சிந்திய உறவு போல, "பிரதமர் இந்திராவை விலைமாது " என்று கூறலாமா?"

"உலகத் தமிழ் மாநாட்டிலே கவிஞர் ரகுமானை விட்டு பிரதமரை ஏச வைக்கலாமா? இது உலகத் தமிழ் மாநாடா அல்லாது இந்திரா காந்தி ஏசல் மாநாடா?"

என்ற வினாக்களைத் தொடுத்து, நம்மைச் சாடுவது போல பிரதமர் அம்மையாரைச் சாட ஆரம்பித்துள்ளார்கள் சிண்டிகேடர்கள்!

அவர்களுக்கு எடுத்துவிட்ட அரசியல் சொறிக்கு நம்மைச் சீப்பாக ஏந்திச் சொரிந்து கொண்டு, தங்களது அரிப்பைத் தணித்து கொள்ளும் நிலை - பேரிகை ஏந்திகளுக்கு!

கவிஞர் அப்துர் ரகுமான் எழுதிய 'இந்திராணி விலைமாது' என்ற கவிதைத் தொடரை, ஏ. பேரிகை ஏடே, 'இந்திரா நீ விலை

மாது' என்று உன்னை யார் தப்பும் தவறுமாகப் பதம் பிரித்துப் போடச் சொன்னது?

கவிதைகளை - அசை, சீர், தளை பிரிக்கத் தெரிந்தால் பிரி! இல்லையென்றால் கமண்டலங்களை ஏந்தி கொண்டு கொண்டு மண்டலங்களை வலம் வா!

இந்திராணி என்ற சொல்லை, இந்தி-ராணி என்று தானே பிரிக்க வேண்டும்?

இந்திரா, நீ என்று பிரித்தால், உனது கபாலத்திலே தமிழ் இலக்கண அறிவு காலி என்றல்லவா தெரிகிறது!

-இந்திராணி விலை மாது' என்ற பாடிய கவிஞர் அப்துர் ரகுமானுக்குப் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். முதல் பரிசு கொடுத்தார்ராம்!

அட...! கோயபல்சின் மறு அவதாரமே ! கவிஞர் ரகுமானுக்கு அல்ல எம்.ஜி.ஆர் கொடுத்தது!

'பூம்புகாரில் ஓர் நாள்', என்ற கவிதையைப் பாடியவர் கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம்! அவர்தான் புரட்சி நடிகரிடம் தான் பாடிய கவிதைக்காக - முதல் பரிசைப் பெற்றார்!

''பேரிகை'', நிருபருக்கு இது கூடவா தெரியாமல் போய்விட்டது? அல்லது, புரிந்தும் பத்திரிகை விற்பனைக்காகக் கூறும் இது ஒரு கோயபல்சின் புத்தியா?

உலகத் தமிழ் மாநாடு பற்றிச் சரியாக புரிந்துகொண்டு எழுதாத எழுத்தர்களும் ஜெர்னலிஸ்டுகளா?

''கொட்டடா 'ஜெயபேரிகை' - கோயபல்சிசம் வெல்க வென்று, என்று வேண்டுமென்றே தகர ஒலி எழுப்புகிறீர்களா? அல்லது தோலொலி கிளப்புகிறீர்களா?

எழுதுக, எதையும் அளந்து! எழுதுக - மெய்ப்பொருள் எது என ஓர்ந்து! ஏந்துக - எழுதுகோலை பாரதி கொட்டிய 'ஜெயபேரிகை' வெல்க என்று! அது தான் செறிவான அறிவு!'.

✤ ✤ ✤

உலகத் தமிழ் மாநாட்டுக் கவியரங்க சர்ச்சையில்

# 4. ஒரு கவிஞன் மானத்தை என்.வி. கலைமணிதான் காப்பாற்றினார்!

## கவிஞர் அப்துர் ரகுமான் - நன்றிக் கடிதம்!

"தங்கள் 19.1.68. நாளைய "மாலை மணி" நாளேட்டில் ""எரியீட்டி" தீட்டிய கட்டுரையைக் கண்டேன்"

"ஜெயபேரிகை" நாளிதழில் சிந்திக் கிடந்த பொய்க்குப்பைகளையும் காண நேரிட்டது"

என் சார்பாக - தவறு - உண்மையின் சார்பாக நின்று, "ஜெயபேரிகை"யின் கயமையை அம்பலப்படுத்தியதற்காக, என் மணமுவந்த நன்றியை 'மாலை மணிக்கும்' 'எரியீட்டி' புலவர் என்.வி. கலைமணிக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிரதமர் இந்திராவை என் பாட்டு விலை மாதாக ஆக்கவில்லை. அவர்கள் விருப்பப்படி அவர்கள் ஏடே அப்படிக் காட்டியிருக்கிறது. என் பாடல் வரிகளை இங்கே தருகிறேன்.

"இந்திரர்கள் எத்தனைபேர் வந்திடினும் - கணக்கில்லையாம்

இந்திராணி மட்டும் எல்லோருக்கும் பொது மகளாம்!"

இந்திராணி என்ற சொல்லை இந்தி ராணி என்று தான் பிரிக்க முடியுமேயன்றி, இந்திரா நீ என்று பிரிக்க, இறுதியிலுள்ள 'ணி' இடம் தராது என்பதைச் சாதாரண தமிழறிவு பெற்றவர்கள் கூட அறிவார்கள். ஆகவே, அவர்கள் அறியாமற் போனதில் வியப்பில்லை!

தமிழ் நாட்டில், ஒரு கவிஞன் மானத்தைப் புலவர் என்.வி.கலைமணி ஒருவர்தான் காப்பாற்றினார். 'பேரிகை' தோலை, ஈட்டி குத்திக் கிழித்து எறிந்துவிட்டது. இனிமேல் அங்கிருந்து ஓசை எழாது என்று எண்ணுகிறேன். புலவர் என்.வி.கலைமணிக்கு என் நன்றி.

அன்பன்
அப்துல் ரகுமான்
இசுலாமிய கல்லூரி, வாணியம்பாடி.
*23.1.1968*

✤ ✤ ✤

# 5. ''கலைஞர் கருணாநிதி எழுதிய சிலப்பதிகாரக் காப்பியம்! - தமிழுக்கு நேர்ந்த அவமானம்!''

நிமிர்ந்த குன்றின் மீது நிதானம் இழக்காத மேகக் கூட்டம் கனவு காண்கின்ற நேரத்தில், கீழே உள்ள கவிஞனொருவன் அதைப் பார்த்து விட்டால், மேகத்தை தேவனாக்கி விடுவான்!

வெறும் திருமணத்தால் மட்டும் பிறந்த பிள்ளைகள் அல்லர் - கவிஞர் பெருமக்கள்!

அவர்களுடைய அறிவின் ஆணிவேர், அந்தராத்மாவில் ஊன்றி விடுகின்றது!

கவிஞர்களைக் கனிய வைக்கின்ற கடமை - பொறுப்பு - இயற்கையின் அருளாகும்!

மையத்தின் வடிவமாக, இவ்வாறு தன்னையே உருவகப்படுத்திக் கொள்ளும் ஒரு கவிஞன், அழுக்காற்றுச் சேற்றில் அழுந்திச் சாவதில்லை!

அத்தகையக் கவிஞனுடைய வாழ்க்கை, நடைபாதையில் பிச்சையெடுக்கும் ஒரு தொழு நோயாளியின் வாழ்க்கை அல்ல!

ஆழமான ஆழியில் மூச்சடக்கி எடுக்கின்ற முத்தும் - கவிஞனும் - எடையில் - நிறையில் ஒத்தவர்கள்!

ஆனால், கவிஞர் என்றும், கவியரசு என்றும், தன்னை அழைத்துக் கொண்ட திரு. கண்ணதாசன் அரசியல் துறையில் யார்?

கனிவதற்கு முன் வெம்பிய கனி!

அரும்புவதற்கு முன் வதங்கிய பூ!

சிரிப்பதற்கு முன் சிணுங்கிய மூதேவி!

நரம்பறுந்த வீணை; அதன் நாதம்!

சுருதி கூட்டாத தொணி!

அவசரத்தில் வெளிவந்த ஒரு மனிதன், அவன் பிஞ்சாகி இருக்கும்போது, அவனைக் குறை பிண்டம் என்று கூறும் அவனி!

திரு. கவிஞர் கண்ணதாசன் அரசியலில் அந்த வர்க்கம்!

சிலப்பதிகாரக் காப்பிய நாடகம், கலைஞர் கருணாநிதியின் கை வண்ணம்!

பிச்சை எடுத்த இலக்கிய வரி வார்த்தைகளால் பிழைப்பு நடத்துகின்ற கவிஞர் கண்ணதாசனின் கவிதையைப் போலல்ல அது!

வண்டுகள் தேனைத் திருடும் போது, யாரும் அதைக் குற்றம் கூறுவதில்லை!

நிலவொளியைப் பச்சோந்தி திருடும்போது, அதன் உணவு அது என்று, இரக்கமுடையவன் விட்டுவிடுவான்!

மனைவியின் பாசத்தைக் கை பிள்ளை களவாடும் போது, 'குழந்தை ஒரு தொல்லை' என்று திரு. கவிஞர் கண்ணதாசனைத் தவிர, வேறு எந்த கவிஞனும் தனது குழந்தையினுடைய முதுகில் அடிப்பதில்லை!

திரு. கண்ணதாசன், கற்பனையைக் களவாடுவதில் கை தேர்ந்த கன்னக் கோல் கவிஞர்! அவரது சில பாடல் வரிகளை இலக்கிய அறுவை செய்தால், அவை அதற்கு பகிரங்கச் சான்றாக உள்ளன.

இந்த மனிதனுடைய எழுத்துக்கள், புதுச்சேரியிலும் பெங்களூரிலும் விற்பனையாக வேண்டிய பொறாமை வாசனை வார்த்தைகள்!

தமிழகம் மதுவிலக்கால் அவற்றை ஏற்காதபோது, இந்த கடுவனுக்குக் கடுங்கோபம் கனலாவது இயற்கைதானே!

கலைஞர் கருணாநிதியின் சிலப்பதிகாரக் காப்பியம் - கடல் தாண்டி அமெரிக்கா செல்கின்றது!

இதற்குக் காரணம், அவருடைய தனியாத தமிழ் வேட்கை

எழுத்தின் வேகம்!

கருத்தின் ஆழம்!

கற்பனை நயம்!

சொல்லாட்சி அற்புதங்கள்!

சித்திரத் தமிழின் சிங்கார நடை!

காதல் கட்டங்களில், அவர் எழுதும் பூந்தமிழ்ச் சொற்கள், மலர் மழையையே கொட்டும்!

வீர அரங்கத்திலே அவர் நடமாட விடும் புற நானூற்றுத் தமிழ் எழுத்துக்கள் ஒவ்வொன்றும், தமிழரது மறப் பண் பாடிடும் சேரன் செங்குட்டுவனின் அனல் மூச்சுக்களாக மாறும்!

அவலச் சுவையிலே, கலைஞரது தமிழ் நடை, நாடகம் பார்ப்பவனின் இதயத்தை உருக்கும் தங்க நிகர் சொற்கள்.

இத்தகைய இலக்கியத் தமிழ்ச் சக்தி கொண்ட சிலப்பதிகாரக் காப்பிய நாடகம், அமெரிக்கா செல்வதிலே தவறு இருக்க முடியாது.

தமிழ்த் தொண்டாற்றத் தன்னையே காணிக்கையாக்கிக் கொண்ட தமிழ் நெஞ்சங்களுக்குத்தான், கலைஞருடைய சிலப்பதிகாரக் காப்பியத்தின் அருமை - பெருமை தெரிய நியாயமுண்டு!

கிரந்தி நோயால் அவதிப்படுகின்ற எழுத்துக்களைச் சிந்தனையிலே ஏந்திக் கொண்டிருப்பவர், இந்த சிலப்பதிகாரக்

காப்பியம், வானூர்தியிலே முதல் பயணம் செய்வதைக் கண்டால், கிறுகிறுக்காமல் நிதானமாகவா இருப்பார்?

கவிதை அரும்பாகத் திரை உலகுக்குள் காலடி வைத்தபோது, திரு. கண்ணதாசன் ஓர் ஆடு தொடா இலை!

முதன் முறையாக மக்கள் சந்தையிலே அதை வாழை இலையாக உருவாக்கிப் பந்தலிலே வைத்தவர் கலைஞர் திரு. கருணாநிதி!

திரு. கண்ணதாசன் எருக்கம் பூ! முல்லை மலர் போல பக்குவப் படுத்தி அதைப் பூக்கடையில் காட்சி பெற வைத்தவர் மூனா கானா!

அந்த எருக்கம் பூ தப்பித்து, மறுபடியும் ஒரு பிரம்மச் சாரியின் கழுத்திலே போய் பூ மாலையாக விழுந்துவிட்டது.

கல்லுக்கும் மலருக்கும் தொடர்பு உண்டு!

சிலை வணக்கம் செய்பவர்கள், இஃதை நன்கு உணர்வார்கள்!

இந்திய தேசியப் பிரச்சினையில் 1967க்குப் பிறகு சிதில மடைந்த சிலை காமராசர்! எருக்கம்பூ, அவருக்கு மாலை யாகாமல் வேறு யாருக்கு ஆகும்?

அத்துமீறிய அழுக்காறு, கவிஞர் கண்ணதாசனின் அறிவைக் கப்பிக்கொண்டது!

அதனால்தான், 'நவசக்தி' நாளேடு வெளியிடும் - 'கடிதம்' என்ற ஏட்டில், 24.1.68-ஆம் நாளன்று கண்டபடி தாக்கி எழுதியிருக்கிறார் கவிஞர் கண்ணதாசன் - பொதுப் பணித்துறை அமைச்சர் கலைஞரை!

''கருணாநிதியின் பூம்புகார் சினிமா வசனத்தை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தார்கள்!''

அதை ''சிலப்பதிகாரக் காப்பிய நாடக''மென்று வெளி நாட்டுத் தமிழர்களிடையே விநியோகித்தார் அண்ணாதுரை?''

''தமிழுக்கு நேர்ந்த இந்த அவமானம், வேறு எந்தக் காலத்திலும் நிகழாத ஒன்றாகும்!''

- என்று திரு. கண்ணதாசன் "நவசக்தி"யின் இணைப்பு ஏடாக வெளியிடும் தனது "கடிதம்" என்ற நாளேட்டில் எழுதினார்!

தமிழ் நாடகக் கலையின் மறுமலர்ச்சி முன்னோடியாக இருக்கின்ற அறிஞர் அண்ணா அவர்கள், சினிமா வசனத்தில் மிகச் சிறந்த சமுதாய புரட்சியைச் செய்தவர்!

இந்த மறுமலர்ச்சி, தெனாலிராமன் சினிமா வசனம் எழுதிய சிந்தனைக்குப் புரியாவிட்டால் - அது யார் தவறு?

எனக்கும் தலை இருக்கிறது என்பதைத் தம்பட்டம் அடித்துக் காட்டுபவர் தவறா? அல்லது தலையை வழங்கிய இயற்கையின் தவறா?

இளங்கோவடிகளது இசை, நாடக, ஆன்மிக, தெய்விகப் பண்பாட்டுத் தமிழ் உணர்வு ஆய்வு, அதிகம் இல்லாமல் அல்லது மிகக் குறைவாக அமைந்திருக்கலாம்!

அதற்காக, அதை இளங்கோவடிகளது நாடக மறுபதிப்பு என்பதிலே குறை காணமுடியாது!

ஜூபிடர் பிக்சர்ஸ் எடுத்த கண்ணகி ஒரே வைதிகப்புடுங்கல் படம்! ஆனால், அதற்கு வசனம் எழுதிய இளங்கோவன் திறமையை என் போன்றவர்களால் பாராட்டாமல் இருக்க முடியாது.

கலைஞர் பூம்புகார், பகுத்தறிவாளர் மட்டுமே பார்க்க வேண்டிய படம்! ஏனென்றால், பொற்கொல்லர் சாதிச் சண்டைக்குச் சச்சரவு விளைவிக்காத விதை!

கலைஞரது கைவண்ணம் பெற்ற பூம்புகார் திரைப்படத்தை இன்றைய தமிழறிஞர்கள், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. உட்பட - அனைவருமே பார்த்துப் பாராட்டினார்கள்.

திரு. கண்ணதாசன் அறிவுக் கண்களுக்கு இந்த காட்சிகள் புலப்படவில்லையா? புலப்படும்! தெரிந்தும் கலைஞரைத் தாக்குகிறாரே, குறையறிவோடு விமர்சனம் புரிகிறாரே - ஏன்?

அதுதான் அழுக்காறு! அதனால்தான், திருவள்ளுவர் பெம்மான்கூட 'அதுவே சாலும்' என்றார்!

அதே அழுக்காறுதான், கவிஞர் கண்ணதாசனை அரசியலில் அனாதையாக்கிற்று!

சினிமா உலகில் அவர் சிறந்த பாடலாசிரியராகச் சிறக்கலாம்! அதோடு நிற்க வேண்டும். அரசியலிலும், சிவாஜியைப் போல அகலக் காலை அகற்றக் கூடாது! அசிங்கப்படவும் கூடாது.

அப்படி அகன்றால் என்னவாகும்! அவர் அரசியல் ஆவேசம் ஆமை புகுந்த வீடாகும்!

நடிகனா, நடிப்போடு நடமாடு! மார்லன் பிராண்டோவைக் கூட புறமுதுகிடச் செய்வேன் என்று சவால் விடு! நடிப்புலகம் கை கொடுக்கும்! சிவாஜியைப் பாராட்டும்!

அரிதாரம் பூசியவரெல்லாம், அரசியலில் காலடி வைத்து விட்டதால் - மக்கள் திலகமாகி விட முடியுமா - என்ன?

பூகோளப் பந்தில் ஒரு நடிகன் பத்தரையாண்டு காலம் ஒரு நாட்டை ஆண்டது, அதுவும் முதல் முறையாக செங்கோலேந்தியது - தமிழ் நாட்டில் என்ன! - இந்தியாவிலேயே எம்.ஜி.ஆர். ஒருவர்தான்!

இலக்கியம் ஒன்றைத் திரையோவியமாக்கி, அதை மக்களிடம் நடமாட விட்டவர் கலைஞர்!

இது, அவருக்கு இருந்த தமிழ்ப் பற்றால் ஏற்பட்ட ஆசை. அதற்காக, சினிமாவுக்கு வசனம் எழுதியவரெல்லாம் கலைஞராகக் காட்சியளிக்க முடியுமா என்ன?

இலக்கியம், சினிமாவாக ஆகக் கூடாதா? தவறா அது? சமுதாய வாழ்க்கை - அதனுள்ளே எதிரொலிக்கவில்லையா?

இலக்கியக் கோழை ஒருவனுக்கு மட்டும்தான் இந்த ஆசை இருக்கலாமே தவிர, கலைஞரைப் போன்ற ஆண்மையாளர்கள் எதிலும் துணிந்து நின்றே செயல்படுவார்கள்!

இலக்கியத்தை எங்கேயும் வைக்கலாம்! ஏனென்றால், அதன் மதிப்பு வானம் போன்றது!

இலக்கியமே தெரியாத காமராசர் முன்பு, கண்ணதாசன் தனது கவிதைகளை வைக்கும்போது, தமிழகத்தின் முன்னாலே, இலக்கியத்தை வைத்தக் கலைஞர் குற்றவாளி அல்லர்!

இலக்கிய அறிவோடு எழுதத் தெரியாதவர்கள் எல்லாம், சினிமா உலகில் இருப்பதால், சினிமா வசனம் கேவலமாக மதிக்கப்படுகின்றதா?

சிலப்பதிகாரக் காப்பிய நாடகம் நூல் வடிவிலே இருக்கும் போது - அது சிலப்பதிகாரமாகும்!

அதே சிலப்பதிகாரம் நிழற் பட வடிவிலே நடமாடும் போது - பூம்புகார் ஆகும்!

வெளி நாட்டுத் தமிழறிஞர்கள் கைகளிலே அது தவழும்போது, சிலப்பதிகாரக் காப்பிய நாடகமாகும்.

கலைஞர் கை வண்ணத்தால், சிலப்பதிகாரக் காப்பியம் தகுதி பெற்றது!

சிலப்பதிகாரக் காப்பியத்தால், கலைஞரும் தகுதி பெற்றார்.

ஊமை மூளைக்கும், முட மூளைக்கும், இது பொறாமையை உருவாக்குகின்றது என்றால், அதற்காகக் குட்டிச் சுவற்றிலே மோதிக் கொள்ள வேண்டுமே தவிர, கலைஞரிடம் கரடி விட்டு என்ன பயன்?

“வெளிநாட்டுக்காரன், இது சினிமா வசன மொழி பெயர்ப்பு தான் என்று அறிந்தால் சிரிப்பானா? சிரிக்க மாட்டானா? என்று கேட்கும் திரு. கண்ணதாசனாரே!

வெளிநாட்டுக்காரன் சிரிக்கின்றானோ - இல்லையோ, அது இருக்கட்டும் - உமது சிரிப்பைப் பார்த்தால் தான் பரிதாபமாக இருக்கிறது!

கீழ்பாக்கம் சிரிப்பை இலக்கியத்திலே காட்டினால், இலக்கியச் சிரிப்பு சிரிப்பவர்கள் மருத்துவ அறை கொடுப் பார்கள் - உமது சிந்தனை மீது! ஜாக்கிரதை!

திரு. கண்ணதாசன், 'பக்கெட்' என்ற ஓர் ஆங்கில சினிமாவைப் பார்த்திருக்க முடியாது! அப்போது கோப்பையிலே அவர் குடி புகுந்திருப்பார்!

அந்த பட வசனங்கள் எல்லாமே, இலக்கியம்! ஆங்கில இலக்கியம் தெரியாதவர்கள் - அதனருமையை உணர இயலாது!

'திருவருட் செல்வர்' என்ற கதை வசனத்தை எழுதிப் படம் எடுத்தார்களே, அது சினிமாவா? வசனமா? அல்லது புராண ஆதாரமா?

வெளிநாட்டுக்காரன் சிரிப்பானா? மாட்டானா? என்று கடாவும் கவியே, அவன் எந்த நோக்கத்தோடு சிரிப்பான் என்று எண்ணுகின்றீர்?

உன்னைப்போல ஒழுங்கற்ற சிந்தனையைச் சிறு வயதிலே பெற்றவர்கள் அல்லவே வெளிநாட்டுத் தமிழறிஞர்கள்!

விருப்பு - வெறுப்பு நோக்கத்தோடு இலக்கியத்தைப் பார்ப்பவர்கள் அல்லரே - வெளிநாட்டுக்காரர்கள்!

''திருடித்தான் புகழ் பெற்றான் சேக்ஷ்பியர்'' என்று அவர் நடத்திய வார இதழிலேயே எழுதிய மேதை அல்லவா திரு. கண்ணதாசனார்?

வெள்ளைக்காரனுக்கு மட்டும் அது தெரிந்திருந்தால் - உமது இலக்கிய வாத முதுகுத் தோலை அல்லவா உரித்திருப்பான்? தப்பித்தீர் நீர்! போம், போம்!

இலக்கிய விமர்சனத்தை யாரும் செய்யலாம்! அதுவும், ஆங்கில இலக்கிய விமர்சனம் செய்யத் தகுதியுடைய ஆளா நீர்?

அந்த அளவு நீர் என்ன ஆங்கிலப் புலமையுடைய ஜான்சனா? அல்லது தத்துவஞானி பிராட்லாவா?

''பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தை இழந்தாலும் இழப்போமே தவிர, சேக்ஷ்பியரின் இலக்கியங்களை இழக்கச் சம்மதிக்க மாட்டோம்'' என்று; இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் பெருமகன்

சிந்தனையால் பெருமை பெற்ற சேக்ஷ்பியரையே "திருடித் தான் புகழ் பெற்றான்' என்று பழி சுமத்திய ஆவியல்லவா நீர்?

தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் மாற்றுக் குறையாதோ! பாரிக்கு மகன் உண்டா? மகள்கள் உண்டா? இவை உமது கவிதை வரிக் கருத்துக்கள் தானே!

நீர் எழுதிய கவிதையிலே எத்தனை எச்சில்கள் இருக்கின்றன என்பதை ஆதாரங்களோடு நிரூபித்திட வேண்டுமா?

வெளிநாட்டுக்காரன் படம் பிடிக்கின்ற கருவிகளுக்கே தந்தை. அறிவியலை அம்புலியிலே நாட்டிய அற்புத அறிவாளிகள் - மேல் நாட்டினர்!

அவன் தயாரிக்கும் படங்கள் அத்தனையும், இயற்கை யோடும் - இலக்கியத்தோடும் ஒத்துப்போக வேண்டும் என்பதற்காகக் கோடிக் கணக்காகப் பணம் செலவிடுபவன்!

'பத்துக் கட்டளைகள்' என்ற படத்தை அவன் பிடிப்பதற்குப் பட்டபாடு, இயேசு பெருமான்கூட அனுபவித்திருக்க மாட்டார்!

ஓர் ஆதாரத்தின் அடிப்படையில் படம் பிடிப்பதென்றால், அவ்வளவு பிரசவ வேதனைகள் இருக்கத்தான் செய்கின்றன!

சினிமா வசனமாக இருந்தால்கூட, அது இலக்கியத்தோடு ஒன்றி இருக்கின்றதா என்றுதான் மேல்நாட்டார் பார்ப்பார்கள்!

'ஜூலியஸ் சீசர்' என்ற ஒரு படம் வந்தது, மக்களுக்கும் நினைவிருக்கக் கூடும்.

ஆனால், கவிஞர் கண்ணதாசன் அதைப் பார்த்திருக்கக் கூடுமோ - என்னமோ!

அந்த படம், சேக்ஷ்பியரின் இலக்கியம்! அதை வெளி நாட்டான் படம் பிடிக்கிற நேரத்தில், சேக்ஷ்பியர் வர்ணித்த மேகக் கூட்டத்தைக் கூட அவன் படம் எடுத்தான்!

அந்த மேகக் கூட்டம் எப்படி இருக்கும்? சிலர் கேட்கக் கூடும்! இரவு நேரமாக இருந்தால் கவிஞர் கண்ணதாசன் கட்டாயம் கேட்பார் அல்லவா?

அது பெங்களூர் சீதோஷ்ண நிலைபோல் இருக்காது! இலக்கிய தட்ப வெட்ப நிலைகளாக இருக்கும்!

அது எப்படி உனக்குத் தெரியும் என்று - நாளை உனது அரை குடம் அறிவு தளும்பும்!

ஆங்கில அறிவற்ற கண்ணதாசன், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் சி. சுப்பிரமணியம் அவர்களிடம் மூளைப் பிச்சைக்கு செவியேந்தலாம்!

இவ்வளவு விளக்கமாக - ஒரு மாணவனுக்குக் கூறுவதுபோல் ஏன் கூறுகிறேன் தெரியுமா?

அவசரப்பட்ட அரிப்போடு எழுதும் எந்த அழுக்காறாளனுக்கும் - **நான் கருத்து வழங்குவதில் பாராபட்சம் காட்டாமல் சமத்துவச் சுரபியை ஏந்துபவன்!**

ஆகவே, சிலப்பதிகாரத்தைப் படித்தறிந்த மேலை நாட்டானின் கையிலேதான், கலைஞர் கொடுத்திருக்கிறாரே தவிர, ஒன்றும் தெரியாத மண்டலங்களிடம் அல்ல!

எனவே, அவன் சிரிப்பதற்கு இதிலே ஒன்றுமில்லை! சிந்திக்க வேண்டுமானால் இடமும் இருக்கின்றது!

திரு. கண்ணதாசனாரே! சிலப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியமா என்று கலைஞரைக் கடாவி, உடனே அது நாடகக் காப்பியம்தான் என்று நீரே பதிலும் பகர்ந்துள்ளீரே - அப்போது பகலல்லவோ...!

"சினிமா வசனத்திற்குக் காப்பியம் என்று கலைஞர் பெயரிட்டிருப்பது அவசரத்தாலா அல்லது அறியாமையாலா?" என்று கேட்டிருக்கிறார் கவியரசு!

வெறும் சம்பவத்திற்காகப் பாட்டெழுதி கொடுத்துவிட்டு, அதற்கும் சப்ஜெக்ட் இருக்கிறது என்று கூறும் ஆளல்லவா திரு. கண்ணதாசன்!

பூம்புகார் என்றால் காப்பியம் என்ற பெயரும் உண்டு! பூம்புகாரில் சிலப்பதிகாரமும் உண்டு! பூம்புகார் என்றால் நாடகம் என்ற பெயரும் உண்டு.

இதில் என்ன அவசரம் ஆடுகிறது! கட்டியிருந்த கருப்பு - சிவப்புக் கரை வேட்டியை அவிழ்த்துப் போட்டுவிட்டு, கதராடைகளை மாட்டிக் கொண்ட அவசரமா இது?

திருவொற்றியூரிலே காமராசர் காலில் விழுந்து முக மண்ணைத் துடைத்துக்கொண்ட பின்பு, நேருவின் காலிலே சென்று நெடுமரமாக விழுந்துவிட்ட அவசரமா இது?

"பாதக் குறடெத்துப் பன்னூறு அடி அடிப்பேன்" என்று 'பா' எழுதிய பிறகு, பாவேந்தர் காலிலே சென்று விழுந்து தன்நிலை மன்னிப்புக் கேட்ட அவசரமா இது?

காங்கிரஸ் அரசியலே பிடிக்கவில்லை - தாய் கட்சிக்குத் தாவி வரட்டுமா என்று, கலைஞரைப் பெங்களூரிலே தங்கிக் கேட்டுக் கொண்ட அவசரமா இது?

திரு. கண்ணதாசன் ஒரு வாய் கொழுத்துப் போன பல்லி! அதற்கு அவ்வப்போது கழநீர் பானையிலே விழுவது வாடிக்கை!

அவசரத்தைப் பற்றிக் கவிஞர் கண்ணதாசன் விளக்கம் தருவதைப் பார்த்து, நிதானம் கை கொட்டி விலா நோகச் சிரிக்கின்றது!

"தமிழ் நாட்டில் சிலம்புச் செல்வர் என்றும் - பேராசிரியர் என்றும் உலா வருவோர், இது பற்றிக் கருத்து தெரிவிக்காததின் மர்மம் என்ன என்ற" கேட்கிறது கவி!'

எல்லாவற்றிலும் மர்மத்தைப் பற்றிப் பேசியே, ஈ.வே.கி. சம்பத்துடன் சேர்ந்து காங்கிரசுக்குத் தாவிய கவியே!

அரசியலில் அவர் வாழ்க்கை மர்மமாகி விட்டதால், தேசிய மர்மத்தில் தேய்ந்து போனவர் அல்லவா நீர்?

வாதங்களை எடுத்து வைக்கின்ற நேரத்தில் வற்றாத அறிவு வேண்டும் - வளமான சம்பவங்கள் வேண்டும்!

பேதங்களைக் காட்டுகின்ற நேரத்தில், புதிய திருப்பங்களையும் புகட்ட வேண்டும்.

கலைஞர் எழுதிய பூம்புகார் - திரைப்படமானது போல, கண்ணதாசன் அவர்களே, நீரும் ஒரு காப்பியத்தைப் படமாக்கும்! பார்த்துப் பாராட்டுகிறோம்!

தனக்கும் கீழே பூமி இருக்கிறது என்ற மதத்தில் எதையும் பேசாதீர் கண்ணதாசனாரே!

தலைக்கு மேலே ஒரு வானமும் இருக்கிறது - என்ற பயமும் இருக்க வேண்டாமா உமக்கு?

எதையும் எழுதும் போது சற்று எச்சரிக்கை மனமும் தேவை என்று எண்ணிப் பார்த்தாவது இனிமேல் எழுதுங்கள். எமது பேனா உம்மை ஏறுபோல் எதிர்த்து அறிவுக் களம் அமைக்காது - கவிஞரே!

✤ ✤ ✤

# தமிழ்ப் பண்பு

வாழ்க என்பது தமிழ்ச் சொல் மட்டுமல்ல, தமிழ்ப் பண்பு, கனிந்த மனத்துடன், மற்றவரின் வாழ்க்கை செழித்து, அவர் இன்புற்று இருப்பது, அவருக்கு மட்டுமல்லாமல், சமூகத்துக்கும் நல்லணி என்பதால், வாழ்த்துவது தமிழ் மரபு! அந்தச் சொல்லிலே இசை ஒலியும் இதயக் குழைவும் இருப்பதனை, இதயமுள்ளோர் எவரும் உணருவர்.

- அண்ணா

# 6. "கடிதம்" நாளேட்டில் டாக்டர் மு.வ.வை எதிர்த்துக் கவிஞர் கண்ணதாசன்

"இந்த தமிழ்ப் புலவர்கள் இருக்கிறார்களே, அவர்களை விடப் பேடிகள் உலகத்தில் இல்லை"

"ஒருவர் மந்திரியானால், அவர் கழித்துப் போடுவதுகூட வாசமடிக்கிறதா புலவர்களுக்கு?"

"இடத்துக்கும் - நேரத்துக்கும் கூத்தாடும் மு.வரதராசனார்களும் பிறரும் ஆண்களா? பெண்களா? இரண்டுக்கும் பொதுவா?

-12-1-68 கடிதம், நாளேடு

இதழில் கவிஞர் திரு. கண்ணதாசன்.

திரைப்படத் துறை கவிஞர் திரு. கண்ணதாசன் அவர்கள்தான் மேற்கண்ட வினாக்களை 'கடிதம்' என்ற நாளேட்டின் வாயிலாகத் தமிழக மக்களைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்.

"கோப்பையிலே என் குடியிருப்பு" என்று தன்னையே - தான், திரைப்படத்திலே அறிமுகப்படுத்திக் கொண்ட கவிஞர் பெருமானே, இந்தக் கேள்விகளை - நீர் எப்போது எழுப்பி - எழுதினீர்?

அறியாமை - மயக்கமும் - அகம்பாவக் களைப்பும் நீர் கேட்ட கேள்விகளிலே முடங்கிக் கிடப்பதால்தான் - நாம்

உம்மைக் கேட்கிறோம்! எப்போது ஐயா தோன்றின - உமக்கு இந்த வினாக்கள்?

பகலிலே நீர் எழுதியிருந்தால், டாக்டர் திரு-மு. வரதராசன் போன்ற பெரும் புலவரின் பெயர், ஓர் ஆண் மகனுடைய பெயர்தான் என்பதைத் திட்டவட்டமாகப் புரிந்து கொண்டிருப்பீர் அல்லவா?

டாக்டர் மு.வ. அவர்கள், ஆணா? பெண்ணா? அல்லது இரண்டுமற்றவரா? என்பதை, நீர் எப்படியய்யா பரிசோதனை செய்தீர்?

கவிஞர் திரு. கண்ணதாசன் நடக்கும்போது, யாராவது பார்த் திருக்கிறீர்களா? பெட்டைக் கோழி நடை! நொடிக்கு நொடி நாடகமாடிடும் பிடி நடை!

அவர் பேசும் வார்த்தைகளின் நெளிவு - சுளிவுகளோ, நிலன் நோக்கி விரல் கீறும் அணங்குப் பண்புடையவை!

இவர் போய் டாக்டர் மு.வ. அவர்களையும் - பிற புலவர் களையும், ஆணா? பெண்ணா? இரண்டுக்கும் பொதுவா? என்று கேட்கிறார் என்றால், காலத்தைத்தான் நாம் உமிழ வேண்டும் - இல்லையா?

இந்த வீராதி வீரர், சூராதி சூரரின் வீரம், தமிழ் நாட்டுக்குத் தெரியாதா என்ன?

கல்லக்குடிப் போராட்டாம், டால்மியாபுரத்தில் நடைபெற்ற போது - இந்தக் கவிஞரைக் காவலர்கள் கைது செய்து சிறையில் அடைத்தனர்!

அப்போது, இந்த வீரர் அழுத அழுகை, குழந்தைகூட அவ்வளவு அழுதிருக்காது போங்க! முகம் வீங்கி வீங்கி, முணகி, விக்கி விக்கி அழுத்தார்! இதுதான் இவர் சுபாவம்! - வீரத்தின் இலட்சணம்!

இவர் போய், புலவர்களைப் பேடி என்கிறாரே - அட, காலமே! - உன்னை எவ்வாறு, எதனால் அபிஷேகம் செய்வதோ?

“எப்படியாவது எனது அண்ணன் ஏ.எல். சீனிவாசன் அவர்களிடம் சொல்லி, ஜாமீனில் என்னை எடுக்கச் சொல் தம்பி”

- என்று தனது முதுகு வீங்கக் காவலர் உதைத்த உதைகளின் வீக்கத் தழும்புகளை, முரசொலி மாறன் அவர்களிடம் காட்டி, அழுது கதறிய மாவீரரே! நீரா, பேடிகள் என்கிறீர் புலவர் பெருமக்களை?

இந்தியப் பிரதமர் நேரு அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டும் போராட்டம் நடந்ததே - அதுதான் உமக்குப் புரியுமே கவிஞரய்யா!

இரவோடு இரவாக அன்று பெங்களூரிலே ஓடிப் போய் மறைந்து கொண்ட உமது வீரம், உனது வீட்டாருக்கு மட்டும்தான் தெரியும் என்ற நினைப்பா? உமக்கு.

புதிதாக நீர் குடிபுகுந்தீரே அரசியலில் - காங்கிரஸ் கட்சியில்! - “ தமிழ்ச் செய்தி”, என்று, நீர் பங்கு கொண்டு உருவாக்கிய நாளேட்டை, “நவசக்தி”யுடன் இணைத்துவிட்டோம் என்று திரு. ஈ.வி.கே. சம்பத் அவர்கள் அறிவித்து, அதன் கௌரவ ஆசிரியரும் நான்தான் என்று, அவர் உம்மை விட்டு விட்டு தன்னை மட்டுமே கூறிக் கொண்டாரே, நினைவிருக்கிறதா உமக்கு அந்த நிகழ்ச்சி?

வீரம் விழுதுவிட்டுத் தொங்கோ தொங்கென்று இப்படியும் அப்படியும் ஆடியபடியே அலைபாய்ந்த காங்கிரஸ் ஆலமரக் கவிஞரான நீர், அப்போது உமது நண்பர்களிடம் போட்டக் கூச்சலும் - ஆடிய ஆட்டமும் என்ன? - அதற்காக செலவு செய்த உமது பணம், வீணாகப் போய் விட்டதே என்று! அரற்றி, அலட்டிக் கொண்டீர் அல்லவா? அதாவது இருக்கிறதா உமது நினைவில்? அப்போது என்னவாயிற்று உமது வீரம், அந்த இடத்திலே?

இந்த இலட்சணத்தில், நீர் தமிழ்ப் புலவர்களைப் பார்த்து பேடிகள் என்கிறீர் - இல்லையா? அட, கேவலமே! கேவலமே!!

“இந்த தமிழ்ப் புலவர்கள் - இந்த மண்ணிலே பிறந்ததே அவமானம்” என்று எழுதும் கவிஞரே, “பெற்றாளே பெற்றாள்

- பிறர் நகைக்கப் பெற்றாள், ஏற்றோமற் றெற்று'' என்று ஔவை மூதாட்டி மும்முறை கூறிய பாடலடி - உமக்கும் பொருந்துமா பொருந்தாதா? நீரே கூறுமய்யா! - கவிஞரே!

உமக்கும் வீரத்திற்கும் என்னையா - ஒட்டு - உறவு? சம்பந்தம்?

''ஐம்பெரும் காப்பியத்திற்கு கருணாநிதியை விட அத்தாரிட்டி யார் இருக்கிறார்கள்!!'' - என்று, கேலி பேசி பொறுமும் அழுக்காறே!

ஐம்பெரும் காப்பியத்திற்கு எவனுமே அத்தாரிட்டி இல்லை! ஒரு தமிழ்க் காப்பியத்துள் ஒருவன் தனது தலையை விட்டுவிட்டானானால், அவன் செத்த பின்பும்கூட - அதன் ஆழத்தைக் கண்டுதான் மறைந்தான் என்று, எவனாலும் அறுதியிட்டுக் கூறமுடியாதே!

அவ்வளவு இலக்கியச் செறிவுள்ள காப்பியங்கள், காவியங்கள், செய்யுட்கள், பாடல்கள் ஏராளம் உண்டல்லவா - தமிழில்? தெரியாததா இது உமக்கு?

''அத்தாரிட்டி யார்'', என்று நீர் கேட்பதைப் பார்த்தால், கிரேக்கப் பேரழகி கிளியோபாட்ரா போதையூட்டும் திராட்சைப் பழரசக் கோப்பைகளிலே தமிழ் நாட்டுக் கொற்கை முத்துக்களைப் போட்டுக் கலக்கிக் குடித்தாளாமே-

அதைப்போல - கண்ணதாசனார் என்னமோ, தமிழ்க் காப்பியங்களை எல்லாம், ஒவ்வொன்றாகக் கரைத்துக் குடித்தவரைப் போலக் கேட்டுள்ளாரே! உமக்கு ஏனய்யா இந்தக் கேள்வி! தேவைதானா!

புலவர்கள் என்றால் - தமிழ், தமிழ் என்றால் புலவர்கள் என்று வாழும் நாடு - தமிழ் நாடு

எந்தப் புலவரும், மற்றொரு புலவரை எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஏசியவரல்லன் - உம்மைப்போல்!

கவிக்குல மேதைகளான ஒட்டக் கூத்தர், புகழேந்திகள் அரசியல் அழுக்காற்றுச் சம்பவங்கள் கூட உம்மைப் போல அற்பமாக அமையவில்லையே!

ஏனென்றால் - அறிவை வணங்கி, வாழ்த்தி, வரவேற்கும் சான்றோர்கள் அவர்கள். நல்லிசைப் புலவர்கள் பலர் - நாடாளும் நாயகர்கள் இடத்திலே மந்திரக் கிழமை பெற்று விளங்கியவர்கள்!

புலமை ஐயங்களுக்குப் புலமையால் போராடுவார்களே தவிர, புன்மைப் பூசலால், சுயநல அழுக்காற்றால், அரசியல் காழ்ப்பால், ஒட்டக்கூத்தர் பெருமானைத் தவிர, வேறு எந்தப் புலவரும் போராடிக் கொண்டதாக புலவருலக வரலாற்றில் இல்லை!

ஊரால், உறுப்பால், தொழிலால், 'ந' எனும் பட்டத்தால் தொன்மையால், வன்மையால், சிறப்பால், மன்னர்களால், வணிகர்களால், வேளாளர்களால், இசை வல்லுநர்களால், கணித மேதைகளால், அன்பால், பண்பால் வாழ்ந்த புலவர்களைக் கொண்டதுதான் புலவருலகம்! புரிந்ததா கவிஞரே!

கவிஞர் கண்ணதாசனாரே, நீர் இந்தப் பட்டியலில் எந்த இடத்தைக் கைப்பற்றி வாழ்ந்து வருகிறீர்? சற்றே சிந்தித்துப் பாருமய்யா?

கேசவனார், நல்லச்சுதனார், கண்ணகனார் போன்ற சங்ககாலப் புலவர்களைப் போல - நீரென்ன இசை இலக்கண நூற்களை எழுதி இசைபட வாழ்கின்றீரா?

மருத்துவன் தாமோதரனார், மருத்துவன் நல்லச்சுதனார், போல ஆயுள் நூல் பயிற்சி பெற்றுள்ளீரா?

கணியன் பூங்குன்றனார், கணி மேதாவியார் போல கணித நூல் புலமை உண்டா உம்மிடம்?

திரு. ஈ.வே.கி. சம்பத் அவர்களுடன் நீரும் சேர்ந்து தமிழ்த் தேசிய கட்சியை ஆரம்பித்தபோது, உமது பணமெலாம் கட்சிக்காகச் செலவான பிறகு, மீண்டும், மீண்டும் கடன் வாங்கிக் கட்சிக்காக செலவு செய்ய வேண்டி இருக்கிறதே என்ற, உமது தலை மயிரை அந்த நேரத்தில் நீரே பிய்த்துக் கொண்டே சங்க கால கவிஞர் உலோச்சனர் போலத் திரிந்தது நீர் அல்லவா?

உலோச்சு என்றால், தனது தலை மயிரைத் தானே பிடுங்கி எறிதல் என்று பொருள்! அது சமணக் கொள்கை! மதத்தின் பெயரால் இந்த இலட்சிய வாழ்வை இறுதிவரை வாழ்ந்து இறந்த பெரும் புலவர் உலோச்சனரா நீர்?

தேசியத்திற்காக, இலட்சியத்திற்காக உமது சிகை ஒன்றைக்கூட இழக்காதவர் தானே - கவிஞரே நீர்?

அரிசில் கிழார், ஆவூர் கிழார், நல்லாவூர் கிழார், நொச்சி நிலையில் கிழார், கோவூர் கிழார் என்ற வேளாளர்கள் வழி வழி வந்த புலவரா நீர்?

காவிரி பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், பண்ட வாணிகன் இளந்தேவனாரைப் போல நீர் என்ன வணிகர் குலம் வழி வழி வந்த புலவர் பெருமானா

பாவை பாடிய சேர மா மன்னன் பெருங்கடுங்கோவா? இல்லையென்றால் கோப்பெருஞ் சோழனா?

ஒல்லையூர் தந்த பூத பாண்டியனா? இல்லை, தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனா? அல்லது ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனா?

இவர்கள் எல்லாம் புலமையால் புகழ் பெற்ற மாமன்னர் களாயிற்றே! அந்த அரசர்கள் வழி வந்த பெரும் புலவர் நீர், என்ற நினைப்பா?

ஏணிச்சேரி முடமோசியாரா? மதுரைக் கணக்காயரா? - அல்லது, அவரது மகன் - நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று முக்கண் பெருமானையே எதிர்த்து அஞ்சாமல் அறிவுப் போராற்றிட்ட பெரும் புலமையாளர் நக்கீரனாரா?

புலவரேறு பெரும் கௌசிகனாரா? கடியலூர் உருத்திரங் கண்ணனாரா? ஞானச் செருக்கேறிய கோதமனாரா? - இல்லை, குறிஞ்சிக் கவி வித்தகராக விளங்கும் கபிலரா? புலமைப் புலி வேம்பத்தூர் குமரனா?

இலக்கண அறிவுக்கும் திறமைக்கும் ஆசானாக நடமாடிய தொல்காப்பியரா? வன்பரணரா? உலகமே இன்று வரை காணா பொருளியலை எழுதித் தந்த, இல்லை இல்லை, வாழ்க்கைக்கே இன்று வரை யாருமே இயற்றாத வாழ்க்கைச் சட்டவியல் மேதையான தமிழ் மறை தந்த திருவள்ளுவர் பெருமானா?

நன்மைகளை மட்டுமே தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆற்றும் நற்பண்பாளர்களான பெரும்புலவோர் நப்பாலத்தனாரா? நத்தத்தனாரா? நக்கண்ணனாரா? இவர்கள் சுமந்த 'ந' பட்டம் போல, நீர் சுமந்த புலமைக்காக கிடைத்த பட்டம் என்னய்யா கவிஞரே!

'கவியரசு' என்ற பட்டம் இல்லையா என்று கழறிடாதே! கவிச் சக்கரவர்த்தி கம்பருடைய ஆவி, அரசவைப் புலமைக் கோலேந்தி உம்மைத் தாக்கும்!

ஏன் தெரியுமா? வெறும் சினிமா பாடல்களை எழுதுபவர்கள் எல்லாம்; என்னை அவமானப் படுத்துகிறார்களே? என்று அந்த ஆவி சாபமும் கொடுக்கும்!

தமிழ்க் கூத்தனார், முது கூத்தனார், கணக்காயனார், தேவ குலத்தார், வண்ணக்கன், இளம் பொன் வாணிகன், பொன்வாணிகன், போன்ற புலவர்களைப் போல, உமக்கென்று, ஏதாவது ஒரு தொழில் தனியாக, சிறப்பாக உண்டா?

சினிமாவும் ஒரு தொழில்தானே என்கிறீரா? ஆனால், இந்த மேதைகள் அவரவர் தொழில்களைச் செய்து கொண்டே தமிழ்த் தொண்டாற்றியவர்கள்! உமக்குண்டா அந்தத் தகுதி?

நாட்டுக் கோட்டைச் செட்டியார் மரபு என்கிறீரா? அந்தத் தொழிலைத்தான் மகா மகா கேவலப்படுத்தி விட்டீரே? நினைவிருக்கிறதா உமக்கு? அல்லது மறந்து விட்டீரா?

ஒரு முறை, உடுமலைப் பேட்டைக் கூட்டம் ஒன்றில் நீர் பேசும் போது, "வட்டிக்கு வட்டி வாங்கும் மட்டிப் பயல்கள் வாழும் செட்டி நாட்டு மண்ணிலே பிறந்தவன் நான்" என்று,

உமது குலத் தொழிலையே நீர் அவமானப்படுத்திப் பேசியவர்தானே?

மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோ கதை இலாகாவில் அப்போது நீர், பாடல் எழுதிக் கொண்டிருந்த காலம் அது! இல்லையா கவிஞரே!

அப்போதே, கலைஞர் கருணாநிதி அவர்கள், "ஏய்யா இப்படி பேசலாமா? உமது முன்னோர் தொழிலையே கேவலப்படுத்தலாமா?" என்று மேடையிலேயே கேட்டாரே அதையும் மறந்திருக்கமாட்டீரே!

நெடுங் கழுத்துப் பரணர், நெட்டிமையார், நரி வெரூஉத் தலையார், பரூஉ மோவாய்ப் பதுமனார், காரிக் கண்ணனார், குண்டு கட் பாரியாதன் என்ற செந்நாப் புலவர்கள், உறுப்பால் பெயர் பெற்றதைப் போல - நீர் குறுங் கழுத்தராகவோ, நெட்டுயரமாகவோ திகழ்வதாக, உமது உருவத்தை வைத்துக் கூறலாமா?

ஆனால், அவர்களைப் போல பெரும் புலமை பெற்று வரைந்த புறநானூற்றுப் பாடல்களைப் போல நீர் எழுதிய தில்லையே - எப்படியய்யா உன்னைப் பாராட்ட?

ஆலங்குடி வங்கனார், ஆலத்தூர் கிழார், ஆவூர் கிழார், கோவூர் கிழார் காரி கிழார், தாமப்பல் கண்ணனார், இடைக் காடனார், கல்லாடனார், இந்தப் புலவர்கள் எல்லாம் - பிறந்த ஊரால் பெருமை பெற்றவர்கள்!

ஆனால், நீர் "வட்டிக்கு வட்டி வாங்கும் மட்டிப் பயல்கள் வாழும் செட்டிநாட்டு மண்ணிலே பிறந்தவன் நான்" என்று, தான் பிறந்த மண்ணே மட்டிப் பயல்கள் மண்தான் என்று அறிவித்து விட்டீரே, கவிஞரே! பிறகு எந்த ஊர் பெயரை வைத்து உம்மை அழைப்பது?

பெருஞ்சித்திரனார் என்ற பெரும் புலவர், மூட மோசியார் என்ற மேதையை, அடைக்குந் தாழ் அற்ற அன்பினால் உளம் நெகிழப் பாடினார் என்பதற்காக, 'மோசி பாடிய வாய்' என்று சமகாலப் புலவர்களால் அன்புருகப் பாராட்டப் பட்டார், அந்த பெருஞ்சித்திரனார் தன்மையரா நீர்!

"வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்" என இளங்கீரனார் என்ற பெரும் புலவர்; புலமை வித்தகராம் கபிலரை வாய் சுரக்கப் பாடினார்!

அந்த அன்பை, புலவர்கள் மீது காட்ட இதயமற்ற நீர், மாறாக, - அழுக்காறு கொண்டு கண்டபடி அவர்களை ஏசுகிறீரே! பேடிகள் என்கிறீரே! மலம் நுகரும் பன்றிகள் - நாய்கள் என்று தரம் தாழ்ந்து வசை பாடி விட்டீரே - புலவர் பெரு மக்களை - நியாயந்தானா?

உனக்கு இரண்டின் மீது மட்டும்தான் அன்பும் - பற்றும் உண்டு! ஒன்று மது! மற்றொன்று மங்கை! உமர்கய்யாம் என்ற நினைப்பு உமக்கு! என்ன! அப்படித்தானே!

உமர்கய்யாம், கவிஞன் மட்டுமல்ல கவிஞரே, கணித மேதை! தத்துவ தாதா! ஆனால், நீரும்தான் அவர் வாரிசு! எவற்றில்? மது - மங்கை இவற்றில்! நான் கூறுவது சரிதானா கவிஞரே!

மேற்கூறிய புலவர்கள் எல்லாம் புகழ்பெற்ற சங்க காலப் பெரும் மேதைமைப் புலவர்கள்!

தமிழ்ச் சமுதாயப் பண்பாடுகளை உலகுக்கு உணர்த்தும் நிலாக் கவிஞர்களாக நடமாடிய அறிவு ஒளியர்கள்!

தமிழ், தலை நிமிர்ந்து வாழ உலகுக்கு தத்துவம் தந்த புலமைச் சிந்தனையாளர்கள்! அறிவு விண்மீன்கள்!

"இந்தத் தமிழ்ப் புலவர்கள் இருக்கிறார்களே, அவர்களைப் போல பேடிகள் இந்த உலகத்தில் இல்லை"

- என்று, இறுமாந்து எழுதியிருக்கிறீர் என்றால், மேற்குறிப்பிட்ட பெரும் புலவர்கள் எழுதிய தத்துவங்களை, பண்பாடுகளை, தமிழ்ச் சான்றாண்மைகளை எல்லாம் அவமானப்படுத்துகிறீர் என்றல்லவா அர்த்தம்? தமிழனா ஐயா நீர்?

ஏனென்றால், சங்க கால மேதை எழுதிய நூற்களையெல்லாம் அப்படியே படித்து - மனத்தில் பதிய வைத்து, ஊருக்கு ஊர் அறிவுரையாற்றி வரும் புலவர் படைகள் அல்லவா இன்று வாழும் புலவர் பெருமக்கள்?

புலவர்கள் தமிழ் மொழியின் வாரிசுகள் ஆயிற்றே! அவர்களைத் தரம் தாழ்த்தி எழுதிய நீரும் தமிழ்க் கவிதானா?

“அழியாத புகழைப் பெற்றவனை, உலகம் - அவனையல்லால், புலவர்களையே புகழ்ந்து பாராட்டாது” - என்று, புலவர் குல திலகம் திருவள்ளுவர் பெருமான், அறிஞர் குல திலகங்களைப் புகழ்ந்து பேசுகின்றாரே, அதனைப் போல ஞானப் புகழ் பூத்தவரா கவிஞரே நீர்?

அத்தகைய தகுதி பெற்றவர் கவிஞர் கண்ணதாசன் என்றால் கூட, ‘மன்னிப்போம் - மறப்போம்’ என்ற அறிஞர் அண்ணா அவர்களின் அடக்கப் பண்பால் இருந்து விடுவோமே!

புலவர் என்றால், அதனுள்ளே உள்ள புதை பொருள் என்ன? அவர்களது மன இலக்கணம் என்ன?

“அனைவரும் அக மகிழுமாறு, அறிவுடையாரை அரவணைத்துப் பழகி, இனி அவரை என்று காண்போம் என நினைத்து, அவரை விட்டுப் பிரிகின்ற தன்மையுடையதே - கற்றவரின் தொழில்! இஃதுதானே புலமையின் ஊழியம்?

“உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்

அனைத்தே புலவர் தொழில்”

இதுதானே, சான்றாண்மை படைத்த புலவர்களது தொழில்! உம்மிடம் உள்ளதா இந்தப் பண்பாடு?

‘பணியுமாம் என்றும் பெருமை’ என்பதற்குப் பகையாகி, ‘தன்னை வியந்து அணியுமாம் சிறுமை’ என்பதற்கேற்ப, உம்மையே நினைந்து நினைந்து நீர் வியக்கின்றீரே, இதுவா அறிவுடைமைக்கு அணி?

‘பொச்சார்பு கொல்லுமே புகழை! அதை மறந்து, சிறுமைதான் பிறரைக் குற்றம் கூறி, கூவிக் கூவி குரல் கொடுக்கும் என்பதற்கு உவமையாக நடமாடுகின்றீரே! இதுதான் உம்து தரமோ - தகுதியோ?

ஆன்மிக ஞான வள்ளுவரான பாம்பன் சுவாமிகள், “கழுகு மலை பாதி - கந்தகிரி பாதி” என்று எழுதிய திருப்பதிகம் போல,

தி.மு.க. பாதி - காங்கிரஸ் பாதி என்று அரசியல் பதிகம் ஏதாவது பாடி நிலை பெற்றவரா திரு. கவிஞர் கண்ணதாசன்?

தனித் தமிழ்த் தந்தை திரு. மறைமலையடிகளாரிடம் தமிழ் கற்ற மாணவ மேதைகளான நாவலர் சோமசுந்தர பாரதியார், திருப்புகழ் மணி டி.எம். கிருஷ்ணசாமி ஐயர், இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார், பேராசிரியர் டி.எஸ். வையாபுரி பிள்ளை, சி.என். முத்துரங்க முதலியார், முன்னாள் முதலமைச்சர் டாக்டர் சுப்பராயன், பெரும்புலவர் இளவழகனார் போல, திரு. கவிஞர் கண்ணதாசனும் ஓரிருவரையாவது தனது புலமையால் புலமை வாரிசுகளை உருவாக்கிக் கொண்டவரா?

சினிமா கவிஞன் என்ற சிற்றின்பம் ஒன்றை அனுபவித்தவரே தவிர, பெரும் புலவர்களைப் பேடி, அலி என்று கண்டபடி ஏசி எழுதிட - என்ன தகுதி பெற்றிருக்கிறார் திரு. கண்ணதாசன்?

"தமிழ், என் வீடு தேடி வந்து என் எதிரே நிற்பதைக் கண்டு கொள்ளாத பாவியாகி விட்டேனே! தங்களையா அலட்சியப் படுத்தினேன்? தமிழையல்லவா அலட்சியப்படுத்தி விட்டேன்?"

- என்று 4,000 விருத்தப் பாக்களால் இரட்சண்ய யாத்ரிகம் என்ற காவியத்தை எழுதிய பெரும்புலவர் எச்.ஏ.கிருஷ்ண பிள்ளை அவர்களைக் கட்டித் தழுவிக் கண்ணீர் விட்ட, புலமை மேதை மாயூரம் வேத நாயகம் பிள்ளை எங்கே? சினிமா கவிஞரான திரு. கண்ணதாசன் எங்கே?

புலமை ஞானி கிருஷ்ணபிள்ளை எழுதிய அந்த நூலை மேலோட்டமாகப் புரட்டிப் பார்த்து, "கம்பரய்யா நீர்-கம்பர்" என்று கை கூப்பி வணங்கிப் பாராட்டிய மேதை மனோன் மணியம் சுந்தரம் பிள்ளை எங்கே? இந்த மயக்கக் கவிஞரான திரு. கண்ணதாசன் எங்கே?

தமிழ் பெருங்கடலாக விளங்கிய யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் பிரான் அவர்களை, பீட்டர் பெர்சிவல் என்ற அவரது பள்ளி உரிமையாளர், ஆங்கில பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்துத் தருமாறு கேட்டுக் கொண்ட போது, பைபிள்

ஆங்கில நடையைப் போலவே தமிழிலும் நாவலர் பெருமான் மொழி பெயர்த்ததை, திரு. பெர்சிவல் பாதிரியார் சென்னையிலே உள்ள மகாவித்வான் திரு. மகாலிங்க ஐயரிடம் சரி பார்க்கக் கொடுத்தார்!

அறிவுச் சுடரான திரு. மகாலிங்கம் ஐயர் மகா வித்வானாக இருந்தும், புலமைப் பொச்சாப்பின்றி, பைபிள் தமிழ் மொழி பெயர்ப்பு நடை, ஆங்கில மூல நூலைவிட மேன்மையாக உள்ளது என்று, நாவலர் பிரானைக் கட்டிப் பிடித்து மெய்சிலிர்த்துப் போற்றிய அந்த மகாலிங்க ஐயர் எங்கே? புலவர்களைப் புண்பட வசை மாரி பெய்து எழுதிய இந்தக் கண்ணதாசன் எங்கே?

அதே ஆறுமுக நாவலர் பிரான், அடக்கமே, அமைதியாகக் கொண்ட அருட்பெருஞ்சோதி வள்ளல் பெருமான் எழுதிய பாடல்கள் அருட்பாக்கள் அல்ல - மருட்பாக்கள் என்று வழக்கு மன்றம் ஏறினார்.

நீதியின் சந்நிதானத்திலே - பார்வையாளர்கள், நீதிபதி, வழக்குரைஞர்கள் எல்லாரும் கூடி அமர்ந்த பின்பு, அறிவின் அம்புலியான, வள்ளலார் சிறிது நேரம் தாமதமாக நீதி தேவன் கேட்டத்துக்குள் நுழைந்தார்.

அவரைக் கண்ட இலக்கிய அறிவு சான்ற அந்த நீதி மன்றமே அப்போது எழுந்து நின்றது, வழக்குத் தொடுத்த நாவலரும் தன்னையுமறியாது தலை நிமிர்ந்து எழுந்து நின்றாரே, அந்தப் பெருந்தன்மை, சான்றாண்மை, மனித நேய மனப்பான்மை, யாரையும் பகையாகக் கருதாப் பண்புடைய பெரும் புலமையாளரான அந்த நாவலர் எங்கே?

புலவர்கள் பேடிகளா? ஆண்களா? பன்றிகளா? நாய்களா? என்று கேள்வி எழுப்பிய இந்த கவிஞர் கண்ணதாசன் எங்கே?

சென்னை மாநகரில், 1968-ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் புலவர் குழு வரவேற்பு - நிகழ்ச்சிகளுக்கு, அப்போதைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா தலைமை வகித்தார்.

பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள், புலவர் குழுவோடு, அறிஞர் அண்ணா அவர்களையும் சேர்த்து வரவேற்றுப் பேசும்போது, ''புலவர் களுக்கு எல்லாம் புலவரான, புலவர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களே!'' என்று 'ஏ'கார ஒலியோடு நிறுத்தினார்.

அருகிருந்த வங்கக் கடலலைகள் அமைதி காக்க ஊமை யாகின! தீவுத் திடலில் கூடியிருந்த மக்கட் கடலலைகள் பேசின! மாநாடு ஒலி பெருக்கிகள் அதை எதிரொலித்தன. தேம்பித் தேம்பித் திணறின மாநாட்டின் கூரையாக வேயப்பட்டிருந்த தென்னங் கீற்றுகள் சில!

அறிஞர் அண்ணா அவர்கள் அந்த மாநாட்டில் தனது அருந்தமிழ் அமுத உரையாற்றும்போது, ''நான் புலவன் அல்லன்! புலவர் பெருமக்களின் நண்பன்'' - என்று அடக்க மாக அறிவித்த அறிவின் பெருந்தன்மை எங்கே? புலவர்களை அலி என்று வாதாடுகின்ற சினிமா கவிஞர் திரு. கண்ணதாசன் அவர்களின் சிறுந்தன்மை எங்கே?

''தமிழ் வளர்க்கும் புலவர்களை - தமிழ்மொழியைத் தாழ்வாக நினைப்பவர்களை, அவ்வாறு உரைப்பவர்களை, எழுதுபவர்களை - நான் எனது முதல் பகைவர்களாகவே கருதுவேன்''

- என்று வீர முழக்கமிட்ட கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையின் ரத்தம் ஓடுபவன் யான்! அவரது வாரிசய்யா கவிஞரே!

அதனால்தான், புலமை ஞானத்திற்காகப் போராடுகின்றேன் அவர்களது அறிவு மானத்தைக் காத்திட !

புலவர் நெஞ்சம் புகழ் பூக்கும்போது, புத்துணர்ச்சி மலரும் இலக்கியம் ஒன்று நாட்டிலே பூக்கும் - மணக்கும்! அதே நெஞ்சு புண்படும் போது, கண்ணதாசனாரே - நீர் என்ன செய்வீர்? புன்னாகவராளி பாடுவீரா?

புலமையும் திறமையும் புகுந்த போட்டி ஒன்றிலே, பெரும் புலவர் மகாவித்வான் தியாகராச செட்டியாரும், இராமநாதபுரம்

சேதுபதி பரம்பரையிலே வந்த பொன்னுசாமி தேவரும் நடத்திய வாதங்களிலே, 'தண்ணீரும் காவிரியே, தார் வேந்தனும் சோழனே, மண்ணாவதும் பாண்டி மண்டலமே' என்ற ஔவையின் 'ஏ' காரம் பட்ட பாடு புரியுமா உமக்கு? அந்த புலமை ஏது உனக்கு? இருந்தால், புலவர்களை அழைத்து புத்துரையல்லவா கேட்டுப் புகழ்ந்திருப்பீர்? ஏசுவீரா?

''பண்டைத் தமிழர் நாகரீகம்'' என்ற சொல்லாடலைப் பெரும்புலவர் கார் மேகக் கோனார், கோயில்பட்டி சான்றோர் தமிழ் இலக்கிய அவைகளிலே பேசி அற்புதங்களை நாட்டிய மாமனிதர். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள், ஆளுயர மாலையை கோனாருக்குச் சூட்டி, ஆரத்தழுவிக் கொண்ட அந்த இரு பெரும் புலமை உள்ளங்கள் பேடிமைகளா - கண்ணதாசனாரே?

ஏனய்யா! கண்ணதாசன் என்ற பெருமகனாரே! செட்டி நாட்டுக் கவிஞர் தானேய்யா நீர்? 'பஞ்சகம்' சிந்நயச் செட்டியார் என்று ஒருவர் இருந்தாரே - தெரியுமா? அல்லது கேள்வியாவது பட்டதுண்டா?

பஞ்சகம் என்றால் பழனி பஞ்சாமிர்தம் என்று நினைத்துக் கொள்வீரோ என்னவோ? அல்லது பழைய பஞ்சாங்கம் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது என்பது எனது தாழ்மையான வேண்டுகோள் - என்ன கவிஞரே!

தமிழிலே உள்ள ஐம்பெரும் காப்பியங்களை போல, பஞ்சகம் என்பதும் சைவ சித்தாந்தங்களை ஆராயும் அற்புதத் தத்துவங்களைக் கொண்ட ஐம்பெரும் காப்பியங்கள்!

''மதுரை மீனாட்சியம்மை பதிகம், சிலம்பை பதிற்றுப் பத்தந்தாதி, அருணைச் சிலேடை வெண்பா மாலை, தேவை திரி யந்தாதி, மயில்மலை பிள்ளைத் தமிழ்'' என்ற ஐம்பெரும் சைவ சித்தாந்தக் காப்பியங்களை இயற்றியவர்தான், அந்த பெரும்புலவர் திரு. சிந்நயச் செட்டியார் அவர்கள்!

அந்த சைவ தத்துவ நூற்களை எழுதியவரும், செட்டி நாட்டு மண்ணீன்ற செந்தமிழ்ச் செல்வர்தான். அவரை என்னவென்று

அழைக்கலாம் உமது அகராதிப்படி - மட்டிப் பயலா அல்லது பேடிப் பயலா? கொஞ்சம் யோசித்துக் கூறுமே ஐயா - காரை முத்தையா அவர்களே!

பண்டிதமணி கதிரேசச் செட்டியார் பெரும்புலவர்! தமிழ் - சமஸ்கிருத மொழிகளிலே வித்தகர்! செட்டிநாடு ஈன்றெடுத்த செந்தமிழ்ச் செம்மல்! தமிழ்க் கடல் மறைமலையடிகளாரை வழக்கு மன்றத்தில் சந்தித்தவர். இவரை என்ன பெயரிட்டு அழைக்கலாம் - பேடி என்றா? மட்டி என்றா?

புலமையுடைய எவரும் புலவர்தானே!

இதிலென்ன இறந்தவர் - இருப்போர் என்ற வேறுபாடு! புலமையுடைய - புலவர் என்ற பெயருடைய - அனைவரையும்தானே, "இந்தப் புலவர் இருக்கின்றார்களே, அவர்களைவிட பேடிகள் இந்த உலகத்தில் இல்லை" என்றீர்?

ஒருவன், தான் வருந்துவதற்கு மனசாட்சி - பண்பு என்ற இரண்டும் தேவை! அவை உம்மிடம் இருந்திருந்தால் புலவர்களைப் போய் பேடி என்று எழுதுவீரா?

இதைத்தான், சிக்மென்ட் ஃப்ராய்டு என்ற மனோ தத்துவ ஞானி குறிப்பிடுகையில், 'ட்டு ஃபீல், மேன் நீட்ஸ் கல்ச்சர் அண்டு கான்சியஸ்னஸ்" என்றார்!

இந்த இரண்டுமே உமக்கு இல்லை - மனமும் இல்லை - அதற்கு சாட்சியுமில்லை - பண்பும் இல்லையே!

வருத்தம் உமக்கு வந்ததாகச் சொன்னால், எவன் நம்புவான்? நான் நம்ப மாட்டேன்! உன் மனமே பிள்ளை மனம்தானே! ஆபத்து வந்தால் அழுவீர்! ஆனந்தம் சுரந்தால் சிரிப்பீர்! வேறு என்ன நீர்?

தமிழ்ப் புலவர்களை - அவர்கள் யாராக இருந்தாலும் சரி எக்கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களை பேடி என்று பச்சையாக்வே எழுதி விட்டீரே!

உமக்கு எந்தத் தமிழ்ப் புலவர் இலக்கணம் - இலக்கியம் கற்றுக் கொடுத்தாரோ, அந்த இலக்கியத் தெய்வக் குலத்தையே

பேடி, அலி, நாய், பன்றி என்று கூற உமக்கு எப்படி ஐயா மனம் வந்தது?

மனம் ஒரு குரங்கடா - குரங்கு என்கிறீரா? அதற்காக வெட்கப்படுகின்றேன் - வேதனைப்படுகின்றேன்! போம்!

இந்தி மொழி தேசிய மடியிலே புரள்வதால் வந்த கோளாரா இது? நீர் தமிழ்க் குலம்தானா? அல்லது தேசியம் ஈன்றெடுத்த பாரதமாதா மகனா?

தமிழ் இலக்கியங்களால் உமது மூளையை வளர்த்துக் கொண்டதின் விளைவா இது?

அறிஞர் அண்ணா அவர்களது ஆட்சியைத் தமிழ்ப் புலவர்கள் ஆதரிக்கிறார்கள்! போற்றுகிறார்கள்!

அந்த அழுக்காற்றால், தமிழ்ப் புலவர்கள் குலத்தையே பேடிக் கூட்டம் என்கிறீரே - இது நியாயமா?

தமிழ்ப் புலவர்களை ஒட்டு மொத்தமாக நீர் குறிப்பிடும் போது, தமிழனல்லாத ஒரு பிறவி நம்மை ஆணவமாக எழுதுகிறது என்று, உம்மை அந்தப் புலவர் குழாம் எண்ணி புண்பட்டிருக்காதா என்ன?

"மாமியார் வீட்டுக்குத் தண்ணீர் கொண்டு போகும் குரங்குகள்" என்று புலவர்களை ஏசி எழுதியிருக்கிறீர்!

சொந்த வீட்டிற்குத் தண்ணீர் கொண்டு போவதில் தவறு ஒன்றும் இல்லை - கவிஞரே! அதை முதலில் புரிந்து கொள்ளும்!

ஆனால், "சினிமா உலகில் கந்தல் கசக்கிக் கொடுக்கும்" உம் போன்ற ஒரு சினிமா கவிஞன் புத்தி, தமிழ்ப் புலவர்களிடம் இல்லையே - என்ன செய்ய?

அதற்காகவாவது, நீர் அவர்களுக்கு நன்றி கூற வேண்டாமோ? தன்மானிகள் என்று!

சினிமா கவிஞராக நீர் ஆகி விட்டதாலே, "கருப்புப் பணம்" என்று படம் எடுக்குமளவுக்கு வளர்ந்து விட்டதாலேயே, வறுமையால் வாடும் புலவர் திருக் கூட்டத்தை ஏசுகின்றீரே - நீர்

வணங்கும் பிள்ளையார்பட்டி பிள்ளையாரப்பன் உம்மை மன்னிப்பாரா?

“இறுதியாக, “என்ன செய்வது, கடவுள் புலவனுக்கு மூளையை மட்டுமா வைத்தான்? வயிற்றையும் வைத்திருக் கிறானே!” என்று எழுதுகிறீரே...!”

என்னய்யா இது இளக்காரம்! மூளையைப் புலவனுக்கு மாத்திரமா வைத்திருக்கிறான் இறைவன்?

வயிறு நிரப்ப எக்ஸ்ட்ராக்கள் பின்னாலே சுற்றும் சினிமா கவிஞர்களுக்குக் கூடத்தான் இறைவன் வைத்திருக்கிறான் - மூளையை!

புலவனுக்கு மட்டுமா இறைவன் வயிற்றை வைத்திருக்கிறான்?

வயிற்றுச் சோற்றுக்காகக் கட்சி மாறிடும் கயவர்களுக்குக் கூடத்தான் இறைவன் வயிற்றை வைத்திருக்கின்றான்!

புதிதாக ஆரம்பித்த பத்திரிகைக்கு எந்த ஏஜெண்டாவது ஏமாந்து முந்திரிக் கொட்டையைப் போல பணம் அனுப்ப மாட்டானா?

அதைக் கொண்டு மனைவிகளுக்கும் - பிள்ளைகளுக்கும் - வேலையாட்களுக்கும் இட்லி சாம்பாராவது வாங்கித் தரலாமா என்று வானத்தைப் பார்த்துக் கற்பனை செய்து கொண்டிருந்த சினிமா கவிஞர்களுக்கும்தான் வயிற்றை வைத்துவிட்டான் இறைவன்.

அட இறைவா!

ஒரு பாட்டுக்கு சான்ஸ் கிடைக்காதா என்று கையேந்திக் கும்பிட்டுக் கும்பிட்டு; சினிமா ஸ்டுடியோ படிக்கட்டுகளை ஏறி ஏறி இறங்கியவனுக்கெல்லாம் ஏணடா படைத்தாய் வயிற்றை! ஏண்டா வைத்தாய் வயிற்றை?

திரும்பிப் பார் கவிஞரே! உனது பசிப் பிணி பிடித்திருந்த வயிற்றின் பழைய வடுக்களை! எப்படியெல்லாம் திண்டாடினீர் அந்த கும்பிக்குரிய தீனிக்காக, என்று, இறைவன் இருந்தால் கேட்டே தீருவான் உம்மை!

- எவ்வளவு அகம்பாவம்! எழுதுகோல் ஆணவம் இருந் திருந்தால், தமிழ்ப் புலவர்களை இப்படி தரம் கெட்டு எழுதி யிருப்பார் கவிஞர் கண்ணதாசன்?

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் வீட்டில் காவல் கிடந்த காட்சியெல்லாம் காணாமல் போய்விட்டதே என்ற தைரியமா உமக்கு?

''அறிவுப் பிச்சை தா. அறிவுப் பிச்சை தா'' என்று அல்லும் பகலும் கையேந்திக் கிடந்த அறியாமை எது?

தமிழகம் அறியும் இதை! ஆனாலும், தடித்துப் போன மூளையும் - உடலும் மறைக்கின்றதே அதை!

காலமே - பணம் வந்து விட்டால் பழைய கதைகளை எல்லாம் பார்க்கக் கூடாதென உன் கண்களை இறுக மூடிக் கொள்வாயா?

கவிஞரே, புலவர்களைப் பேடி என்று கூற, உம் 'நா'வோ, எழுதுகோலோ, மீண்டும் துள்ளிக் குதிக்குமானால், அதை அந்த இடத்திலேயே சிந்தனைக் கத்தியால் நறுக்கப்படும் - தமிழ் அறிஞர்களால்! ஜாக்கிரதை!

அந்த அச்சத்தால், 'பேடி' என்றும், 'ஆணா' என்றும், 'பெண்ணா' என்றும் 'இரண்டுக்கும் பொதுவா' என்றும் தமிழ்ப் புலவர்களைக் கேட்டுவிட்டீர்! ஐயங்கள் உம்மையே குழப்பி விட்டனவோ?

கோப்பைக் கவிஞரே, குறள் படித்தவரா நீர்? குறளுக்கு அர்த்தம் தெரிந்தால் மட்டும் போதுமா? நடைமுறையில் அதன் ஒழுக்கத்தை நிலை நாட்ட வேண்டாமா?

''தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு''

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று' - அல்லவா?

அழுக்காறு வெறியில் எதையும் எழுதலாம்! பேசலாம்! என்ற நிலைமைக்குக் கவிஞர் வருவாரானால், உமது வெறி

தெளிகிறவரை எனது வரி எழுத்துக்கள் சுடருதறி எகிறிக் குதிக்கும்!

கவிஞரது மானத்தின் ஆணி வேரில், சுடுநீரைக் கொட்டியே தீரும். உமது மண்டை ஓட்டுக்குள்ளே சிறையிருக்கும் சிந்தனைச் சுரப்பி, சிதறி ஓடுமளவிற்குத் தாக்கித் துரத்தும் - விரட்டும்!

நீரும் நானும் சேற்றை வாரிப் பூசிக் கொள்ள வேண்டுமா? தயாரா - தமிழ்ப் புலமைக்காக?

நான் தயார்! ஏனென்றால், புலவர்கள் எனக்கு ஆசான்கள்! எனது பெருமைக்கு ஏணிகள்! அவர்கள் யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியிலே இருந்தாலும் சரி.

மலத்திலே நீர் கையை வைத்தால், எனது கரம் அதற்கும் ரெடி! தயார்!

மாணிக்கப் பரல்களைக் கோர்த்தெடுத்து, எனக்கு மாலை யாக்கவும் தெரியும், மலத்திலே கையைவிட்டு, உமக்கு மாலை போடவும் தெரியும் - ஜாக்கிரதை!

உமது கட்சி வெறி ஆணவம், பழையபடி புலவர் பக்கம் தலைநீட்டுமானால், ஒருமுறை நீரே ''தென்றலில்'' எழுதினீர் அல்லவா? பாவேந்தரை, ''பாதக் குறடெடுத்துப் பன்னூறு அடி அடிப்போம்'' என்று, அந்த அடி உம் மீதே விழ வேண்டுமா?

உனது வாதத்தின் தலை, சேதம் உறைகின்ற வரை தொடர்ந்து எனது எழுதுகோல் எழுதிக் கொண்டே எரியும்!

யாரைப் பார்த்து சிறிதும் அச்சமில்லாமல், 'பேடி' என்றீர்? குரங்கு என்று குறும்பாடுகின்றீர்?

கோடைக் காலத்திலே பிடிக்க வேண்டிய பைத்தியம், வேனிற் காலத்திலேயே உமக்குப் பிடித்தால், அந்தப் பித்தம் தெளிய எலுமிச்சம் பழம் வராது - எரியீட்டிதான் துள்ளித் துள்ளிப் பாய்ந்து வரும்!

புலவர்களைப் போய், நீர் பேடி என்றால் - அலி என்றால் - குரங்கு என்றால் - நாய்கள் என்றால், - நாடி இருப்பவன் என்ன செய்வான்? வேடிக்கையா பார்ப்பான்?

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டியா? உமக்கு இளைத்தவர்கள் புலவர் பெருமக்களா? வேறு எவரும் கிடைக்கவில்லையா? கிடைத்தால் உம் கதி என்ன என்ற பயமா?

முத்தனாய் - முருகனாய் - முருகப்பனாய் ஆகும் நிலைக்கு நீர் முற்றி விட்டீரா முத்தையா கவிஞரே! வேண்டாம், தமிழ் படித்தத் தன்மானிகளைத் தாறுமாறாகத் தரம் கெட்டு ஏசாதீர்!

விவரம் தெரியாத மக்களிடத்திலே விவேகமான வார்த்தை களைப் போட்டு, நானும் கவிஞன்தான் என்று விளம்பரப் படுத்திக் கொள்கின்ற உமது கவிஞன் புத்தியை - புலவர் களிடத்திலே காட்டாதீர்!

இருள் தவழுமுன் புன்மை மதியைப் புறமுதுகிட வைக்கும் அறிவு வைரங்கள் அவர்கள்!

டாக்டர். மு. வரதராசனார் அவர்கள் எழுதிய நூற்கள் இன்றைய இலக்கிய உலகின் விண்மீன்கள்! - அவர் திரு.வி.க.வின் இலக்கிய வாரிசு!

சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்கள் எழுதிய தேசிய - ஆன்மிக - இலக்கிய - தமிழ் வரலாற்று நூற்கள், சிந்தனைக்குச் சுவையாக அமைந்திருப்பன!

இலக்கிய உலகம், இந்த இரு பெரும் புலமை மேதை களையும், பிற புலவர் குழு பெரு மக்களையும் கையெடுத்துக் கும்பிடுகின்றது - காரணம், அவர்களது ஒவ்வொரு கோணம் அறிவுடைமை ஆய்வுக்காக!

எச்சில் கோப்பையிலே இரவுப்பசியை தீர்த்துக் கொள்கின்ற கவிஞரே, நீர் இன்றுவரை என்ன எழுதிக் குவித்து வீட்டீர்? இரண்டொரு நூற்களைத் தவிர! உம்முடைய தனித் தகுதியைச் சுட்டும் சிறப்பு நூல்கள் எவை, எவை?

அவற்றில் படித்து இன்புற வேண்டிய நூல் எது? அது, உனது சினிமா பாட்டுத் தொகுப்புகள் என்றால், அது கோலியாடும் பையனுக்குத் தேவைப்படலாம்! தமிழுணர்ந்த மேதைகளுக்குத் தேவையா?

அந்த உமது சில பாடல்கள் கூட, திரு. எம்.எஸ். விசுவ நாதன் இசையமைப்புத் திறமையால் கேட்கலாம். வியக்கலாம்! பாராட்டலாம்!

சில உம்மையும் அறியாமல் விழுந்த முத்துக்கள் - தவிட்டுக் குவியலிலே பளபளக்கும் ஓர் அரிசியைப் போல!

எனவே, அறிவாளிகளுக்கு அவை ஏன்? ஞானத் தினவுக்கு அவற்றால் இதமான இன்பம் கிடைக்குமா?

கவிஞர் கண்ணதாசன் அன்றுவரை, 31.1.68 வரை எழுதிய நூல்கள் எத்தனை? மயக்கத்தில் மாறிய கட்சிகள் எத்தனை?

காப்பியடித்து நீர் எழுதிய கவிதைக் குவியல்கள் உண்டா? அப்படியானால் எவ்வளவு? எதெது? உம்முடைய ஒழுக்கத்தின் யோக்யதை? - அதன் திறவுகோல் என்ன?

பிறருக்கு, அதுவும் புலமைக்குப் புத்தி புகட்டும் அளவிற்கு நீர் என்ன புனிதரா? புத்தரா? இல்லை, சித்தரா? நீர் அப்படி என்ன அறிவின் பிறப்பிடம்?

அரசியலுக்கும் - உமக்கும் உள்ள ஒட்டு உறவு எப்படிப் பட்டது? படித்தவர்களை மதிக்கும் பண்பாடு உமக்கு உண்டா? அது என்று, நேற்றா, இன்றா, நாளையா?

பாவேந்தர் பாரதிதாசனாரை, பதை பதைக்கச் சாடிய பாவியினும் பாவியல்லவா நீர்?

“தாலி தமிழர் பண்பாடா” என்ற எழுந்த அரசியல் வஞ்சத் தால், ம.பொ.சி., செங்கோல்” வார ஏடும், உமது “தென்றல் வார ஏடும் மோதிய மோதல்கள் என்ன கொஞ்சமா - நஞ்சமா?

காந்தியின் வாரிசாகத் திகழும் காமராஜரை நீர் சாடிய சாடல்கள் என்ன - சாதாரணமான ஃபோம் பஞ்சு - மஞ்சமா? மெத்து மெத்தென்று அவர் உருள!

காமராஜர் தோல் காண்டா மிருகம் தோல் என்று கொஞ்சமும் கூசாமல் எழுதிய கைகள் அல்லவா உமது பாபக் கரங்கள்?

''காமராஜரே, 'அ'ணாவிற்குப் பிறகு 'ஆ'வன்னாதானா? சந்தேக மில்லாமல் தெரியுமா? சத்தியமாகச் சொல்வீரா?'' என்று அவருடைய கல்வியைச் சாடிய கவிஞரும் நீர்தானே கண்ணதாசரே!

பாரதப்பிரதமர் நேருவைக் காரசாரமாக அரசியல் காழ்ப்பால் தாக்கி, நேரடி ஏசல் நடத்துபவரைப் போலக் கவிதை வரைந்து, உமது தென்றல் மலரில் வெளியிட்டவரல்லவா? அப்போது நீர் தி.மு.க.!

அறிஞர் அண்ணா அவர்கள், உம்மிடம் கூறிய அறிவுரை, கண்டனம் தாளாமல், மலரை வெளியிடும் முன்பே, அந்த நேரு கவிதையோவியத்தை பக்கம் பக்கமாகக் நீர் கிழித் தெறிந்தவரல்லவா?

மூத்த அறிவுடையாரை மதித்தவரா நீர்? ஏனய்யா உம்மிடம் அந்தப் பண்பு இல்லை? இப்போது, புலவர்களையே ஏசுகின்றீரே, ஏன்?

எடுத்தேன் - கவிழ்த்தேன் - என்று பேசிட எழுதிட - உமக்கு மட்டும்தான் தெரியும் என்ற நோஞ்சான் மூளையின் மமதையா உமக்கு?

'உமது தினவுகளை எரியீட்டி' தாக்க ஆரம்பித்தால், உமது இலக்கிய ரத்தம் சுண்டிவிடும்! தசை சுருங்கிவிடும்! அறியாமை என்ற உமது எலும்பு அடுத்த பக்கம் ஓடி வந்து விடும் - ஜாக்கிரதை!

சான்றோர்களை மதிக்காதவர் - அவர்களை ஏசாமலாவது இருக்க வேண்டும்! இதுதானே நடுநிலை!

ஏறுக்கு மாறாக, பொறாமை போகும் போக்குக்கு ஏற்ப, வசை வண்ணம் தீட்டி எழுதினால், எழுத்துக்கு எழுத்து, பேச்சுக்குப் பேச்சு, திராவக எழுத்துக்களோடு எழுவோம்! புரிந்தீரா காரை முத்தையா?

தமிழ் வளர்க்கும் புலவர் பெரு மக்களைப் பேடி, குரங்கு, நாய், பன்றி, என்று எழுதுபவரே - ஆட்சி உமதுபக்கம் இருக்கிறது என்ற அகம்பாவத்தாலா எழுதுகிறீர் அப்படி?

'போனால் போகட்டும் போடா' என்ற உமது பாடலுக் கேற்ப, உமது எழுத்து அம்போ என்று முக்காடு போட்டுக் கொண்டு ஓடுமளவிற்கு, எமது எதிர்ப்புக் கட்டுரை எதிரொலிக்கும் ஜாக்கிரதை!

கவிஞரே!

கண்ணதாசனாரே! நாக்கு ஒரு நெருப்பு! அது உம்மை மட்டும் சுடாது! பிறரையும் சுட்டே தள்ளும்! சுட்ட வடு சுடுகாடு போனாலும் மாறாது! ஆறாது! நினைவிருக்கட்டும்!

மனசாட்சி இருக்கின்ற மகத்தான சக்தி மனித ஜீவனுக்குள்ள ஆதாரமாகும்!

வெளவெளத்துப் போன வாழ்க்கையில் திசை தெரியாமல் தப்புகின்ற எந்த உயிரும் - தன்னை உருவாக்கிய தமிழ்ப் பண்புக்கு வணக்கம் செலுத்த வேண்டும்!

தமிழகத்தில் பிறந்த எந்தப் பிறவியாக இருந்தாலும் சரி, அதற்கும் தன்மானம் உண்டு. ஏனென்றால், இந்த நிலத்தின் மாண்பு இப்படி!

''நல்லோர் நெஞ்சத்தை நோக வைத்தேனோ'' என்றார் வள்ளல் பெருமானார்!

இது தன்னையே நொந்து பாடும் - தன்நிலை அறிந்த தத்துவம்! ஆனால், மிக நன்றாகப் பிறரை நோகடிக்கிறீர் நீர்! அந்தத் துறையிலே மகா வல்லுநர், முதற் பரிசு பெறக் கூடியவர்.

''காலம் போகும் - வார்த்தை நிற்கும்''

கல்லறை போகின்ற நேரத்தில், உமக்காகக் கண் கலங்கு பவர்களை, தமிழ்நாட்டில் சேர்த்துக் கொள்ளும் கவிஞரே!

இனியாவது திருந்தி இதுபோன்ற சிற்றின்ப நெறியிலே இயங்காதீரய்யா!

சூடான அரசியல் உணர்ச்சிக்கு ஆட்பட்டு, மற்றவருடைய சுய மரியாதைகளில் கை வைக்கக் கூடாது. அதைப் பரிதாபமாக, அடிக்கடி ஆற்றுகின்றீரே!

தமிழ்ப் புலவர்களை நீர் கண்டபடி ஏசியதால், எனது எழுது கோலின் மனம் தாளவில்லை. அதனால் உமக்கு சூடாக எழுதும்போது, உம்மைச் சுட்டிக் காட்டும் நிலை ஏற்பட்டு விட்டது - வருந்தற்க! இதுவும் ஒரு எழுதுகளம் போர்முறை தானே!

கற்றதின் அடையாளம், களங்கமற்ற ஒரு சின்னத்தை நாட்டுக்குக் காட்ட வேண்டும். அதுதான் தமிழ் மண்ணின் பரம்பரை, பிறப்பின் அழகு - இலட்சணம்!

அடக்கத்தின் மீது கட்டப்பட்டவனின் வாழ்க்கை, எதிர் காலத்தில் - உலகிற்கே ஆதார சுருதியாக மாறுகின்றது. இதற்கு சான்றாக எண்ணற்றோர் வாழ்ந்த மண் - இந்தத் தமிழ் மண்!

காண்பவரை ஈர்க்கும் மலராக மனிதன் மாற வேண்டும்.

தண்ணீரை அள்ளிக் குடித்து விடுவதினாலேயே, கடலை வென்று விட்டேன் என்ற மமதை வாதம் யாருக்கும் தலையாட்டம் போடக் கூடாது.

உணவுக்கு உறுதுணையாக இருக்கும் நெருப்பை - மேலும் உக்கிரப்படுத்தி எரியவிடக் கூடாது. அது ஆபத்து! உமக்கு மட்டுமல்ல ஊருக்கே!

அறிவில்லாதவன் என்று எனது எதிரியைக் கூட மறந்தும் சொல்ல மாட்டேன். தன் வலியும் புரிபவன் - மாற்றார் வலியையும் நான் அறிந்தே எழுதுபவன்!

அறியாமை என்றால், அதனை வெளிப்படையாகவே நான் முரசு கொட்டி அவனிக்கு அடையாளம் காட்டுபவன்!

தமிழ்ப் புலவர்களை பேடி என்றும், குரங்கு என்றும் ஆணா? பெண்ணா? இரண்டுக்கும் பொதுவா? பன்றியா? நாயா? என்றெல்லாம் எழுதிய கவியே, புலவர்கள் நாட்டின் ஞான ஒளிகள்! அவர்களை அவமதிக்கும் நாடு அறியாமை சுடுகாடு! அவ்வளவுதான்!

தமிழ் படித்தவர்கள் புலவர்கள்! அவர்கள் உடலிலே ஓடுவதெல்லாம் தமிழ் உணர்வுகளே - பண்பாடுகளே! பழக்க வழக்கங்களே!

'பசு' ஒன்று, தான் பருகிய நீரை எல்லாம் எவ்வாறு பாலாக மாற்றி, பாரை வாழ்விக்கின்றதோ, அதே போல தமிழ் படித்த புலவர்களின் புலமையெல்லாம் தமிழ்ப் பரன்பரைக்கு குருதி ஓட்டமாக அமைந்து விட்டது.

அதனால்தான், "தமிழோடு விளையாடாதீர்" என்று உம்மை மட்டுமல்ல, உம் போன்றுள்ள வேறு சிலரையும் சேர்த்தே எச்சரிக்கின்றேன்!

தப்பாக விளையாடினால், தமிழரது எழுதுகோல் செந் நெருப்பையே கொட்டும்! இருவர் மூளைகளும் மாறிவிடும் செங்களங்களாக! வீணான விளைவுகளை விரும்பாதீர்!

தப்பாக என்று ஏன் எழுதினேன் என்று புரிகிறதா கவிஞரே உமக்கு?

தவறு என்றால், அறியாமையால் செய்தது. மன்னிக்கலாம் அதை - மனிதாபிமானத்துடன்!

தப்பு என்றால், அறிந்தே மீண்டும் மீண்டும் செய்வது! அதற்கு மனிதமும் இருக்காது! அபிமானமும் தலைகாட்டாது! இல்லையா? சிந்தித்து செயல்படும் கவிஞர் பெருமக்களே!

✤ ✤ ✤